[illegible]
ஒக்டோபர் – 1985

JL
V211m N85
N85.2
15357

# தமிழரசு

16-12-1985 75 காசு






முதல் அட்டைச் செய்தி



# கடற்படை நல நிதி: திரைப்பட விழா

இந்தியா முழுவதும் 'கடற்படை தினம்' கொண்டாடப்பட்டு வருகிறது. இதனையொட்டி கடற்படை நல நிதிக்காக திரைப்பட விழா 8.12.85 அன்று சென்னையில் கலைவாணர் அரங்கில் நடந்தது.

சென்னையில் முதன்முதலில் நடைபெறும் இந்தத் திரைப்பட விழாவினை மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் தொடங்கி வைத்தார். விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்களின் துணைவியார் திருமதி ஜானகி அம்மையார் அவர்களும் கலந்து கொண்டார்.

பிறகு, அங்கு திரையிடப்பட்ட அண்மையில் ஏற்பட்ட வெள்ளச்சேதம் பற்றிய திரைப்பட்த்தையும், 'காவல்காரன்' திரைப்படத்தையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பார்த்தார். விழாத் தொடக்கத்தில், தமிழ்நாடு கடற்படை தலைமை அலுவலர் கமோடர் (வீரச்சக்ரா) திரு எஸ். ராம்சாகர் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

"கடற்படை நல நிதிக்காக சென்னையில் முதன்முதலாக திரைப் பட விழாவை நடத்துகிறோம்.

"இராமேசுவரம், மண்டபம் பகுதியில் உள்ள மீனவர்கள் நமது கடல் எல்லைக்குள் மீன் பிடிக்கச் செல்லும்போது, இலங்கை கடற்படையினரின் தாக்குதலுக்கு ஆளாகாமலும் அவர்களைக் கைது செய்து விடாமலும் பாதுகாக்க கடற்படை கப்பல் ரோந்து சுற்றி வருகிறது. இவை மட்டும் அல்லாமல் வெள்ளம் ஏற்படும்போது நிவாரண வேலைகளையும் கடற்படையினர் செய்கின்றனர்.

"கடல் பகுதியில் எங்களது சேவை இருப்பதால் பொதுமக்களுக்கு நாங்கள் ஆற்றும் பணி பற்றித் தெரிய வாய்ப்பில்லை. இதுபோன்ற விழாவின் மூலமாகத்தான் அதை எடுத்துச் சொல்ல வேண்டி இருக்கிறது."

திரைப்பட விழா தொடர்ந்து 13ந் தேதி வரை நடந்தது.

கடற்படை தினத்தை முன்னிட்டு சென்னை மெரினாக் கடற்கரையில் அன்று மாலை கடற்படையினரின் வீர சாகச விளையாட்டுகள் நடந்தன. கடலில் விழுந்தவர்களைக் கடற்படையினர் ஹெலிகாப்டரில் தாழ்வாகப் பறந்து காப்பாற்றுவதை விளக்கிக் காட்டினார்கள். இரண்டு கடற்படைக் கப்பல்கள் மெரீனா கடற்கரையில் இருந்து கலங்கரை விளக்கம் வரை அணி வகுத்துச் சென்றன. இரவில் அந்தக் கப்பல்கள் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுக் காட்சி அளித்தன.

தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2016
குரோதன - மார்கழி 1
மலர் : 16 இதழ் : 12
16-12-1985

Verified





மெரீனா கடற்கரையில்

# அண்ணா நூலகம்



மகாகவி பாரதியார் பிறந்த நாளையொட்டி சென்னை மெரினா கடற்கரையில் அமைந்துள்ள பாரதியார் திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களும், அமைச்சர் பெருமக்களும் 11.12.85 அன்று காலையில் மாலை அணிவித்தார்கள்.

அடுத்து-அண்ணா சதுக்கத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பேரறிஞர் அண்ணா நூலகத்தினையும், நூல் விற்பனை நிலையத்தையும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் திறந்து வைத்தார். நூல் நிலையத்தைப் பார்வையிட்டார். நூல் விற்பனை நிலையத்திற்குச் சென்று அறிஞர் அண்ணாவின் நூல்களை ரூ. 2000/-க்கு வாங்கி புத்தக விற்பனையைத் தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன், மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன், மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு க. இராசாராம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு எச். வி. ஹண்டே, மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம், மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு வி. சுவாமிநாதன், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன், மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு பி, எச். பாண்டியன், மாண்புமிகு சட்டமேலவைத் துணைத் தலைவர் திரு வி. வி. சுவாமிநாதன், தலைமைச் செயலாளர் திரு டி. வி. அந்தோணி, இ.ஆ.ப. மற்றும் அரசு அலுவலர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள், வாரியத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.



இந்நூலகம் இரண்டு பிரிவுகளாக ரூ. 86,000 செலவில் அமைக்கப்பட்டுள்ளது. ஒரு பிரிவில் பேரறிஞர் அண்ணாவின் நூல்கள் எல்லாரும் படித்துப் பயன் பெறத் தக்க வகையில் அமைக்கப்பட்டுள்ளன. உட்கார்ந்து படிக்க இருக்கை வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. மற்றொரு பிரிவில், பேரறிஞர் அண்ணாவின் நூல்கள், அண்ணாவைப் பற்றிப் பிறர் எழுதிய நூற்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

பேரறிஞர் அண்ணாவின் நூல்களை அண்ணா சதுக்கத்திற்கு வரும் பொது மக்கள், சுற்றுலாப் பயணிகள் எளிதில் வாங்கிச் செல்ல அரசு தக்க ஏற்பாடு செய்துள்ளது.

அ. மருது

## அண்ணா நூலகத்தில்...

இன்ப ஒளி
கண்ணாயிரத்தின் உலகம்
கோமளத்தின் கோபம்
கபோதிபுரக் காதல்
அண்ணாவின் கவிதைகள்
ஏ, தாழ்ந்த தமிழகமே
தமிழரின் மறுமலர்ச்சி
தீ பரவட்டும்
கம்பரசம்
முத்துக்குவியல்
சொர்க்கவாசல்
செவ்வாழை
பணத்தோட்டம்
வண்டிக்காரன் மகன்
இரும்பு முள்வேலி
பிடி சாம்பல்
சந்ரோதயம்
இரும்பாரம்
இரு பரம்பரைகள்
வெள்ளை மாளிகையில்
ரோமாபுரி ராணிகள்
கன்னி விதவையான கதை
வேலைக்காரி
ஓர் இரவு
குமரிக்கோட்டம்
அறப்போர்
வர்ணாசிரமம்
இலட்சிய வரலாறு
நீதி தேவன் மயக்கம்
பார்வதி 'பி.ஏ'
ரங்கோன் ராதா
மாஜி கடவுள்கள்
ஆரிய மாயை
காதல் ஜோதி
கைதி எண். 6342
சந்திரமோகன்
'தம்பிக்கு' ...கடிதத் தொகுப்புகள்...



—பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய இந்த எழுத்தோவியங்களும், மற்றுமுள்ள சிறுகதைத் தொகுப்புகள், புதினங்கள், நாடகங்கள், கருத்தோவியங்களும் அண்ணா நூலகத்தில் அணி செய்யும். தன் பெயரிலும் பரதன், சௌமியன் ஆகிய புனை பெயர்களிலும் பேரறிஞர் அண்ணா எழுதிய கட்டுரைகள், தலையங்கங்கள், மேற்கண்ட நூல்கள் ஆகியவற்றின் கையெழுத்துப் படிகளும் பேரறிஞர் அண்ணா பற்றி பிறர் எழுதிய நூல்களும் சேகரித்து இந்த நூலகத்திலே பாதுகாக்கப்படும்.



# தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி

இந்தியாவில், தமிழ்நாடு, தொழில் முன்னேற்றம் எய்திய மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. கடந்த 6, 7 ஆண்டுகளில் இம்மாநிலத்தின் தொழில் வளர்ச்சி நிலையானதாகவும் சீரானதாகவும் இருந்து வந்துள்ளது. மின்சார வசதி, தொழிலாளர் நிலைமை, நாட்டின் பொதுவான பொருளாதார வளர்ச்சி ஆகியவை தமிழகத்தின் சீரான தொழில் முன்னேற்றத்திற்குக் காரணங்களாய் அமைந்தன.

1977 முதல் 1982 வரையுள்ள ஆண்டுகளுக்கு இடையில் ஆண்டுக்கு ஆண்டு அடைந்த வளர்ச்சி 4 சதவீதம் முதல் 15 சதவீதம் வரையிலாகும். சராசரி வளர்ச்சி 8 சதவீதமாக அமைந்தது. 5 சதவீதமாக நாட்டின் தொழில் வளர்ச்சி சராசரி வளர்ச்சிஅமைந்திருக்கத் தமிழ்நாட்டின் சராசரி வளர்ச்சி 8 சதவீதமாக இருப்பது பெரிதும் பாராட்டத்தக்க ஒன்றாகும்.

1650 நடுத்தர, பெரிய தொழிற்சாலைகளும் 64,000 சிறிய தொழிற்சாலைகளும் அமைந்து, தமிழ்நாடு தொழில் உற்பத்தித் திறனிலும் உற்பத்திப் பொருள்களின் அளவிலும் சிறந்து விளங்குகின்றது. இந்தியாவிலுள்ள நூற்பு ஆலைகளில் நானில் ஒரு பங்கு தமிழகத்தில் உள்ளன; சிமிட்டி உற்பத்தியில் ஐந்தில் ஒரு பங்கு உற்பத்தி செய்கிறது. சர்க்கரை, சைக்கிள், கால்சியம் கார்பைடு ஆகியவற்றில் நாட்டின் மொத்த உற்பத்தியில் பத்தில் ஒரு பங்கு தமிழகத்தில் உற்பத்தியாகின்றன.

தெருப்புப் பெட்டி உற்பத்தியில் நாட்டின் மொத்த உற்பத்தியில் 60 சதவீதமும், தோல் பொருள் உற்பத்தியில் 77 சதவீதமும் தமிழ்நாடு உற்பத்தி செய்கிறது. நாட்டின் தோல் ஏற்றுமதியில் 60 சதவீதம் தமிழகத்திலிருந்து செய்யப்படுகிறது.

தமிழ்நாடு, தொழில் முன்னேற்றத்துக்கு முதலிடம் அளிப்பதனால், தொழில்கள் வளம் பெறுவதற்குரிய சூழ்நிலைகளை உருவாக்கியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். தமிழ்நாட்டின் பொருளாதாரத்தின் நிகர உள்நாட்டுப் பொருள்களில் தொழில் துறை மூலம் சுமார் 26 சதவீதம் பெறப்படுகிறது.

தமிழ்நாட்டில் கனிமங்கள் வளம் பெருகிக் கிடக்கின்றன; காட்டு வளம் மண்டிக்கிடக்கிறது. இதன் மூலம் தொழிற்சாலைகளை அமைப்பது எளிதாகிறது. உப்பு, சுண்ணாம்புக்கல், மேக்னசைட், படிவக்கற்கள், பாக்சைட், மைக்கா, நிலக்கரி, இரும்புத்தாது முதலிய கனிமங்கள் தமிழ்நாட்டில் எளிதில் கிடைக்கின்றன. காட்டு வளப் பொருள்களும் இங்கு எளிதில் பெறமுடிகின்றது. தேயிலையும் காப்பியும் இங்கு பயிராகி வருகின்றன. இவற்றிற்கும் மேலாக, நிலையான அரசு இயங்குவதும் தொழில் முன்னேற்றத்தில் பெரும் ஆர்வம் கொண்டு செயல்பட்டு வருவதும் குறிப்பிடத் தக்கனவாகும்.



தமிழ்நாட்டில் தொழில் துவங்க விழையும் தொழிலதிபர்களுக்கு உதவிடும் பொருட்டு இங்கு பல நிறுவனங்கள் செயல்படுகின்றன. தொழில் துவங்க முனைவது முதல், தொழிற்சாலை அமைக்கும் வரையில் பல்வேறு நிலைகளில் துணைபுரிய, சிப்காட், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், டிட்கோ, சிட்கோ, மாவட்டத் தொழில் நிலையங்கள் முதலியன உள்ளன. எல்லா வசதிகளும் கொண்ட மனைகள், நீர்வசதி, மின்வசதி, எளிதான போக்குவரத்து வசதி முதலியனவற்றை அளிப்பதற்கு 'சிப்காட்' துணை செய்கிறது.

இந்திய நாட்டின் மாநில நிதி நிறுவனங்களில் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் முன்னோடியாகத் திகழ்கிறது. மாநில அளவில் 1949ஆம் ஆண்டிலேயே தொடங்கப்பட்ட பெருமையும் தமிழகத்திற்கு உண்டு. நீண்ட காலக் கடன்கள், பங்கு மூலதனம் அளிப்பதன் மூலம் நிலம், கட்டடம், இயந்திரம் முதலிய நிலைச் சொத்துக்கள் பெறுவதற்காகத் தமிழ்நாட்டிலுள்ள சிறு, நடுத்தரத் தொழில்களுக்குத் தாராளமாக நிதி உதவி அளிக்கிறது இக்கழகம். புதிய தொழில்கள் துவங்குவதற்கு மட்டுமின்றித் தற்போதுள்ள தொழிற்சாலையை விரிவுபடுத்துதல், மாற்றியமைத்தல், நவீனப்படுத்தல் முதலியவற்றுக்கும் உதவி வழங்கப்படுகிறது.

ஒரு கோடி ரூபாய்க்கும் மேற்பட்ட தொழிற்சாலைக்கு 25 சதவீதம் வரையில் உதவி அளித்து கூட்டுத் துறைத் திட்டங்களை டிட்கோ ஊக்குவிக்கிறது. ஒரு கோடி ரூபாய்க்கும் குறைந்த திட்டத்திற்கு 15 சதவீதம் அளிக்கப்படுகிறது. தவணை முறைத் திட்டத்தின் கீழ் தொழிற் கூடங்களைக் கட்டித் தருதல், இன்றியமையா மூலப் பொருள்களை வழங்குதல், தாராளமாக நிதி உதவி அளித்தல், மத்திய உதவித் தொகையை அளித்தல், விற்பனை வசதியை உருவாக்கித் தருதல் முதலிய பணிகளைச் சிறு தொழில்களின் வளர்ச்சிக்குச் செய்வது 'சிட்கோ' ஆகும்.

## 1986-ஆம் ஆண்டில் அரசு விடுமுறை நாட்கள்

| | | | |
|---|---|---|---|
| ஜனவரி | 1 | புதன் | ஆங்கிலப் புத்தாண்டு |
| ,, | 14 | செவ்வாய் | பொங்கல் |
| ,, | 15 | புதன் | திருவள்ளுவர் திருநாள் |
| ,, | 16 | வியாழன் | உழவர் திருநாள் |
| ,, | 26 | ஞாயிறு | குடியரசு நாள் |
| மார்ச் | 28 | வெள்ளி | தூய வெள்ளி |
| ஏப்ரல் | 10 | வியாழன் | தெலுங்கு புத்தாண்டு |
| ,, | 14 | திங்கள் | தமிழ்ப் புத்தாண்டு |
| மே | 1 | வியாழன் | மே நாள் |
| ஜூன் | 10 | செவ்வாய் | ரம்ஜான் |
| ,, | 30 | திங்கள் | வங்கி அரையாண்டுக் கணக்கு முடிவு |
| ஆகஸ்ட் | 15 | வெள்ளி | சுதந்திர நாள் |
| ,, | 17 | ஞாயிறு | பக்ரீத் |
| செப்டம்பர் | 7 | ஞாயிறு | விநாயகர் சதுர்த்தி |
| ,, | 15 | திங்கள் | மொகரம் |
| அக்டோபர் | 2 | வியாழன் | காந்தி ஜெயந்தி |
| ,, | 11 | சனி | ஆயுத பூஜை |
| ,, | 12 | ஞாயிறு | ,, |
| நவம்பர் | 1 | சனி | தீபாவளி |
| ,, | 15 | சனி | மிலாடி-நபி |
| டிசம்பர் | 25 | வியாழன் | கிறிஸ்துமஸ் |
| ,, | 31 | புதன் | வங்கி ஆண்டுக் கணக்கு முடிவு |

மாவட்டத் தொழில் நிலையங்கள் மூலம் தொழில்களுக்குத் துணை புரிவதும் உதவியளிப்பதும், தொழில், வர்த்தக இயக்கம் ஆகும்.

தமிழ்நாடு மின்னணுவியல் கழகம், தமிழ்நாட்டில் மின்னணுவியல் பிரிவுகளில் மேம்பாட்டுக்கென நிறுவப்பட்டதாகும். இப்போதுள்ள பிரிவுகளுடன் தொலைபேசிக் கருவிகள் தயாரிப்பதற்கும் திட்டமுள்ளது. மின்னணுவியல் துறையில் கூட்டுத் துறைத் திட்டங்களுக்கு ஊக்கம் அளிக்கவும் இக்கழகம் முன் வந்துள்ளது.

தமிழ்நாட்டு அரசின் ஒத்துழைப்புடன், ஏற்றுமதி குறித்த ஆய்வு மண்டலம் (தீர்வையில்லா வர்த்தக மண்டலம்) ஒன்றை மீனம்பாக்கம் அருகில் இந்திய அரசு நிறுவுகிறது. இத்திட்டத்தை நிறைவேற்றத் தமிழ்நாடு அரசு 'சிப்காட்' நிறுவனத்தைச் செயலியாக நியமித்துள்ளது. 230 ஏக்கர் பரப்பில், இந்த மண்டலத்தின் முதற் கட்டம் ஏற்படுத்தப்படுகிறது. இரண்டாவது கட்டத்திற்கான நிலம் 300 ஏக்கர் பரப்பில் ஒப்படை செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

'சிப்காட்' பிரிவுகளுக்கும் சென்னை ஏற்றுமதி ஆய்வு மண்டலத்திற்கும் தடைப்படாத மின்சாரம் எப்போதும் கிட்டும் பொருட்டு மின்உற்பத்திப் பிரிவுகளை நிறுவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. தொழில்நுட்ப அறிவை பெருமளவில் வளர்த்திடும் பொருட்டுப் பல்வேறு தொழில் நுட்ப நிலையங்களுக்கும்தொழில் நிலையங்களுக்கும் தமிழ்நாடு அரசு அண்மையில் அனுமதி வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.



கொடிநாள் அன்று (5.12.85) மேதகு தமிழக ஆளுநர் திரு எஸ்.எல். குரானா அவர்கள் சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு சைலோவிடமிருந்து கொடி பெற்றுக் கொண்டு நன்கொடை வழங்கினார்.

கொடிநாள் அன்று (5.12.85) மாண்புமிகு முதல்வர் அவர்கள் சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு சைலோவிடமிருந்து கொடி பெற்றுக் கொண்டு நன்கொடை வழங்கினார்.





மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களை, அமெரிக்கத் தூதர் திரு எச். இ. ஜான் குந்தர் டீன் அவர்கள் 2.12.85 அன்று தலைமைச் செயலகத்தில் சந்தித்துப் பேசினார்.

மூதறிஞர் ராஜாஜி அவர்களின் 108-வது பிறந்த நாளையொட்டி, சென்னை-பாரி முனையில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்குத் தமிழ்நாடு அரசின் சார்பில் மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் மற்றும் அமைச்சர்கள் மாலையணிவித்தார்கள்.



இதுவரையில் வந்ததில்லை இப்படியொரு வண்ணமலர்
என்ற வகையில் மலரவிருக்கிறது...

# தமிழரசு பொங்கல் மலர்

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம் ஜி.ஆர்.

மற்றும் அமைச்சர் பெருமக்களின் கட்டுரைகள்...

கண்ணாடி போட்டு பாதுகாக்கத் தக்கவகையில்
கண்ணைக்கவரும் வண்ணப்படங்கள் ...

கவிஞர் பெருமக்களின் கவிதைகள்...
அறிஞர் பெருமக்களின் கருத்துரைகள்...
புகழ்பெற்ற நாவலாசிரியர்களின் புதினங்கள்-சிறுகதைகள்...
சமயத் தலைவர்களின் அறவுரைகள்...
கலையுலகப் பெருமக்களின் எழுத்தோவியங்கள்...

இத்தனையின் மொத்தப் பட்டியலாய் இதயந்தொடும் கருத்துப் பேழையாய்
200 பக்கங்களுக்குக் குறையாமல்
பொங்கலுக்கு முன்பே உங்கள் கரங்களில் தவழவிருக்கிறது!

**இவ்வளவுக்கும் மலரின் விலை ரூ. 10 தான்!**

**இப்போதே உங்கள் பிரதிக்குச் சொல்லிவையுங்கள்**

பொங்கல் மலருக்கு - சந்தாதாரர்கள் கூடுதல் கட்டணம்
ரூ. 8.50 செலுத்த வேண்டும்.
[1.1.1986 இதழ், மலரோடு இணைத்து வெளியிடப்படும்.]



**விளம்பர விகிதம் :**

கடைசி அட்டை ரூ. 8,000 2வது அட்டை ரூ. 6,000
3வது அட்டை ரூ. 4,000

உள்ளே முழுப்பக்கம் வண்ணத்தில் ரூ. 4,000

உள்ளே அரைப்பக்கம் வண்ணத்தில் ரூ. 2,000

உள்ளே முழுப்பக்கம் சாதாரண விளம்பரம் ரூ. 2,000

உள்ளே அரைப்பக்கம் சாதாரண விளம்பரம் ரூ. 1,000

விவரங்களுக்கு : உதவி இயக்குநர் (விளம்பரம்)
தமிழரசு
அரசினர் தோட்டம்,
சென்னை-600 002.





# தமிழகத்தில் மின் வளர்ச்சி

மாண்புமிகு மின் துறை அமைச்சர்
திரு. எஸ். இராமச்சந்திரன்

இவ்வாண்டு தென்மேற்குப் பருவ மழை போதுமானதாக இல்லை. வடகிழக்குப் பருவ மழை பொறுத்திருந்து பார்க்க வேண்டியது. இருப்பினும், இவ்வாண்டுக்குரிய மின் தேவை 1171 கோடி யூனிட்டுகள். எதிர்பார்க்கப்படும் இருப்போ 1045 கோடி யூனிட்டுகள். பற்றாக் குறை 126 கோடி யூனிட்டுகள்.

ஆந்திரத்தில், இராமகுண்டன் பெரும் பேரனல் மின் நிலையத்தின் தமிழகப் பங்கான 132 மெ.வாட் உறுதியாகக் கிடைக்கப் பெறின் ஓரளவு பற்றாக் குறையைப் போக்க இயலும். நெய்வேலி இரண்டாவது அனல் மின் திட்ட முதற் பொறி திட்டமிட்டபடி வரும் மார்ச்சு திங்களில் இயங்குமாயின் கோடை காலத் தேவையை நிறைவு செய்ய இயலும். எல்லாவற்றையும் எண்ணத்தில் கொண்டாலும், தற்பொழுதுள்ள மின்வெட்டு 30 விழுக்காடு தொடருமென்றே தோன்றுகிறது.

தமிழகத்தின் அனல் மின் நிலையங்கள் செவ்வனே இயங்குவது இன்றியமையாதது. தூத்துக்குடி அனல்மின் திட்டம் நன்முறையில் இயங்கி வருகிறது. எண்ணூர் அனல் மின் திட்டம், மேம்பாட்டுத் திட்டம் மேற்கொண்ட வகையில், உற்பத்தித் திறனில் முன்னேற்றம் கண்டுள்ளது. பேசின் பால அனல் மின் திட்டம் மின் வாரியத்தால் மூடப்பட்டுள்ளது. அனல் மின் நிலையங்களின் இந்திய சராசரி உற்பத்தித் திறன் 50.5 எனின், தூத்துக்குடி அனல் மின் திட்ட உற்பத்தித் திறன் 55.1, எண்ணூர் அனல் மின் திட்ட உற்பத்தித் திறன் 52.4 எண்ணூர் அனல் மின் திட்ட மேம்பாட்டிற்காக 97 கோடி ரூபாயும், தூத்துக்குடி அனல் மின் திட்ட மேம்பாட்டிற்காக 8 கோடி ரூபாயும் செலவழிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

அனல் மின் திட்டங்கள் செவ்வனே இயங்க, தரமான நிலக்கரி போதுமான அளவு தேவை. தூத்துக்குடி அனல் மின் திட்டத்திற்கென ஒதுக்கப்படும் நிலக்கரியில் பாதியளவே கொண்டுவர முடிகிறது. அதுவும் தரமானதாக இல்லை. வெளிநாட்டிலிருந்து நிலக்கரி இறக்குமதி செய்திட, நம் வேண்டுகோளை இந்திய அரசு ஏற்றது. ஒரு நல்ல திருப்பம். 5 இலட்சம் டன் நிலக்கரி இறக்குமதி கேட்டோம். ஆனால், 1 இலட்சம் டன் நிலக்கரி இறக்குமதிக்கு இந்திய அரசு அனுமதி தந்தது. ஆஸ்திரேலியாவில் இருந்து கொண்டு வரப்படும் இக்கரி தரமானதாகவும் உள்ளது; கொதிகலன்களில் பழுதும் ஏற்படுவதில்லை. சிக்கனமாகவும் உள்ளது. ஒரு இலட்சம் டன் நிலக்கரிக்கு இந்திய அரசுக்கு 3 கோடியே 90 இலட்ச ரூபாய் வரி கட்டிய பிறகும், மின் வாரியத்திற்கு 62 இலட்சம் ரூபாய் மிச்சம். கடல் வழி மூலம் எளிதில் நிலக்கரி கொண்டு வரக்கூடிய தமிழகம் போன்ற மாநிலங்களுக்கு நிலக்கரி இறக்குமதியை இந்திய அரசு தாராளப்படுத்த வேண்டும். மீதி நான்கு இலட்சம் டன் நிலக்கரியை இறக்குமதி செய்ய இந்திய அரசு அனுமதிக்குமென எதிர்பார்க்கிறோம்.

மின் பற்றாக்குறையைத் தீர்த்திட உற்பத்தித் திட்டங்களில் தனிக் கவனம் தேவை. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 2000 கோடி ரூபாய் மின் சக்திக்கென நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. 1016 மெ.வா. மின் சக்தி கூடுதலாகும். இந்திய அரசின் நெய்வேலி இரண்டாவது அனல் மின் திட்டமும், கல்பாக்கம் அணு மின் நிலைய இரண்டாவது பொறியும் இத்திட்ட காலத்தில் இயங்கும். இத்திட்ட கால இறுதியில் மின் உச்ச சுமை 4000 மெ.வா. அளவு இருக்கும். எட்டாவது திட்ட கால இறுதியில் இது 6000 மெ.வா. ஆகக் கூடும். எட்டாவது திட்ட கால இறுதிக்குள்ளாவது மின் தட்டுப்பாடு இல்லாத வகையில் மின் உற்பத்தியை அதிகரிக்கும் தொலை நோக்குடன் இவ்வரசு செயல்பட்டு வருகிறது.

வரும் ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க புதிய மின் திட்டங்கள் என்ற வகையில், வட சென்னை அனல் மின் நிலையம், தூத்துக்குடி அனல் மின் நிலைய விரிவாக்கம், ஒகேனேக்கல் மின் திட்டம் போன்றவை தமிழக அரசின் மூலமும், திருநெல்வேலியில் கூடங்குளத்தில் ஒரு அணு மின் நிலையம், நெய்வேலியில் மூன்றாவது நிலக்கரிச் சுரங்கம் வெட்டி மூன்றாவது அனல் மின் திட்டம் அமைத்தல் ஆகிய திட்டங்களை இந்திய அரசு மேற்கொள்ள வலியுறுத்தி வருகிறோம். மத்திய, மாநில அரசுகள் மட்டுமின்றி, தனியார் துறையிலும் தங்கள் தேவைகளைத் தாங்களே நிறைவேற்றிக் கொள்ளும் வகையில் மின் உற்பத்தித் திட்டங்கள் உருவாவதை இவ்வரசு வரவேற்கும். வடசென்னை அனல் மின் நிலையத் திட்டத்திற்கு 904 கோடி ரூபாய் செலவாகும். இதற்கு உலக வங்கி மூலம்

கடன் பெற தமிழக அரசு இந்திய அரசை[illegible] கேட்டுக் கொண்டுள்ளது.

நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து தமிழ்நா[illegible] போன்ற மாநிலங்கள் வெகு தூரத்தில் இருப்[illegible]தால், நிலக்கரி கொண்டுவருவதற்கான செல[illegible] கூடுதலாகிறது. மாநிலங்களுக்கிடையே அ[illegible]இல் உள்ள சுரங்கங்களில் நிலக்கரி பெற கடு[illegible] போட்டி ஏற்படுகிறது. இதனைத் தவிர்த்தி[illegible]வும், மின்சாரம் போன்ற அடிப்படை[illegible] தேவை இந்தியாவெங்கும் ஒரே சீரா[illegible] நிலையில் நிறைவேறிடவும், இந்தியாவின் எ[illegible] பகுதியிலும் நிலக்கரி ஒரே விலையில் கிடைக்[illegible]தக்க ஏற்பாடு ஒன்றினை இந்திய அர[illegible] செய்ய வேண்டும். இது வட்டாரங்களுக்கிடை[illegible]யேயான வளர்ச்சி வேறுபாட்டைத் தவிர்[illegible]கும்.

நெல், கரும்பு, கோதுமை ஆகியவற்றி[illegible] கொள்முதல் விலையை இந்திய அரசு நி[illegible]ணயிக்கிறது. இதனால் உற்பத்தி செய்யு[illegible] உழவர்களுக்கு ஊக்கம் பிறப்பதில்லை. வ[illegible]வாயும் அதிகரிப்பதில்லை. ஆகவே, இவ[illegible]றிற்கு வழங்கப்படும் மின்சாரத்திற்குக் க[illegible]டணம் அதிகரிக்கும் வாய்ப்பு குறைகிற[illegible]. இந்நிலையில் உணவுப் பொருள் உற்பத்[illegible] மிகும் வகையில் மலிவு விலையில் மாநிலங்க[illegible] மின்சாரத்தை வழங்கி வருகின்றன. இதனா[illegible] மாநிலங்கள் பேரிழப்புக்கு ஆளாகின்றன. இவ்விழப்பை ஈடு செய்ய இந்திய அரசு[illegible] முன்வந்து, ஊர்ப்புற மின்சாரம் வழங்குதலுக்[illegible] உதவித் தொகை அளிப்பது அவசியம். இ[illegible] ஊர்ப்புறங்களின் மின்வசதியை ஊக்குவிக்கு[illegible] உணவையும் பெருக்கும்.

ஆனால், இப்பொழுது நிலக்க[illegible] விலையை உயர்த்துவது, எரி எண்ணெ[illegible] விலையைக் கூட்டுவது, புகைவண்டிக் கட்[illegible]ச் செலவை அதிகரிப்பது, கடல்வழிச் செ[illegible]வைக்கூட்டுவது போன்ற இந்திய அரசின் ந[illegible]வடிக்கையால் மாநிலங்கள் பெரிய நிதி இழ[illegible]புக்கு ஆளாகின்றன. சான்றாக, 1979 முத[illegible] இக்கூடுதல்கள் காரணமாக, தமிழ்நாட்டிற்[illegible] ஆண்டொன்றிற்கு 160 கோடி ரூபாய் அதிக[illegible] செலவாகிறது. கடந்த ஆண்டுகளில் மூன்[illegible] முறை ஏற்படுத்திய கட்டண உயர்வின் மூல[illegible] கிடைக்கும் 164 கோடி ரூபாய் இதற்கே ச[illegible]யாகிவிட்டது. பயனீட்டாளர்கள் எதிர்பார[illegible] கட்டணங்களைக் கூட்டுவது மாநில[illegible]ளுக்கு ஓரளவே இயலும். ஆனால், இந்திய அரசின் நிறுவனங்களுக்கு மாநிலங்களே பயனீட்டாளர்களாக இருப்பதால் இத்தகைய உயர்வு எளிதாகிறது. விளைவு, மாநிலங்களின் நிதி மத்திய அரசுக்குச் செல்கிறது. இப்போக்கைக் கட்டுப்படுத்தும் வகையில், இத்தகைய கட்டண உயர்வுகளை மாநிலங்களைக் கலந்து கொண்டு இந்திய அரசின் நிறுவனங்கள் மேற்கொள்ளுமாயின் நலம் பயக்கும். நாளாவட்டத்தில் இது மிக இன்றியமையாதது என்று குறிப்பிட விரும்புகிறேன்.

மின்சார வசதி, வசதிபடைத்தோருக்கே என்ற நிலையை மாற்றி வறியவருக்குத்தர முனைந்தது புரட்சித் தலைவர் அரசு. ஏழைக் குடிசைகளுக்கு ஒரு விளக்குத் திட்டம் இவ்வகையைச் சார்ந்தது. இதுவரை இத்திட்டத்தின் மூலம் [illegible],307 குடிசைகளுக்கு ஒரு விளக்குத் திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது. இதேபோல, சிறு விவசாயிகளுக்கு நீரேற்றிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கி ஊக்குவித்த பெருமை இவ்வரசுக்கு உண்டு. இத்திட்டத்தின் மூலம் 99,850 சிறு விவசாயிகள் பயன்பெறுகின்றனர்.

நகரங்களும், மாநகரங்களும் பெருகி வரும் காலமிது. சென்னை போன்ற பெருநகரங்களில் எப்பொழுதோ போட்ட கம்பித் தொடர்கள் மின் சுமை நாள்தோறும் கூடி வருகிறது. அடிக்கடி மின் தடங்கலும் மின் நிறுத்தமும் ஏற்படுகிறது. இவற்றைப் போக்க மின் பகிர்வுத் திட்டத்தைச் செம்மைப்படுத்துவது மிகத் தேவை. சென்னை மாநகரைப் பொறுத்தவரை, இத்தகைய மேம்பாட்டுப் பணிகளுக்கென 73 கோடி ரூபாய் செலவில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. மாநகரங்கள் ஒரு நாட்டின் ஜன்னல்கள் என்பர். மாநகர மேம்பாட்டுத் திட்டங்களுக்கு, தற்பொழுது அனல் மின் திட்டங்களுக்கு உதவுவது போல, மத்திய அரசும் உதவித் தொகை வழங்க வேண்டும்.

சிக்கனம் சிறந்தது. அதுவும் பற்றாக்குறை மாநிலங்களில் அனைத்துப் பயனீட்டாளர்களும் அக்கறை காட்ட வேண்டியது. ஒரு யூனிட் சிக்கனம் இரண்டு யூனிட்டுகள் உற்பத்திக்குச் சமம். இரண்டு யூனிட்டுகள் உற்பத்தி 4 யூனிட்டுகள் நிறுவனத்திற்குச் சமம் என்பர். மின் உற்பத்தித் திட்டங்களுக்கு எவ்வளவு அக்கறை எடுத்துக் கொள்ளுகிறோமோ அதனினும் இதில் ஆர்வம் காட்ட வேண்டும். வெற்று ஆடம்பரங்களில் மின்சாரம் செலவிடப்படுவதைத் தடுக்கவும், வீணான சமயங்களில் மின்சாரம் பயன்படுவதைத் தவிர்க்கவும் அனைத்துப் பயனீட்டாளர்களும் முன்வர வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

இங்ஙனம் எல்லா வகையிலும் பணியாற்றும் இத்துறை தமிழகத்திற்குப் பெரிதும் பயன்படும் துறை. இதன் முன்னேற்றத்தில் பொதுமக்கள் அனைவரும் அக்கறை கொள்ள வேண்டும். நிறையிருப்பின் பாராட்டிடவும், குறையிருப்பின் சுட்டிக்காட்டவும் முன் வர வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

(17.11.85 அன்று சென்னை வானொலியில் 'வளரும் தமிழகம்' என்னும் நிகழ்ச்சியில் "தமிழகத்தில் மின் வளர்ச்சி" என்பதுபற்றி மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு ச. இராமச்சந்திரன் அவர்கள் ஆற்றிய உரை.)

### பாரதி பற[illegible]

இயன்றவரை தமிழே பேசுவே[illegible] தமிழே எழுதுவேன்; சிந்தனை செய்வ[illegible] தமிழிலே செய்வேன்...

மறைந்தும் தற்புகழ்ச்சி பாராட்[illegible] விரும்பேன்...

பொய்மை, இரட்டுற மொழிதல், [illegible] வஞ்சனை, நடிப்பு இவற்றால் பொருளீட்[illegible] பிழைத்தல் நாய்ப் பிழைப்பென[illegible] கொள்வேன்...

இடையறாத் தொழில் புரிந்து இ[illegible]வுலகப் பெருமைகள் பெற முயல்வே[illegible] இல்லாவிடின் விதிவசமென்று மகி[illegible] போயிருப்பேன்...

எப்போதும் மலர்ந்த முகம், இ[illegible] சொல், தெளிந்த சித்தம் இவற்றோ[illegible]ருப்பேன். ஓம்.

—பா[illegible]



சென்னை மாநகராட்சி ஆற்றும் பணிகளுள் இயற்கையின் சீற்றத்தால் நேரும் புயல், வெள்ளம் இவற்றால் மக்கள் இன்னலுறும்போது உடுக்கை இழந்தவன் கை போல விரைந்து சென்று உதவுவதும் மிக முக்கியமான ஒன்றாகும். வரலாறு காணாத அளவுக்குச் சென்னை மாநகரம் இந்த ஆண்டு வெள்ளத்தால் பாதிக்கப்பட்டது. பத்து நாட்கள் இடையறாது பெய்த மழையால் அனைத்துத் தரப்பினரும் பாதிக்கப்பட்டனர். பாதிப்புக்குட்பட்ட மக்களின் உதவிக்கு விரைந்து சென்றது மாநகராட்சி.

வீடிழந்தோர் தற்காலிகமாகத் தங்க சென்னை மாநகராட்சிப் பள்ளிகள் அனைத்தும் திறந்து விடப்பட்டன.

பசித்துயர் துடைக்க நாள்தோறும் இலட்சக் கணக்கான உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன.

மக்கள் தங்கியிருந்த இடங்களில் தொற்று நோய் பரவாமல் தடுக்க தடுப்பூசிகள் போடப் பட்டன.

**விரைவுத் திட்டம்**

இவற்றைப் போர்க்கால நடவடிக்கை மூலம் விரைந்து செய்ய மாநகராட்சியால் எவ்வாறு முடிந்தது?

மாநகராட்சியில், வடகிழக்குப் பருவக் காற்று வீசும் காலங்களில் செயல்படுவதற்கென்றே தயாரித்து வைக்கப்பட்டுள்ள திட்டமே இதன் வெற்றிக்குக் காரணம். ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் 15 முதல் டிசம்பர் 15 வரை எதிர்பாராமல் நேரக்கூடிய புயல் வெள்ளத்தைச் சமாளித்து வெள்ள நிவாரணத்தைத் திறமையாகவும் முழுமையாகவும் மேற்கொள்ள ஒரு நிரந்தரத் திட்டத்தை உருவாக்கியுள்ளது மாநகராட்சி. செப்டம்பர் மாதத்திலிருந்து மாநகராட்சி இத்தகைய ஒருங்கிணைந்த முயற்சியில் ஈடுபடுகிறது.

பல துறையினரும் ஒத்துழைக்க வேண்டிய நிலை உருவாவதால் பல துறையினரும் ஒன்றாக உதவத் தயாராக வேண்டும் என்பதைக் குறித்து பல கூட்டங்களில் விவாதித்து முடிவு செய்யப்படுகிறது. மாநகராட்சி, பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத் துறை, காவல்துறை, பல்லவன் போக்குவரத்துக் கழகம், குடிநீர் வடிகால்வாரியம், வருவாய்த் துறை, தீயணைப்புப் படையினர், மின்வாரியத் துறை, விவசாயத்துறை, நுகர்பொருள்



வாணிபக் கழகம் போன்ற பல்வேறு துறை சார்ந்த உயர் அதிகாரிகளும் மாநகராட்சியில் ஒவ்வோராண்டும் கூடி விவாதித்துத் தேவையான முன்னேற்பாடுகளைச் செய்கின்றனர்.

எனவே திடீரென்று தோன்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விரைந்து உதவ முடிகிறது.

சென்னை மாநகரில் வெள்ள நிவாரணப் பணிகளுக்குத் தலைவர் மாநகராட்சி சிறப்பு அதிகாரியாவார். சென்னை மாநகரில் உள்ள தாழ்வான பகுதிகள் பற்றிய விவரங்களை மாநகராட்சி சேகரித்துள்ளது. மொத்தம் 287 தாழ்வான பகுதிகள் உள்ளன.

# இன்பம்

-பாரதியார்



இவ்வுலகம் இனியது. இதிலுள்ள வான்
இனிமையுடைத்து; காற்றும் இனிது.
தீ இனிது. நீர் இனிது. நிலம் இனிது.
ஞாயிறு நன்று; திங்களும் நன்று.
வானத்துச் சுடர்களெல்லாம் மிகஇனியன.
மழை இனிது. மின்னல் இனிது. இடிஇனிது.
கடல் இனிது, மலை இனிது, காடுநன்று.
ஆறுகள் இனியன.
உலோகமும் மரமும், செடியும், கொடியும்,
மலரும், காயும், கனியும் இனியன.
பறவைகள் இனிய.
ஊர்வனவும் நல்லன.
விலங்குகளெல்லாம் இனியவை.
நீர்வாழ்வனவும் நல்லன.
மனிதர் மிகவும் இனியர்.
ஆண் நன்று. பெண் இனிது.
குழந்தை இன்பம்.
இளமை இனிது. முதுமை நன்று.
உயிர் நன்று. சாதல் இனிது.

உடல் நன்று. புலன்கள் மிகவும் இனியன.
உயிர் சுவையுடையது.
மனம் தேன். அறிவு தேன். உணர்வு அமுதம்.
உணர்வே அமுதம்.
உணர்வு தெய்வம்.

மனம் தெய்வம், சித்தம் தெய்வம். உயிர்
தெய்வம்.
காடு, மலை, அருவி. ஆறு,
கடல், நிலம், நீர், காற்று,
தீ, வான்,
ஞாயிறு, திங்கள், வானத்துச் சுடர்கள்—
எல்லாம் தெய்வங்கள்.

உலோகங்கள், மரங்கள், செடிகள்,
விலங்குகள். பறவைகள், ஊர்வன, நீந்துவன,
மனிதர் - இவை அமுதங்கள்.
இவ்வுலகம் ஒன்று.
ஆண், பெண், மனிதர், தேவர்,
பாம்பு, பறவை, காற்று, கடல்,
உயிர், இறப்பு – இவையனைத்தும் ஒன்றே.
ஞாயிறு, வீட்டுச் சுவர், ஈ, மலை யருவி,
குழல், கோமேதகம் - இவையனைத்தும் ஒன்றே.
இன்பம், துன்பம், பாட்டு,
வண்ணான் குருவி,
மின்னல், பருத்தி,
இஃதெல்லாம் ஒன்று.
மூடன், புலவன்,
இரும்பு, வெட்டுக்கிளி -
இவை ஒரு பொருள்.
வேதம், கடல்மீன், புயற்காற்று, மல்லிகை மலர் -
இவை ஒரு பொருளின் பல தோற்றம்.
உள்ள தெல்லாம் ஒரே பொருள், ஒன்று.
இந்த ஒன்றின் பெயர் 'தான்'.
'தானே' தெய்வம்.
'தான்' அமுதம், இறவாதது.

எல்லா உயிரும் இன்ப மெய்துக.
எல்லா உடலும் நோய் தீர்க.
எல்லா உணர்வும் ஒன்றாத லுணர்க.

தேசியகவி பாரதி பிறந்தநாள் டிசம்பர் 11

'தான்' வாழ்க.
அமுதம் எப்போதும் இன்ப மாகுக.
தெய்வங்களை வாழ்த்துகின்றோம்.
தெய்வங்கள் இன்ப மெய்துக.
அவை வாழ்க.
அவை வெல்க.
தெய்வங்களே!
என்றும் விளங்குவீர்: என்றும் இன்ப மெய்துவீர்;
என்றும் வாழ்வீர் என்றும் அருள் புரிவீர்.
எவற்றையும் காப்பீர்.
உமக்கு நன்று.
தெய்வங்களே!
எம்மை உண்பீர், எமக்கு உண வாவீர்.
உலகத்தை உண்பீர், உலகத்துக்கு உணவாவீர்.
உமக்கு நன்று.
தெய்வங்களே!
காத்தல் இனிது, காக்கப் படுதலும் இனிது.
அழித்தல் நன்று, அழிக்கப் படுதலும் நன்று:
உண்பது நன்று, உண்ணப் படுதலும் நன்று.
சுவை நன்று, உயிர் நன்று, நன்று, நன்று.

உணர்வே, நீ வாழ்க.
நீ ஒன்று, நீ ஒளி.
நீ ஒன்று, நீ பல.
நீ நட்பு, நீ பகை.
உள்ளதும், இல்லாததும் நீ.
அறிவதும், அறியாததும் நீ.
நன்றும், தீதும் நீ.
நீ அமுதம், நீ சுவை.
நீ நன்று, நீ இன்பம்!



# தஞ்சை மாவட்டத்தில் புதிய 20 அம்சம்



தஞ்சை மாவட்டத்தில் புதிய 20 அம்சத் திட்டத்தின் கீழ், நிலத்தடி நீரை 9,340 எக்டேர் நிலத்திற்குப் புதிதாகப் பாசனத்திற்கு வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 6,966 எக்டேர் நிலத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

58,000 டன் பயிறு வித்து உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 43,043 டன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. எண்ணெய் வித்துக்கள் 63,750 டன் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 69,690 டன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 11.95 இலட்சம் உழைப்புத் தினங்களும், கிராமப்புற வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் 4.54 இலட்சம் உழைப்புத் தினங்களும் உருவாக்கப்பட்டுள்ளன.

ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த 13,990 பேருக்கு நிதி உதவி செய்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 6,184 பேருக்கு நிதி உதவி செய்யப்பட்டுள்ளது.

235 கிராமங்கட்குக் குடி நீர் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 103 கிராமங்கட்குக் குடிநீர் வழங்கப்பட்டுள்ளது.

6,000 பேருக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கத் திட்டமிடப்பட்டு 7,185 பேருக்கு வீட்டு மனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளது.

வீடு கட்ட 3,752 பேருக்கு உதவி செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு 2,154 பேருக்கு வீடு கட்ட உதவி செய்யப்பட்டுள்ளது.

குடிசையில் வாழ்வோர் 1,833 பேருக்கு உதவிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 4,218- பேருக்கு உதவி செய்யப்பட்டுள்ளது.

1362 பம்பு செட்டுக்கு மின் இணைப்புத்தர இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு1,148 பம்பு செட்டுகட்கு மின் இணைப்புத் தரப்பட்டுள்ளது.

33.85 இலட்சம் மரங்கள் நட இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு, 17.89 இலட்சம் மரங்கள் நடப்பட்டன.

2,230 எரிசாண வாயுக்கலன் அமைக்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு 601 எரிசாண வாயுக் கலன்கள் அமைக்கப்பட்டன.

குடும்பநல அறுவைச் சிகிச்சைகள் 20,662 பேருக்கு இதுகாறும் செய்யப்பட்டுள்ளன.

158 சிறு தொழில்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

6-லிருந்து 14 வயதிற்குட்பட்ட 20,900 பேரைப் பள்ளியில் சேர்க்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு 21,094 பேர் பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

முதியோர் கல்வி 48,000 பேருக்கு வழங்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு 48,938 பேருக்கு முதியோர் கல்வி வழங்கப்படுகிறது.

பொன். சுப்பையா
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
தஞ்சாவூர்.

## தொடர்பு அலுவலர்கள் நியமனம்

### பொது வருங்கால வைப்பு நிதிக்குச் செலுத்தப் படுகிற தொகை கணக்கில் போய்ச் சேராமல் விடுபடும் வரவுக் குறிப்புகளுக்கு விரைவில் தீர்வு காண்பதற்காகத் தொடர்பு அலுவலர்களை நியமனம் செய்தல்:

தொடர்பு அலுவலராக அரசுத் துணைச் செயலாளர், கூடுதல் இயக்குநர், இணை இயக்குநர், துணை இயக்குநர் பதவித் தரத்தில் பணியாளர்க்கென்று பொறுப்பு வகிக்கிற முதுநிலை அதிகாரி ஒருவரை நியமிக்குமாறு தலைமைச் செயலக அனைத்துத் துறைகளுக்கும் அனைத்துத் துறைத் தலைவர்களுக்கும் அரசு, நிதித் துறையில் (நிதிகள்), உத்தரவு பிறப்பித்துள்ளது.

பொது வருங்கால வைப்பு நிதிக்குத் தொகை செலுத்துகிற அரசுப் பணியாளர்கள் தாங்கள் செலுத்துகிற தொகை கணக்கில் போய்ச் சேராமல் விடுபடுகிற வரவுக் குறிப்புகளுக்குத் தீர்வு கண்டு அவர்களுடைய வருங்கால வைப்பு நிதிக் கணக்குகளை நாளது வரையில் சீர்செய்து வைத்து வர கணக்குத் துறைத் தலைவர்,இவருடன் தொடர்பு கொள்ளலாம். எனவே, தங்களுடைய வருங்கால வைப்பு நிதிக் கணக்குகளில் சேராமல் விடுபட்ட வரவுத் தொகை குறிப்புகள் வரப்பெற்றதும் அரசுப் பணியாளர்கள் அனைவரும் அவரவர் துறையிலுள்ள தொடர்பு அதிகாரியுடன் தொடர்பு கொண்டு அவற்றுக்கு உடனடியாகத் தீர்வு காணுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

—நிதித்துறை

இப்போது! பேன்மின்த்*

(மோரென்ட்டல் சிட்ரேட்)

நாக்குப் புழுக்களை அழிக்கிறது.
நாக்குப் புழுக்கள் உங்கள்
லாபத்தை அழிக்கும் முன்பு.



நாக்குப் புழுக்கள்—உங்கள் கண்ணுக்குத் தெரியாத எதிரிகள்:

காலநடையின் வயிற்றுக்குள் நாக்குப் புழுக்கள் வளர்ந்து வாழ்கின்றன. அவை, காலநடையின் ஊட்டச் சத்துக்களை உண்ணுகின்றன. இதன் பலனாக காலநடை மெலிந்து, உற்பத்தி குறைந்து விடுகின்றது. உங்களுக்கு லாபம் குறைந்து விடுகின்றது.

மேய்ச்சல் தளத்தில் காலநடைகள் மேயும் போது, நாக்குப் புழுக்கள் தொற்றிப் பரவுகின்றன. ஒரு முறை நாக்குப் புழு காலநடையின் வயிற்றுக்குள் சென்று விட்டால், அது நிரந்தரமாகி விடுகிறது. ஆகவேதான் காலநடை மருத்துவர்கள் 3-4 மாதங்களுக்கொருமுறை புழுக்களை, அப்புறப்படுத்த வேண்டுமென்று சிபாரிசு செய்கின்றனர்.

**பேன்மின்த்**

**நாக்குப் புழுக்களை அழிக்கிறது. நாக்குப் புழுக்கள் உங்கள் லாபத்தை அழிக்கும் முன்பாக.**

பேன்மின்த், உலகெங்கிலும் காலநடைகளைத் தாக்கும் நாக்குப் புழுக்களை ஒழிக்கிறது.

பேன்மின்த், பாதுகாப்பானது பலகீனமான சோர்வான காலநடைகளுக்கும், சினையுள்ள மற்றும் கன்று ஈன்ற காலநடைகளுக்கும் இதர சில புழுக்கொல்லிகளைப் போல், இது, ரோமம், பல் மற்றும் பாலின் நிறத்தில் மாற்றமோ, தீய விளைவுகளோ ஏற்படுத்தாது. கறவைகளுக்கு இம்மருந்தை கொடுத்த பின்பும், அவை தரும் பாலை உபயோகப்படுத்தலாம்.

**இப்போது, பேன்மின்த் எளிதான புழுக்கொல்லி**

உபயோகிக்க எளிதானது பேன்மின்த். காரணம் உடனடி- உபயோகத்திற்கான கரைசல், மாத்திரை, உருண்டை ஆகிய வடிவங்களில் கிடைக்கின்றது.

**கால்நடை மருத்துவரிடம் ஆலோசனை பெறுங்கள்**



கரைசல் கிடைக்கிறது 100 மி.லி, 500 மி.லி. மற்றும் 4.5 லிட்டர் பேக்குகளில்

சிறிய காலநடைக்கு மாத்திரைகள்.

பெரிய காலநடைக்கு உருண்டைகள்.

PF 2165

பயற்ற **பேன்மின்த்**

புழுக்களை அழித்திடும் ஆரோக்கியம் அளித்திடும்

யு.எஸ்.ஏ. பைஸர் இன்கார்ப்பரேட்டடின் ட்ரேட்மார்க் **pfizer** கேட்பதன் பேரில் மேலும் தகவல்கள் கிடைத்திடும்.





## 'பாரதி கண்ட தாய்க்குலம்'

ஆசிரியர் : பி.இ.பாலகிருஷ்ணன்

வெளியீடு: நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், 41, பி. சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், சென்னை-600 098.

விலை : ரூ. 3.50 பக்கம் 72

தேச விடுதலை, ஏகாதிபத்ய எதிர்ப்பு, உலக சமாதானம் ஆகியவற்றை வலியுறுத்தும் கவிதா ஆவேசம் மட்டும்தானா பாரதிக்கு இருந்தது? பெண்மை பற்றி, அதன் மேன்மை பற்றி கூறிய மென்மை உள்ளமும்தான் இருந்தது.

அவற்றில் தாயன்பை மட்டும் தேடித்தேடி நுணுகி ஆய்ந்து சேகரித்து, மிகவும் ரசித்து இந் நூலை உருவாக்கி இருக்கிறார் ஆசிரியர்.

'தேச பக்திப் பாடல்களில் மட்டும், அவனுக்கு இருந்த தாயுள்ள உணர்வுகளைச் சுவைத்துக் காட்டுவதன் நோக்கம்.. நமது மாணவ, மாணவிகளுக்குத் தேசபக்தியூட்ட வேண்டும்' என்ற ஆசிரியரின் எண்ணம் இந்நூலை மாணவ மாணவிகள் படிக்கும் வாய்ப்பு ஏற்பட்டால் நிச்சயம் நிறைவேறும்.

சமூக சீர்த்திருத்தம், விடுதலை, மொழிப்பற்று, அரசியல் சகல துறைகளிலும் பெண்ணினம் சமபங்கு பெற வேண்டுமென வலியுறுத்தியவன் பாரதி.

இக்கருத்துக்களை முறையாகத் தொகுத்து ஏற்றமான முறையில் எழுதி இருக்கிறார் ஆசிரியர். சிறந்த ஆய்வு, பயனுள்ள நூல்.

பாரதி என்னும் கடலில் கண்டெடுத்த முத்து இது. அதுவும் நன்முத்து.

## நீல நெருப்பு

(ஆசிரியர்: கல்வி கோபால கிருஷ்ணன், வெளியீடு: நியூ செஞ்சரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், சென்னை - 600 098, விலை ரூ.5.00, பக்கம்.52)

சாண எரிவாயுக் கருவி அமைக்க விரும்புவோருக்கு மிகவும் பயன் உள்ள நூல் இது.

ஒரு வீட்டில் சாண எரிவாயுக் கருவி நிறுவி விட்டால், அந்தக் குடும்பம் ஆண்டு ஒன்றுக்கு மூன்று பெரிய மரங்களை நட்ட (வெட்டுவதைத் தவிர்த்த) புண்ணியம் கட்டிக் கொள்ளுமாம்.

இரண்டு மூன்று ஜதை மாடு உள்ளவர்கள்கூட இக் கருவியை அமைத்துக் கொள்ள முடியுமாம். இதனால் மரம் அழிவதைத் தடுக்க முடிகிறது. சமையலின் போது புகை கிளம்பித் துன்பம் தருவதில்லை; பாத்திரங்களில் கரி பிடிக்காது. மிக விரைவாக சமையல் ஆகிவிடுகிறது. எரிவாயு எடுக்கப்பட்ட சாணம் வயல்களுக்குச் சிறந்த எருவாகப் பயன்படுகிறது.

இத்தகைய அரிய நன்மை பயக்கும் சாண எரிவாயுச் சாதனம் அமைக்க முதன் முதலில் ஆகும் செலவுதான் அதிகமாக(ரூ.5,010) ஆகிறது, ஆனால் கதர் கிராமத் தொழில் வாரியம் இதற்கு மானியம் வழங்கி உதவி புரிகிறது.

இக்கருவியை அமைக்க விரும்புவோருக்கு விண்ணப்ப பாரத்தின் மாதிரியிலிருந்து செலவுகள் அமைக்கும் வழிமுறைகள் யாவும் அட்டவணைகள், படங்கள் மூலம் மிகத் தெளிவாகக் கூறப்பட்டிருக்கின்றன.

உள்ளே 'நீல நெருப்பு' என்று இதன் தலைப்பு உள்ளது. வெளி அட்டையிலோ 'நில நெருப்பு' என்று இருக்கிறது. இந்நூலின் தலைப்புதான் என்ன? அடுத்த பதிப்புகளிலாவது இக்குறையை நீக்க வேண்டும்.

## முதல் உதவி

(ஆசிரியர்: கலவை மு.முபாரக் அலி, வெளியீடு: நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், சென்னை-600 098, விலை ரூ.5 பக்கம்:91.)

முதல் உதவி பற்றி அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும் என்ற அக்கறையோடும் வர்ணிப்போடும் எழுதப்பட்ட நூல் இது.

மின் அதிர்ச்சி,வெயில் அதிர்ச்சி பாம்புக்கடி, தேள்கடி, பூராண் கடி, நாய்க்கடி, மாரடைப்பு, மூச்சடைப்பு, விக்கல், புரையேறுதல் போன்ற விபத்துகளுக்கு உடன் முதலுதவி செய்து பாதிக்கப்பட்டவர்கள் உயிரைக் காப்பாற்ற வேண்டியது அவசியம்.

அவர்களுக்கு உடனடியாகச் செய்ய வேண்டிய எளிய மருத்துவ முறைகளையும் அனைவரும் அறிந்து கொள்ளும் வண்ணம் எளிய முறையில் படங்களுடன் சிறப்பாக விவரித்து இருக்கிறார் ஆசிரியர்.

முதல் உதவியின் நன்மைகளையும், அதன் முறைகளையும் பள்ளி மாணவர்கள் அனைவருக்கும் கட்டாயமாகக் கற்பிக்க வேண்டும். இதனால் விபத்துக்களினால் ஏற்படும் உயிர்ச்சேதங்களை ஓரளவாவது குறைக்க முடியும்.

ஒவ்வொருவரும் படித்துப் பயன்பெற வேண்டிய நல்ல நூல் இது.

## உண்மையின் சிறகுகள்

(ஆசிரியர்: மாமணி எண்ணதாசன், வெளியீடு: முகம் வெளியீடு, எண்.18-68வது தெரு, கருணாநிதி நகர், சென்னை-600 078, விலை ரூ. 5.50, பக்கம்.78)

பலர் ஏற்கெனவே கையாண்ட தலைப்புகள் பலவும், புதியவை சிலவும் கொண்ட உரைவீச்சு (அப்படித்தான் ஆசிரியர் குறிப்பிடுகிறார்) இது.

சுவைபட சொல்லப்பட்டிருக்கும் இக்கருத்துக்கள் அனைத்துமே அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டவையே.

காதல் ஏக்கப் புலம்பல்கள் ஏதுமின்றி இன்றைய பிரச்னைகளைப் பேசும் புதுக்கவிதைகள் இவை.

## ஒரு தெருப்பாடகனின் பாடல்கள்

(ஆசிரியர்: மாங்குயில் பழனி சுந்தரேசன், வெளியீடு: நியூ செஞ்சரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், சென்னை-98. விலை ரூ.6.00 பக்கம்.104)

மரபு வழிக் கவிதைகள், நாட்டுப் பாடல்கள் மாதிரியான பாடல்கள் இசைப்பாடல்கள் கொண்ட நூல்.

நாட்டுப்பாடல் வடிவில் பாடப்பட்டுள்ளவை நல்ல உரையாடல்களாய்ப் பாடப்பட்டுள்ளன.

இப்பாடல்களில் பல இதழ்களில் வெளியிடப்பட்டவை, சில வானொலியில் ஒலிபரப்பப்பட்டவை.

இந்நூலை இயற்றிய கவிஞர் ஓர் இயக்கத்தில் மிகவும் ஈடுபாடு கொர்ண்டவர் என்பதை பெரும்பாலான கவிதைகள் பிரதிபலிக்கின்றன.

சில கவிதைகள் வாய்விட்டுச் சிரிக்க வைக்கின்றன. சில கவிதைகள் கண்கலங்க வைக்கின்றன.

பல கவிதைகள் மேடைகளில் பாட ஏற்றவையாய் இருக்கின்றன.

## தியாக மூர்த்தி பண்டித மோதிலால் நேரு

ஆசிரியர்: வே.சாமிநாத சர்மா,
வெளியீடு: அல்லயன்ஸ் கம்பெனி,
தபால் பெட்டி எண்.617
மயிலாப்பூர், சென்னை-600004.
விலை: 5.25 பக்கம்: 72

சுதந்திரப் போராட்ட வீரரும், தியாகியுமான பண்டித மோதிலால் நேருவின் சரிதம், அவரது மறைவிலிருந்து துவங்கி அவரது வாழ்க்கைவரலாற்றை மிக எளிய முறையில் அழகாகச் சொல்லி இருக்கிறார் ஆசிரியர்.

பதினெட்டுப்பக்கங்களில்மோதிலாலின் வாழ்க்கை வரலாற்றைச் சொல்லிவிட்டு, அவர் மறைந்த பின்னர் அவரைப் பற்றி காந்தியடிகள், மாளவியா போன்ற பெருந்தலைவர்கள் வெளியிட்ட கருத்துக்கள், பல்வேறு அமைப்புகளின் அனுதாபச் செய்திகள், இந்தியாவில் முக்கிய நகரங்களின் மக்கள் அவர் இறந்த செய்தி கேட்டு எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள், பத்திரிகைகளின் புகழுரைகள், சிரார்தச் சடங்குகள் நடந்த விதம், ஜவகரின் நன்றி உரை, இறுதியில் மோதிலால் நேருவின் மணிவாக்கு ஆகியவை அழகாகத் தொகுக்கப்பட்டிருக்கின்றன.

மோதிலால் பற்றி முழுமையாக அறிந்து கொள்ள இந்நூல் பெரிதும் உதவும்.

## அமர ஜோதி

ஆசிரியர்: த.நா.சேனாபதி,
வெளியீடு: அல்லயன்ஸ் கம்பெனி
தபால் பெட்டி நெ. 617,
மயிலாப்பூர், சென்னை-600004.
விலை: 6.25 பக்கம்: 84

அமரஜோதி என்ற அழகான தலைப்புகொண்ட இந்நூல், காந்தியடிகளின் வாழ்க்கை வரலாறாகும். சிறுவர்களுக்கு ஏற்ற வகையில், ஒவ்வொரு சம்பவமும் மனதில் படும்படியாக எழுதப்பட்டிருக்கிறது.

நூலின் இறுதியில் காந்தியடிகளின் மறைவைத் தாங்கிக் கொள்ள இயலாத உலகத் தலைவர்களின் அனுதாபச் செய்திகள் காந்தியடிகள் பல சந்தர்ப்பங்களில் வலியுறுத்திக் கூறிவந்த மணிமொழிகள், வந்தேமாதரம் பாடல், காந்தியடிகளுக்கு மிகவும் பிடித்தமான வைஷ்ணவ ஜனதோ பாடல் ஆகியவையும் தொகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. தேசப்பிதா எனப் போற்றப்படும் அண்ணலைப் பற்றி நம் குழந்தைகள் ஒவ்வொருவரும் தெளிவாய் அறிந்து கொள்ள உதவும் இந்நூல்.

— அ. மருதவிநாயகம்

## வேலை வாய்ப்பிற்கு 1000 வழிகள்

தொகுப்பு : தமிழப்பன்,
வெளியீடு: புத்தகப் பூங்கா
29, நல்லண்ண முதலி தெரு
இராயப்பேட்டை,
சென்னை-14.
விலை : ரூ. 10. பக்கம்: 125

படித்த இளைஞர்கள் வேலை தேடி அலையும் காலம் இது. படிப்புக்குத் தகுந்த வேலை கிடைக்காமல், கிடைத்தவேலையில் நுழைபவரும் உண்டு. இந்நிலை ஏற்படாவண்ணம் இன்னின்ன வகையில் பயின்றால் இன்னின்ன தொழில்களில் சேர வாய்ப்பு உண்டு என்பதை விளக்கிடும் நூல் இது.

மாணவர்கள் இந்நூலை அவசியம் பார்க்க வேண்டும்.

*சத்திய நெறியில் நின்று, அச்சம் என்பது சிறிதும் இல்லாமல் அதர்மத்தைக் கண்டவிடத்து அதனுடன் போர்புரிந்து நிற்கிறவனே உண்மையான சத்தியாக்கிரகி!*

—ராஜாஜி

## உணவும் சுகவாழ்வும்:

ஆசிரியர் : டாக்டர் சேஷாத்திரி நாதன்.
வெளியீடு: அல்லயன்ஸ் கம்பெனி
மயிலாப்பூர்,
சென்னை-4.
விலை: ரூ. 8. பக்கம்: 104.

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பார்கள். நோய்நொடியின்றி வாழ்வதற்குச் சத்தான உணவு அவசியம். அத்தகைய உணவு வகைகளை இந்நூலாசிரியர் தெளிவுபடக் கூறியுள்ளார். அத்துடன் வைட்டமின்கள் பற்றியும், அவற்றின் வரலாறுகள் குறித்தும் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன. மேலும் வைட்டமின் குறைவினைத் தவிர்க்கும் முறைகளும் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன: ஒவ்வொருவரும் படிக்க வேண்டிய பயனுள்ள நூல்.

## அன்னை கஸ்தூரி:

ஆசிரியர் : எம். எஸ். சுப்பிரமணியன்.
வெளியீடு: அல்லயன்ஸ் கம்பெனி
மயிலாப்பூர்,
சென்னை-4.
விலை : ரூ. 8. பக்கம்: 104

அண்ணல் காந்தியடிகளுக்கு அல்லும் பகலும் உறுதுணையாக இருந்து அவர் இன்பத்திலும் துன்பத்திலும் பங்கு கொண்டவர் அன்னை கஸ்தூரிபாய்.

காந்தியடிகள் பேரும் புகழும் பெறுவதற்கு அன்னை கஸ்தூரிபாய் ஒரு பக்கபலம். 'அவள் என்னை இயக்குகிறாள். வெறெவரும் அவ்வாறு இயக்க இயலாது' என்று அண்ணலே ஓரிடத்தில் கூறியிருப்பதை நாம் கவனிக்க வேண்டும்.

குழந்தைகள், பெரியவர்கள் யாவரும் படித்துப் பயன்பெறத்தக்க எளிய இனிய நடையில் எழுதப் பெற்றுள்ள வாழ்க்கை வரலாற்று நூல் இது.

— பி. வி. கிரி



# ஈரோடு கூட்டுறவு பால் பண்ணை

பெரியார் மாவட்டத்தில் விவசாயம், நெசவு, பால் ஆகியவை முக்கியத் தொழில்களாக நடைபெற்று வருகின்றன. ஈரோடு மற்றும் ஊத்துக்குளி நெய்க்குப் பெயர் பெற்ற நகரங்களாகும். முதலாவது, பால் பெருக்குத் திட்டம் இம்மாவட்டத்தில் அமல்படுத்துவதற்கு முன்னதாகத் தனியார் வர்த்தகர் குறிப்பாக நீலகிரியில் மற்றும் நம்பீசன் பால் வர்க்கத்தில் செயல்பட்டு வந்தனர். தற்பொழுதும் அவர்கள் பால் பொருட்களைப் பெங்களூர், மங்களூர் ஆகிய நகரங்களுக்கு அனுப்பி வருகின்றனர்.

பால் உற்பத்தி, பால் சேகரம் மற்றும் விநியோகத்தை மேம்படுத்துவதற்கான பால்பெருக்குத் திட்டம் தேசீய பால்வள வாரியத்தின் மூலமாக அமல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் மூன்றடுக்கு ''ஆனந்த் மாதிரி எனப்படும் கிராம அளவிலான பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களும், பல்வேறு உறுப்புச் சங்கங்கள் சேர்ந்த மாவட்ட அளவிலான கூட்டுறவுப் பால் உற்பத்தி ஒன்றியங்களும், மாநில அளவில்பல்வேறுமாவட்ட ஒன்றியங்கள் இணைந்த கூட்டுறவுப்பால் உற்பத்தியாளர் இணையமும் ஆரம்பிக்கப்பட்டன. பால் பெருக்குத் திட்டத்தின் கீழ் ''ஆனந்த் மாதிரி'' முறையிலான பெரியார் மாவட்ட கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் இம்மாவட்டத்தில் பல்வேறு கிராமங்களில் தனியார் பால் வர்த்தகர்களின் கடும் போட்டியினையும் சமாளித்துக் கொண்டு 1973 ஆம் ஆண்டு முதல் பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களைத் தோற்றுவிக்க ஆரம்பித்தது. பெரியார் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் 1975ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 7 ஆம் தேதி பதிவு செய்யப்பட்டது. இந்த ஒன்றியம் ரூபாய் 25 இலட்சத்தைப் பங்கு மூலதனமாகக் கொண்டு 1976ஆம் ஆண்டு ஜூலை 1 ம் தேதி முதல் செயல்படத் தொடங்கியது.

மாவட்டக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் பால்வளக் கூட்டமைப்புத் தொழிற்கூடம் ஈரோட்டிலிருந்து 12கி.மீ. தொலைவில் சித்தோட்டிற்கும் பவானிக்கும் இடையில் அமைப்பதற்காக 65 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டது. நிலத்தின் மொத்த விலையான ரூபாய் 3 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் உறுப்புச் சங்கங்கள் வழங்கிய நிதியிலிருந்து பெறப்பட்டது. ஒன்றியத்திற்காக வாங்கிய 65 ஏக்கர் நிலத்திலிருந்து 10 ஏக்கர் நிலப்பரப்பு தேசிய பால்வள வாரியத்தின் தென் மண்டலச் செயல் விளக்கத்தீற்காகக் கொடுக்கப்பட்டது.

பால் பண்ணை நாளொன்றுக்கு 1 இலட்சத்து 50 ஆயிரம் லிட்டர் பாலைப் பதப்படுத்தும் திறன் கொண்டதாகும். 526 சொசைட்டிகளில் இருந்து தற்போது இந்த பால்பண்ணைக்குப் பால் வந்து கொண்டிருக்கிறது. மாவட்டத்தின் தெற்கு மற்றும் வடக்குப் பகுதிகள் மையப் பண்ணையில் இருந்து தொலைவில் அமைந்துள்ளதால் அப்பகுதிகளில் இருந்து சேகரிக்கப்படும் பாலைப் பதப்படுத்துவதற்காகச் சத்ய மங்கலத்திலும், தாராபுரத்திலும் தினசரி 30 ஆயிரம் லிட்டர் பாலைக் கையாளும் திறன் கொண்ட பால் குளிருட்டும் நிலயங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சத்தியில் உள்ள பால் குளிரூட்டும் நிலையம் ஈரோட்டில் இருந்து 60 கி.மீ. தொலைவில் பவானி ஆற்றங்கரையில் 10 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. அதேபோல தாராபுரம் பால் குளிரூட்டும் நிலையம் சங்கராண்டம் பாளையத்தில் அமராவதி ஆற்றுப்படுகையில் 10 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

கா. சம்சுதீன்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
பெரியார் மாவட்டம், ஈரோடு.

மைய பால் பண்ணை 2 பால் குளிரூட்டும் நிலையங்கள் கால் நடை தீவன தொழிற்சாலை ஆகியவற்றை அமைப்பதற்கான திட்டத்திற்காக ரூபாய் 5 கோடியே 11 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் நீலகிரி, மதுரை, ஈரோடு, சேலம், செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தருமபுரி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் திருச்சி, புதுக்கோட்டை, தஞ்சை ஆகிய மாவட்டங்களிலும் பால் பண்ணைகள் தொடங்க இருக்கின்றன.

பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களில் சேகரிக்கப்படும் பால் 34 லாரிகள் மூலமாகப் பால் பண்ணைக்குக் கொண்டு வரப்படுகின்றன. பால் குளிரூட்டும் நிலையங்களில் சேகரிக்கப்படும் பால் ஒன்றியத்திற்குச் சொந்தமான குளிர்ச்சியைத் தக்க வைக்கும் விசேடப் பேருந்துகளின் மூலமாகப் பால் பண்ணைக்குக் கொண்டு வரப்படுகிறது.

உறுப்புச் சங்கங்களிலிருந்து பெறப்படும் பாலின் அளவு மற்றும் தரத்தைப் பொறுத்து பாலிற்கான பணம் ஒன்றியத்திலிருந்து 10 நாட்களுக்குவழங்கப்படுகிறது. பால் உற்பத்தியாளர்கள் சங்க உறுப்பினர்கள் தினசரி வழங்கும் பாலின் அளவு மற்றும் கொழுப்புச் சத்தின் அளவைப் பொறுத்து உறுப்பினர்களுக்கு வாரம் ஒரு முறை பால் பணம் வழங்கப்படுகிறது.

வெளியே இருந்து கொண்டுவரப்படும் பால் லாரிகளில் இருந்து கேன்கள் மூலம் இறக்கி வைக்கப்படுகிறது. குவாலிட்டி கண்ட்ரோல் என்ற இப்பிரிவு காலை 8 மணி முதல் 11 மணி வரையிலும், இரவு 8 மணி முதல் 11 மணி வரையும் இயங்கிவருகிறது. பால் கேன்கள் ஒரு சங்கிலித் தொடர் மூலம் எடுத்துச் செல்லப்படுகிறது. அங்கு பால் ஒரு தொட்டியில் கொட்டப்படுகிறது. அதில் பாலின் தரம் நிர்ணயிக்கப்படுகிறது. கொழுப்புச் சத்து எத்தனைச் சதவீதம் உள்ளதோ அந்த அளவுக்கு வாடிக்கையாளருக்குப் பணம்கிடைக்கும். ஒரு சதவீத கொழுப்புச் சத்திற்கு 44 காசு வீதம் வழங்கப்படுகிறது. இதனால் வாடிக்கையாளர்கள் அதிக அளவில் பாலில் தண்ணீர் கலக்க முடியாது. ஏனென்றால் தண்ணீர் கூடும் அளவிற்கேற்ப கொழுப்புச் சத்து குறைவாகவே காணப்படும்.

பால் நிரப்பிக் கொண்டு வரப்பட்ட வெற்றுக்கேன்கள் உட

னுக்குடன் விஞ்ஞான முறைப்படி சுத்தம் செய்யப்படுகிறது. பின்னர் பால் பதப்படுத்தும் பிரிவுக்குள் அனுப்பப்பட்டு பாலில் இருந்து வெண்ணெய் பிரித்தெடுக்கப்படுகிறது. கொழுப்புச் சத்து நீக்கப்பட்டபால்"சைலோ'' என்று கூறப்படும் ஒரு பெரிய டேங்கினுள்செல்கிறது. அது ஒவ்வொன்றும் 30 ஆயிரம் லிட்டர் பால் கொள் திறன் உடையது. இப்படி 5 டேங்குகளில் 1 இலட்சத்து 50 ஆயிரம் லிட்டர் பால் கொள்திறனைக் கொண்டுள்ளது. பின்னர் பாலில் இருந்து 40 சதவீத வெண்ணெய் பிரித்து எடுக்கப்படுகிறது. 1 லிட்டர் பாலில் 6 சதவீதம் வெண்ணெய் அதாவது 60 கிராம் வெண்ணெய் எடுக்கப்படுகிறது.



ஒரு பக்கம் வெண்ணெய் கட்டிகளாகக் கொட்டப்படுகின்றது. மற்றொரு பக்கம் பாக்கெட் போடும் பேப்பர் எந்திரத்திற்குள் செல்கிறது. ஒரே நேரத்தில் 500 கிராம், 200கிராம் வெண்ணெய் சதுர அளவாக வெட்டப்பட்டு அதன்மேல் பேப்பர் சுற்றப்பட்டு வெட்டி ஒட்டப்பட்டு பேக் செய்த நிலையில் வெளியே வந்து விழுகின்றன.

பால் எந்த அளவிலும் கெட்டுப் போகாத அளவுக்கோ உபயோகமற்று கீழே போடும் அளவுக்கோ எந்தப் பகுதியும் வேஸ்ட் ஆகாத அளவுக்கு அனைத்து வகையிலும் பால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. வெண்ணெய் பாக்கெட்டுகள் கெட்டுப் போகாத அளவுக்கு முதலில் 4 டிகிரி வெப்ப நிலையிருக்கிறது. இப்படி பாக்கெட்டுகள் வைக்கப்படுவதால் வெண்ணெயி லுள்ள நீர் வற்றி கெட்டியாகி விடுகிறது. அதன் பின் 18 டிகிரி குளிர் அறையில் பாதுகாக்கப்படுகிறது. சுமார் 6 மாத காலம் இந்த வெண்ணெய் பாக்கெட்டுகள் பாதுகாப்பாக இருக்கும்.

பவுடர் பல்வேறு அளவுகளில் பாக்கெட்டு போடப்பட்டு குடோனில் சேமித்து வைக்கப்படுகின்றது. 400 டன் பால்பாக்கெட்டுகள் கொள்ளளவு கூடிய இரண்டு குடோன்களில் 800 டன் பால் பாக்கெட்டுகள்கொள்ளளவுகூடிய இரண்டு குடோன்களில் 800 டன் பால் பாக்கெட்டுகள் சேமித்து வைக்கப்படுகின்றன.

பால் அதிக அளவில் பண்ணைக்கு வந்து சேரும்போது அவைகளைப் பதப்படுத்தி பால் பவுடர் ஆக்கி வைக்கலாம். ஒரு குறிப்பிட்ட காலத்தில் கறவை மாடுகளுக்குப் பால் வற்றி விட்டால் பண்ணைக்குப் பாலின் வரத்து சற்று குறைந்துவிடும். அப்போது வழக்கமாகத் தேவைப்படும் பாலின் அளவைச் சரிக்கட்ட பால் பவுடரையும் வெண்ணையும் சேர்த்து மீண்டும் பாலாக்கிக் கொள்ளலாம்.

வெண்ணெய், நெய், ஸ்கிம் பால் பவுடர் கேசின் கொழுப்பு உட்பட பால் பவுடர் ஆகியவைகள் இங்கு தயாரிக்கப்படுகின்றன. 1984ஆம் ஆண்டு மட்டும் வெண்ணெய் 985 மெட்ரிக் டன்னும் நெய் 340 மெட்ரிக் டன்னும் ஸ்கிம் பால் பவுடர் 911 மெட்ரிக் டன்னும் கேசின் 1.5 மெட்ரிக் டன்னும் கொழுப்பு உட்பட பால்பவுடர் 1.2 மெட்ரிக் டன்னும் இங்கு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிலேயே கிளைச் சங்கங்களில் இருந்து அதிக பட்சத் தொகையாக ரூபாய் 3 இலட்சத்தை இந்த ஒன்றியம் பெற்றுள்ளது.

பால் உற்பத்தியாளர்கள் சங்கம் தொடங்கத் தேவையான பால் பரிசோதனை உபகரணங்கள் அமிலங்கள் மற்றும் எழுது பொருட்கள் இந்த ஒன்றியங்களின் மூலமாக இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. அதேபோல ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்ட பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களுக்கும் இலவசமாகப் பால் கொள்முதல் கலன்களும் மற்றும் அமிலங்களும் இந்த ஒன்றியத்தால் இலவசமாக வழங்கப்படுகிறது. தற்போது பால் பரிசோதனையை எளிதாகவும் விரைவாகவும் அதேசமயம் பாலில் உள்ள சத்து விகிதத்தினை துல்லியமாகவும் கணக்கிட மின் அணு இயல் பரிசோதனைக் கருவிகள் தருவிக்கப்பட்டு ஒவ்வொரு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களுக்கும் பகுதி மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் மின்னணு இயல் பரிசோதனை பராமரிக்கும் செலவினங்களை இந்த ஒன்றியமே ஏற்கிறது.

மேலும் பால் பண்ணையை 414 இலட்சம் ரூபாய் செலவில் விரிவுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான நிதி பாரத பால் வள நிறுவனத்தால் ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கான திட்டம் மேம்பாடு மற்றும் ஆரம்பிக்கும் பொறுப்பைத் தேசிய பால்வள வாரியம் மேற்கொண்டுள்ளது.

சென்னை நகரின் பால் தேவையைச் சமாளிப்பதற்காக இந்தப் பால் பண்ணையிலிருந்து பால் குளிர்ச்சியைத் தக்க வைக்கும் திறன் கொண்ட ரயில் பெட்டிகள் மூலம் தினசரி சென்னைக்கு 40 ஆயிரம் லிட்டர் பால் ஈரோட்டிலிருந்து ஏர்க்காடு எக்ஸ்பிரஸ் மூலம் கொண்டு செல்லப்படுகிறது.

பெரியார் மாவட்டத்தின் பால் விற்பனை நிர்வாகத்தைப் பண்ணையே ஏற்றுக் கொண்டுள்ளது. சென்னை மற்றும் பிற இடங்களுக்கு அனுப்பப்படும் பால் மற்றும் பாலின் உபபொருட்களின் விற்பனை தமிழ்நாடு கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் இணையத்தின் மூலம் செயல்பட்டு வருகிறது. தற்சமயம் வெண்ணெய், நெய், பால் பவுடர் ஆகியவை மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கின்றன. உள்ளூர் விற்பனைக்காகப் பால் கோவா மற்றும் நறுமணப் பாலும் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி தாய்சேய் நலத் திட்டம் என்ற பெயரில் புதிதாக ஒரு திட்டத்தை இப்பால் பண்ணை சார்பில் ரூ. 9 கோடி செலவில் தொடங்கப்பட இருக்கிறது.

இத்தகைய சிறப்புமிகு பால் பண்ணையை மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் கடந்த 11.11.81 அன்று திறந்து வைத்தார். தற்போது இப்பால் பண்ணையின் பெருந்தலைவராகடி.வள்ளல் முன்னின்று சிறப்பாக நிர்வகித்து வருகிறார்.





மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் 16.12.85 அன்று சென்னைக்கு வருகை தந்தார். பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்றார்.








கல்பாக்கத்தில் உள்ள அணுமின்சார நிலையத்தில் உருவான புதிய அணு உலையைத் தொடங்கி வைத்து, அணுமின் நிலைய ஆராய்ச்சி நிலையத்திற்கு மறைந்த பிரதமர் இந்திரா காந்தி அவர்களின் பெயர் சூட்டினார். விழா நினைவாக மரக் கன்று நட்டார். மேதகு தமிழக ஆளுநர் திரு. எஸ். எல். குரானா அவர்களும், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களும் விழாவில் கலந்து கொண்டார்கள்.

மணலி எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் ரூ. 170 கோடியில் உருவாகியுள்ள விரிவாக்கத் திட்டத்தை மாண்புமிகு பிரதமர் அவர்கள் தொடங்கி வைத்தார்.






சேத்துப்பட்டில் உள்ள கிறிஸ்தவக் கல்லூரி மேனிலைப் பள்ளியின் 150 வது ஆண்டு விழாவில் பங்கேற்று, அதன் நினைவாகக் கட்டப்படவிருக்கும் புதிய கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டினார்.








அனாதைக் குழந்தைகள் காப்பகமான பாலமந்திர் விழாவில் பங்கேற்றார்.



'கலாச்சேத்திரா' வின் பொன் விழாவில் கலந்து கொண்டார்.

தமிழரசு பொங்கல் மலரில் மாணபுமிகு முதல்வர் டாக்டர் எம் ஜி ஆர் அவர்களின் வண்ணப் படத்தோடு, 1986-ஆம் ஆண்டுக் காலண்டர் இணைக்கப்படும். வாங்கிடத் தவறாதீர்!



# ஹாலி தரிசனம்



ஹாலி வால்நட்சத்திரம் பூமியை நெருங்கி விட்டது. ஹாலியைத் தரிசிப்பதற்கு விஞ்ஞானிகளும், வானியல் ஆர்வலர்களும் தங்கள் தொலைநோக்கிகளைத் திருப்புகின்றனர்; பல்வேறு நாடுகளின் விண் கலங்கள் இந்த ஹாலி வால்நட்சத்திரத்தை மிகவும் அருகிலிருந்து ஆராய்வதற்குத் தயாராகின்றன.

சுமார் 75 ஆண்டுகளுக்கு ஒருமுறை மட்டுமே காட்சி தரும் இந்த விந்தை வால்நட்சத்திரம் கடந்த 22 நூற்றாண்டுகளில் 29 தடவைகள் தோன்றியுள்ளது. கடைசியாக இது1910-ஆம் ஆண்டில்தான் பூமியின் அருகேவந்தது. இப்போது மீண்டும் வருகிறது; இதன் பின் 2062-ஆம் ஆண்டு வரையில் அது மீண்டும் இந்தப் பக்கமே தலை காட்டாது; அல்லது வால் காட்டாது.

### வெறுங்கண்ணால் பார்க்கலாம்!

உலகெங்கிலுமுள்ள கோடிக் கணக்கான மக்கள் இந்த வால்நட்சத்திரத்தை வெறுங்கண்களாலேயே பார்க்க முடியும். வானத்திலே ஓர் ஒளி மிகுந்த பெரிய ஆச்சரியக் குறியைப் போலு அது தோற்றமளிக்கும்.

கிட்டத்தட்ட உலகின் எல்லாப் பகுதிகளிலும் இது தென்படும். குறிப்பாக பூமத்தியரேகை அருகிலும், அதற்குத் தெற்கே உள்ள பகுதிகளிலும் இதனை நன்கு பார்க்க முடியும். இன்னும் குறிப்பாகச் சொல்லப் போனால் 15டிகிரி தென் அட்சரேகைக்கும் 45 டிகிரி தென் அட்சரேகைக்கும் இடைப்பட்டுள்ள பகுதிகள்தாம் இந்த வால்நட்சத்திரத்தை நன்றாகப் பார்ப்பதற்கு வசதியான இடங்கள். தென் அமெரிக்கா, தெற்கு ஆப்ரிக்கா, ஆஸ்திரேலியா ஆகியவை இதில் அடங்கும்.

நிலவொளியோ அல்லது நகர்ப்புற விளக்குகளின் பிரதிபலிப்போ இல்லாத நிர்மலமான வானப் பகுதிகளில், ஹாலி வால் நட்சத்திரம் துல்லியமாகக் காட்சி தரும்.

இந்த ஆண்டின் இறுதியில் இதனை பைனாகுலர்கள் மூலமே பார்க்க முடியும்; ஆனால் 1986 ஜனவரி தொடக்கத்தில் இதன் ஒளி மேலும் அதிகரிக்குமாதலால், அப்போது இதனை வெறுங் கண்களாலேயே பார்க்க முடியும். அதன் பிறகு, பிப்ரவரி மாதத்தின் பிற்பகுதியில்தான் இது மீண்டும் வெறுங்கண்ணுக்குத் தென்படும். தினசரி அதிகாலையில் தொடுவானத்தில், சற்றே தென் கிழக்குப் பகுதியில் சூரிய உதயத்துக்கு 90 நிமிடங்களுக்கு முன்னதாக இதனைக் காணலாம்.



முதன் முதல் ஹாலி வால் நட்சத்திரத்தைக் கண்டு பிடித்து அறிவித்த எட்மண்டு ஹாலி படம்.

1986, ஏப்ரல் 11ந் தேதிதான் ஹாலி வால்நட்சத்திரம் பூமிக்கு மிக நெருக்கமாக வருகிறது. அன்றைய தேதியில், அதற்கும் பூமிக்கும் இடையிலுள்ள தூரம் 6 கோடியே 20 இலட்சம் கிலோ மீட்டர்களாக இருக்கும் (அதாவது சந்திரனுக்கும் பூமிக்கும் இடையிலான தூரத்தைப் போல பல மடங்கு); அப்போது மாலை வேளைகளில் தொடுவானத்தில் இந்த வால்நட்சத்திரம் உதயமாவதைப் பூமத்தியரேகைக்குத் தென் பகுதிகளில் உள்ளவர்கள் நன்றாகப் பார்க்க முடியும்; பின்பு இரவு முழுவதும் அது உச்சிவானத்தில் காட்சி தரும்.

பூமியின் வடபகுதிகளில் உள்ளவர்கள், இந்த வால்நட்சத்திரத்தைப் பொறுத்த வரையில், அவ்வளவாகக் கொடுத்து வைக்காதவர்கள் என்றே சொல்ல வேண்டும். ஏனென்றால் இப்பகுதிகளில் நள்ளிரவுக்குப் பின்புதான் இது உதயமாகும். தொடுவானப் பகுதியிலேயே இதுநீண்ட நேரம் இருக்குமாதலால், அப்பகுதியில் வாயுமண்டலத்தின் கூடுதல் களம் காரணமாக, இந்த வால்நட்சத்திரத்தின் ஒளி குறைந்து தோன்றும்.

ஏப்ரல் மாதத்தின் மத்தியிலிருந்து, ஹாலி வால்நட்சத்திரம் வானிலிருந்து மெல்ல மெல்ல மறையத் தொடங்கும். ஏப்ரல் 24-ந் தேதியன்று பூரண சந்திரகிரகணம் நிகழ இருக்கிறது. பூமியின் கிழக்குப் பகுதிகளில் வசிப்பவர்கள், அன்றைய தினம் இந்த வால்நட்சத்திரத்தை நன்றாகப் பார்க்க முடியும்.

### வால்நட்சத்திரம் என்பது என்ன?

வால்நட்சத்திரம் என்பது வாயுக்கள், தூசுக்கள், பாறைச் சிதறல்கள் இவற்றால் ஆனவை; சூரிய குடும்பம் உருவானபோது,

## விளையும் பயிர்:



திருச்சி, அரசினர் சையது முர்துஸா மேல் நிலைப்பள்ளியில் பயிலும் மாணவர் வி. அக்பர் அலி. இவர் கதை, கட்டுரை, கவிதை எழுதுவதில் ஆர்வங் காட்டுகிறார். இம் மாணவன் மேலும் வளர நாமும் வாழ்த்து வோம்!

**மாணவர் பக்கம்**

## இதோ, ஒரு செய்தி:

**சென்னை கன்னிமாரா நூலகம்**

1866 முதல் 1890 வரை சென்னை மாநில ஆளுநராகவிருந்த கன்னிமாரா பெருமகனால் 1890 மார்ச்சு 22ஆம் நாள் இந்நூலகத்திற்கு அடிக்கல் நாட்டப் பெற்று அவர் பெயரையே கொண்ட இந்த நூலகத்தில் இன்று ஏறக்குறைய 3 லட்சம் நூல்களைக் கொண்டுள்ளது. பொது நூலகச் சட்டத்தின்படி யார் நூல் வெளியிட்டாலும் இந்நூலகத்திற்கு அன்பளிப்பாக அந்நூலின் ஒருபடியினை அனுப்பி வைக்க வேண்டும். இந்த ஆணையின்படி ஆண்டு தோறும் இந்நூலகம் 14,000 நூல்களைப் பெறுகின்றது. 16 வயது நிரம்பிய எவரும் இங்குவந்து நூல்களை எடுத்து இலவசமாகப் படிக்கலாம். வீட்டிற்கு நூல் எடுத்துச் சென்று படிக்க விரும்புகின்றவர்கள் ஒரு நூலுக்கு ரூ. 20-00 காப்புத்தொகை கட்டி நூல்களை எடுத்துச் செல்லலாம்.



தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற—எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா
அமிழ்தில் இனியதடி பாப்பா—நம்
ஆன்றோர்கள் தேசமடி பாப்பா

—பாரதியார்



# இணையற்ற புகழ்பெற்ற இருவர்

இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவர் டாக்டர் ராஜேந்திரபிரசாத் பிறந்ததும் - கணிதமேதை ராமானுஜம் பிறந்ததும் இந்த டிசம்பர் மாதத்தில்தான்.

பாபு ராஜேந்திரபிரசாத் 1884 ஆம் ஆண்டு டிசம்பர் 3ஆம் நாளன்று பீகார் மாநிலத்தில் உள்ள ஸரன் மாவட்டத்தில் இருக்கும் ஜெராத் என்னும் கிராமத்தில் பிறந்தார்.

சட்டக் கல்வி படித்து, கல்கத்தா உயர்நீதி மன்றத்திலும் பாட்னா உயர்நீதிமன்றத்திலும் வழக்குரைஞராகப்பணிபுரிந்தார்.

உழவுத் தொழிலாளர்களின் துயர்நீக்க 1918ல் பீகாரில் இருக்கும் சம்பரானில் காந்தியார் ஒரு பெரும் போராட்டத்தை நடத்தி சிறையில் அடைக்கப்பட்டார்; உடனே அந்தப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்திவெற்றி கண்டு இரண்டாவது காந்தி என்று பாராட்டப்பட்டார் நமது ராஜேந்திரபிரசாத்.

அப்போது இந்திய விடுதலைக்காக நடத்தப்பட்ட பலபோராட்டங்களிலும் பங்கேற்ற பெருமையாளர் இவர். காந்தியடிகளாலும் நேருவாலும் போற்றிப் புகழப் பட்டவர். சிறந்த பேச்சாளராகவும் நல்ல எழுத்தாளராகவும் திகழ்ந்த இவர் கடைசி மூச்சவரை இந்தியா ஏற்றம் பெறப் பாடுபட்டு, 1963 பிப்ரவரி 22ல் உயிர் நீத்தார்.

கணித மேதை ராமானுஜம் 1888 டிசம்பர் 22 ஆம் நாள் ஈரோட்டில் பிறந்தவர். ஆனாலும், இவரது பெற்றோரின் பூர்வீகம் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த கும்பகோணம் ஆகும்.

கும்பகோணம் உயர்நிலைப் பள்ளியிலும் அரசினர் பள்ளியிலும் படித்த இராமானுஜர் இளமையிலேயே கணிதத்தில் மிகுந்த தேர்ச்சிபெற்று விளங்கினார்.

பிறகு அக்கவுண்டெண்ட் ஜெனரல் அலுவலகத்திலும், துறைமுக அலுவலகத்திலும் பணி புரிந்தார். பிரான்சிஸ் ஸ்பிரிங் என்பாரின் உதவியால் மேல்நாட்டுக் கணிதமேதைகளோடு இவருக்குத் தொடர்பு ஏற்பட்டது. உலகப் புகழ்பெற்றார்.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சி மாணவராக இருந்த இவர், அப்போது தமிழக ஆளுநராக இருந்த பெட்லண்டு பிரபுவின் உதவியால் இங்கிலாந்து சென்று கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து தனது கணித ஆராய்ச்சியைத் தொடர்ந்து-எம். ஆர்.எஸ். பட்டம் பெற்றார்.

1919ல் இந்தியா திரும்பிய இராமானுஜர், கொடிய காச நோய்க்கு ஆளாகி 1920 ஏப்ரல், 26ல் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

இவர்கள் இருவரும் இன்றில்லை என்றாலும், இவர்களுடைய புகழ்என்றென்றும் நிலைத்திருக்கும்!

—பீ. எல். ஆர்.



# நிச்சயம்



—தஞ்சை மணவழகன்

தினமும் கற்று வருவதால்
தேர்வில் வெற்றி நிச்சயம்
கனிவும் கொண்டு பழகினால்
களிப்பு உண்டு நிச்சயம்!

ஒன்று பட்டு வாழ்வதால்
உயர்வு உண்டு நிச்சயம்
தொண்டு செய்து வருவதால்
தேசம் ஓங்கும் நிச்சயம்!

ஊக்கம் கொண்டு உழைப்பதால்
ஆக்கம் உண்டு நிச்சயம்
வாக்கில் வாய்மை இருந்திடில்
வளர்ச்சி உண்டு நிச்சயம்!

நன்மை செய்து வாழ்வதால்
நாடு போற்றும் நிச்சயம்
உண்மை யாக உழைப்பதால்
உயர்வு உண்டு நிச்சயம்!



அவற்றிலிருந்து எஞ்சிய துண்டங்கள் என்றும் இவற்றைக் குறிப்பிடலாம்.

வால்நட்சத்திரத்தின் மைய உடல்பகுதி 'நியூக்ளியஸ்' என்று அழைக்கப்படுகிறது; இதில் அடங்கியுள்ள வாயுக்களும், திடப்பொருட்களும் சூரியனின் வெப்பத்தினாலும் கதிர்வீச்சினாலும் எதிர்ப்பக்கம் தள்ளப்படுவதால், இதற்கு வால்போன்ற பாகம் ஏற்படுகிறது. சூரிய ஒளியினால் தூண்டப்படும் வாயுக்கள் 'நியூக்ளியசை' சுற்றிலும் புகை மூட்டம் போன்ற ஓர் ஒளி வட்டத்தை உண்டாக்குகிறது. இது 'கோமா' என்று அழைக்கப்படுகிறது. வாயுக்கள் அதிகம் வெளியாகும் போது வால் பெருகிக் கொண்டே போகிறது;

சூரிய ஒளியினால் இது பளபளப்பாக ஒளிவிடுகிறது. ஹாலி வால் நட்சத்திரத்தின் முக்கிய உடற்பகுதியின் குறுக்களவு 8 கிலோ மீட்டர்கள் தான். ஆனால் இதன் வால்பகுதி பல ஆயிரக்கணக்கான கிலோமீட்டர்கள் வரை நீளக் கூடியதாகும்.

இந்த வால்நட்சத்திரம் சூரியனை விட்டு விலகி 38 ஆண்டுக் காலத்துக்கு விண்வெளியில் தொலைதூரத்தில் சஞ்சரிக்கிறது. மீண்டும் அது சூரியனை நோக்கித் திரும்பி வருவதற்கு மேலும் 38 ஆண்டுகள் பிடிக்கின்றன; அதாவது 76 ஆண்டுகளுக்கு ஒருமுறை தான் இது நமது பக்கம் தலை காட்டுகிறது! இது இவ்வாறு 76 ஆண்டுகளுக்கு ஒருமுறை திரும்பி வருகிறது என்பதை எட்மண்ட் ஹாலி என்னும் வானியல் வல்லுநர்தான் முதன் முதலாகஆராய்ந்தறிந்து உலகுக்கு அறிவித்தார். அதனால் அவரது பெயரே இந்த வால் நட்சத்திரத்துக்குச் சூட்டப்பட்டுள்ளது.

### அனைத்துலக இயக்கம்

ஹாலி வால்நட்சத்திரத்தை அறிவியல் பூர்வமாக ஆராய்வதற்கு ''அனைத்துலக ஹாலி ஆய்வு இயக்கம்'' ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமும்(நாஸா) மேற்கு ஜெர்மனியிலுள்ள எல்லாங்கன்-நூரெம்பர்க் பல்கலைக் கழகமும் கூட்டாக இதற்கு ஏற்பாடு செய்துள்ளன. இந்த இயக்கத்தில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகள் அங்கம் வகிக்கின்றனர்.

கலிபோர்னியாவில் பாசடேனா நகரிலுள்ள நாஸாவின் 'ஜெட் சுழற்சி ஆய்வுக் கூடத்திலும்' நூரெம்பர்க் பல்கலைக் கழகத்திலும் இந்த இயக்கத்தின் இரட்டைத் தலைமையகங்கள் இயங்கும். ஹாலி வால்நட்சத்திரம் குறித்து உலகில் பல்வேறு இடங்களில் நடைபெறும் ஆய்வுகள் பற்றிய தகவல்களை இவை தொகுத்துத் தரும்.

### வால்நட்சத்திரத்தை துளைத்த விண்கலம்

''இண்டர்நேஷனல் காமெட்டரி எக்ஸ்பிளோரர்'' (அனைத்துலக வால்நட்சத்திர ஆய்வுக் கோள்) என்னும் பெயர்கொண்ட அமெரிக்காவின் தானியங்கி விண்கலமொன்று ''ஜியோகேர்பினி-ஜின்னர்'' என்னும் வால்நட்சத்திரத்தின் வாலைத் துளைத்துச் சென்றது.

கடந்த செப்டம்பர் 11ந் தேதியன்று இந்தச் சாதனை நிகழ்த்தப்பட்டது. மனிதனால் தயாரிக்கப்பட்ட சாதனமொன்று வால்நட்சத்திரம் ஒன்றுடன் தொடர்பு கொண்டது மனித குல வரலாற்றிலேயே இதுதான் முதல் தடவையாகும்.

'ஹாலி' வால்நட்சத்திரத்தை நெருங்கி ஆராய்வதற்கு 'ஆஸ்ட்ரோ' என்னும் புதிய வானியல் ஆய்வுக்கூடத்தை அமெரிக்கா விண்வெளியில் செலுத்தும்; ஒருங்கிணைந்த 3 நவீன தொலைநோக்கிகள் பொருத்தப்பட்ட இந்த ஆய்வுக் கூடம், அமெரிக்க விண்வெளி ஓடத்தில் வைத்து அனுப்பப்படும்.

''ஆஸ்ட்ரோ'' ஆய்வுக்கூடத்தைத் தாங்கிய இந்த விண்வெளி ஓடம் 1986 மார்ச் 6ந் தேதி விண்வெளியில் ஏவப்படும். விண்ணில் அது 7நாட்கள் சுற்றிவரும். அதன் ஆய்வுகள் முழுவதும் முழுக்க முழுக்க ஹாலி வால் நட்சத்திரத்தைப் பற்றியதாகவே இருக்கும்.

புற உளதாக்கதிர்களினிடையே 'ஹாலி' அடையும் மாற்றங்கள் பற்றி 'ஆஸ்ட்ரோ' ஆய்வுக் கூடம் ஆராயும் (பூமியின் வாயு மண்டலத்தினால் வடிகட்டப்பட்டு விடுவதால், இந்தப் புற உளதாக்கதிர்கள் நமது கண்களுக்குத் தென்படுவதில்லை).

''ஆஸ்ட்ரோ'' ஆய்வுக் கூடத்திலுள்ள ஒரு டெலஸ்கோப், ஹாலியின் இரசாயனத் தன்மைகளை ஆராயும்; இன்னொரு டெலஸ்கோப் அதன் வால் பகுதியில் தூசு எப்படி உருவாகிறது, அழிகிறது என்பதைக் கண்காணிக்கும். சூரியனின் கதிரியக்கத்தினால் ஹாலி வால்நட்சத்திரத்தில் ஏற்படக் கூடிய மாற்றங்களை மூன்றாவது தொலை நோக்கி ஆய்வு செய்யும். ஹாலியின் வால் பகுதியைப் புகைப்படமெடுப்பதற்காக, இரு புகைப்பட கேமராக்களும் அந்த ஆய்வுக்கூடத்தில் வைக்கப்பட்டிருக்கும்.

### பயனீர்' ஆய்வு

சுக்கிரன் கோளை, 1978-ஆம் ஆண்டு முதல் சுற்றி வந்து ஆய்வு நடத்திக் கொண்டிருக்கும் 'பயனீர்' என்னும் அமெரிக்கச் செயற்கைக்கோளும் ஹாலி வால் நட்சத்திரத்தை ஆராயும்.

பயனீர் கோள் தனது ''புற உளதாக்கதிர் நிறப்பிரிகை'' சாதனத்தை ஹாலியை நோக்கித் திருப்பும். ஹாலியிலிருந்து வெளிப்படும் வாயுக்களையும் தூசுக்களையும் ஆய்வு செய்யும். சூரியனுக்கு மறுபுறத்தில் பயனீர் கோள் நிலைநிறுத்தப்பட்டிருப்பதால், ஹாலி வால்நட்சத்திரம் சூரியனை நெருங்கும்போது பயனீர் கோள் அதனை நன்கு வசதியாக ஆராய முடியும்.

அதேபோல அமெரிக்காவின் 'சோலார் மாக்சிமம் அப்சர்வேடரி' என்னும் சூரிய ஆய்வுச் செயற்கைக் கோளும் ஹாலி வால்நட்சத்திரத்தை ஆராயும். 1984ல் அமெரிக்க விண்வெளி ஓடத்தில் சென்ற வீரர்கள்,விண்வெளியிலேயே இந்தச் செயற்கை கோளைப்பழுது பார்த்துசாதனை நிகழ்த்தியது நினைவிருக்கலாம்.

''இன்டர்நேஷனல் அல்ட்ரா வயலட் எக்ஸ்புளோரர்'' எனப்படும் அமெரிக்காவின் மற்றோர் ''புறஊதாக்கதிர் ஆய்வுச் செயற்கைக்கோளும்'' ஹாலி வால்நட்சத்திரத்தைப் பற்றி பரிசோதனைகளை நடத்தும்.

ஐரோப்பிய விண்வெளி நிறுவனம் 'ஜியோட்டோ' என்னும் செயற்கைக் கோளை 1985 ஜூலை மாதத்தில் விண்வெளியில் ஏவி இருந்தது; ஹாலி ஆய்வுப் பணிகளுக்கென்றே தனிப்பட்ட முறையில் வடிவமைக்கப்பட்டதாகும் இது. 1986 மார்ச் 3ந் தேதி வாக்கில் இந்தச் செயற்கைக்கோள் ஹாலி வால் நட்சத்திரத்துக்குச் சுமார் 480 கிலோ மீட்டர்கள் அருகில் செல்லும். இது ஹாலியை நெருக்கமாகப் பரிசோதிக்கும்.

இந்தச் செயற்கைக்கோள் ஒரு விதத்தில் ஒரு ''தற்கொலைப் பயணத்தில்'' ஈடுபட்டிருப்பதாக விமரிசனம் செய்யும் விஞ்ஞானிகளும் உண்டு.

''ஜியோட்டோ'' செயற்கைக் கோள் ஹாலி வால்நட்சத்திரத்தை அதன் நேர் எதிர்த்திசையிலிருந்து அணுகும்; இரண்டும் ஒரு மணிக்கு 240,000 கிலோ மீட்டர்கள் என்னும் கூட்டு வேகத்தில் ஒன்றையொன்று சந்திக்கும். (இந்த வேகம் ஒரு துப்பாக்கிக் குண்டுபாயும்வேகத்தைப் போல 70 மடங்காகும்); இவ்வளவு வேகத்தில் அந்தச் செயற்கைக்கோள் வரும்போது, அதன் மீது சிறு தும்பு தூசு துளைத்துக் கொண்டு உள்ளே புகுந்தாலும் கூட, அதன் நுட்பமான கருவிகளுக்குக் கணிசமான சேதம் ஏற்படும். எனவே, இந்தச் செயற்கைக்கோள் தனது பணியை வெற்றிகரமாக முடித்துகொண்டு திரும்புவதற்கான வாய்ப்பு 50 சதவிதம்தான் உள்ளது என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

இந்தச் செயற்கைக்கோளுக்கு ஏதேனும் ஆபத்து நேரும் பட்சத்தில், ஏற்கெனவே அது சேகரித்து வைத்துள்ள தகவல்கள் அழிந்து விடாமல் இருப்பதற்காகப் புதிய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன்படி இந்தச் செயற்கைக்கோளின் நுட்பமான கருவிகள் சேகரிக்கும் தகவல்கள் அதிலேயே பதிவு செய்யப்படுவதற்குப் பதிலாக, உடனுக்குடன் பூமிக்கு அனுப்பி வைக்கப்பட்டு விடும்.

ரஷ்யா 1984 டிசம்பரில், விண்வெளியில் 'வேகா-1''வேகா-2' என்னும் இரு செயற்கைக் கோள்களை ஏவி இருந்தது. அவை 1985 ஜூன் மாதத்தில் சுக்கிரன் கிரகத்தின் மீது பறந்து சென்றன. அந்தக் கிரகத்தின் தரைப்பகுதியையும், வாயுமண்டலத்தையும் ஆராய்வதற்காகத் தலா ஒரு துணைக்கோளையும் ஒரு பலூனையும் சுக்கிரனில் இறக்கி விட்டன. இப்போது இந்த இரு செயற்கைக் கோள்களும் ஹாலி வால்நட்சத்திரத்தை நோக்கி முடுக்கி விடப்பட்டுள்ளன. 1986 மார்ச் 6 மற்றும் 9 தேதிகளில் இவை ஹாலியை நெருங்கும். அதற்குச் சில ஆயிரம் கிலோ மீட்டர்கள் தொலைவிலிருந்து அதனை ஆராயும்.

ஹாலி பற்றி ஆராய்ச்சிநடத்துவதற்காக ஜப்பான் கூட முதன் முறையாக ஒரு செயற்கைக் கோளை ஏவியுள்ளது. 'சாகிகேகே' என்னும் அந்தச் செயற்கைக்கோள் சில இலட்சம் கிலோ மீட்டர்கள் தொலைவிலிருந்து ஹாலியை ஆய்வு செய்யும்.

ஹாலி வால்நட்சத்திரத்தை வசதியான இடத்திலிருந்துகண்டுகளிப்பதற்காக பூமத்தியரேகைப் பகுதிக்கும், அதன் தென் பகுதிகளுக்கும் சிறப்புச் சுற்றுலாப் பயணங்களுக்குச் சில சுற்றுலா நிறுவனங்கள் ஏற்பாடு செய்துள்ளன.

ஆம். ஹாலி தரிசனம் பெரும்பாலும் வாழ்நாளில் ஒருமுறை மட்டுமே கிடைக்கக்கூடிய அரிய வாய்ப்பு; இதன் பிறகு 21-வது நூற்றாண்டின் மையப் பகுதியில் தான் இந்த வால்நட்சத்திரம் மீண்டும் தலைகாட்டும்; அப்போது அதனை வேறு நவீன கோணங்களில் ஆராய்வதற்கு ஒரு புதிய தலைமுறையினர் தயாராக இருப்பார்கள்.

—அமெரிக்கத் தகவல் நிலையம்

## சூரிய சக்தியை உபயோகிக்கும் கிராமம்

இந்தியாவில் முதலாவது சூரிய உபயோகிக்கும் கிராமம் லடாக்கில் உள்ளது. இமய மலையில் 4000 மீட்டர் உயரத்தில் உள்ள சோக்லம்சர் கிராமம்தான் அது இக்கிராமத்தில் சூரிய சக்தி, காற்று, சாணவாயு போன்றவைகளை உபயோகித்து எரிசக்தியைப் பெறுகிறார்கள். இங்குள்ள பசுமை வீட்டில் வெப்பத்தைப்பெற சூரிய சக்தி முறையை உபயோகப்படுத்துகிறார்கள்.

சூரிய சக்தியால் செயல்படும் தண்ணீரைச் சூடுபடுத்தும் கருவி, உலரவைக்கும் கருவி, சோறு தயாரிக்கும் பாத்திரம் (குக்கர்) போன்றவைகளும் இங்கு உள்ளது. இக்கிராமத்தில் ஒரு காற்றாலை அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாலையின்மூலம் சிந்து நதியிலிருந்து கிராமத்திற்குத் தண்ணீர் இறைக்கப்படுகிறது.

## மல்லிகைத் தோட்டம்

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் வாழும் விவசாயிகள் மல்லிகைத் தோட்டம் அமைத்திட, வங்கிகள் மூலம் கடனுதவி அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மண்டபம் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் உள்ள நொச்சி ஊரணி, மண்டபம், தங்கச்சி மடம், ஆற்றாங்கரை போன்ற கிராமப் பகுதியில் வாழும் விவசாயிகளின் முக்கிய தொழில் மல்லிகைத் தோட்டம் அமைப்பதே ஆகும்.

இப்பகுதி மக்களின் விவசாயத் தொழிலை மேம்பாடு செய்யும் நோக்கத்துடனும் இத்தொழில் செய்ய ஆர்வமுள்ள ஒவ்வொரு நபர்களுக்கும் ரூ. 5,000 வீதம் மானியத்துடன் கூடிய கடனாக வழங்கப்பட உள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்தில், மண்டபம் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் இருந்து வரும் மல்லிகைக்குப் பெருமளவு வரவேற்புள்ளது, மேலும் இங்குப் பயிரிடப்படும் மல்லிகைச் செடிக்கும் வெளிநாடுகளிலிருந்தும் நல்ல வரவேற்புள்ளது.

இந்த அரிய வாய்ப்பை இராமநாதபுரம் மாவட்டத்தில், மல்லிகை பயிரிடும் விவசாயிகள் பயன்படுத்திக் கொண்டு அரசு அளிக்கும் மானியம் மற்றும் கடனுதவிகளைப் பெற்று வளமுடன் வாழவேண்டும் என்றும், கடன் பெற விரும்புகிறவர்கள் மண்டபம் ஊராட்சி ஒன்றிய ஆணையர் அவர்களை அணுகுமாறும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு ராஜீவ் வால்யா, இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக் கொள்கிறார்.

# குட்டி ஜப்பான்!

ஆசியாவிலேயே பட்டாசு, தீப்பெட்டி தொழில் மற்றும் ஆப்செட் லித்தோ அச்சகங்களில் முதலிடம் வகிக்கும் சிவகாசி இம்மாவட்டத்தின் ஓர் அங்கம்!

சிறந்த முறையில் அமையப் பெற்றுள்ள சாலைப் போக்குவரத்து - செய்தித் தொடர்பு வசதி - தொழில் வளர்ச்சிக்குத் தேவையான அடிப்படைவசதிகள்- ஆங்காங்கே பரவிக் கிடக்கும் மாவட்டம் - அதுதான் காமராஜர் மாவட்டம்.

ஆலங்குளத்தில் ஒரு அரசு சிமெண்ட் தொழிற்சாலை; துலுக்கப்பட்டியில் ஒரு தனியார் சிமெண்ட் தொழிற்சாலை; ஆலங்குளத்தில் ஒரு சிமெண்ட் கூரைத்தகடு தயாரிக்கும்தொழிற்சாலை; ராஜபாளையம் பகுதியில் தனியார் நூற்பாலைகள்; விருதுநகரில் ஏராளமான எண்ணெய் வித்து ஆலைகள்....

இத்தகைய தொழில் வாய்ப்புகள் மாவட்டத்தில் ஒரு பக்கத்தில் இருந்தாலும், இன்னொரு பக்கமான அருப்புக்கோட்டை, திருச்சுழி, நரிக்குடி போன்ற மிகவும் பின்தங்கிய பகுதிகளும் இருக்கத்தான் செய்கின்றன. இப்பகுதியை முன்னேற்றத்தான் தமிழக அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள் எத்தனை எத்தனை!

காமராஜர் மாவட்டத்தில் 1985-86-ஆம் ஆண்டில் 13,127 பேருக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபாய் 4 கோடி வழங்கப்படும். இதில் 132 இலட்சம் அரசு மானியமாக வழங்குகிறது. இதுவரை 2518 பேருக்குக் கடன் வழங்கப்பட்டுள்ளது. கடன் வழங்கப்பட்ட தொகை ரூபாய் 154.28 இலட்சமும், மானியமாக ரூ. 51 இலட்சமும் வழங்கியுள்ளது. இவ்வாண்டு இறுதிக்குள் மீதமுள்ள கடன்களையும் வழங்கிட துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தீவிர வேளாண்மைப் பெருக்குத் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டில் 1100 சிறு விவசாயிகளுக்கு ரூபாய் 1.5 கோடி கடனாக வழங்கப்படுகிறது. இதில் அரசு ரூபாய் 49.50 இலட்சம் மானியமாக வழங்குகிறது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சிறு தொழில்களுக்கு, கடன் வழங்கும்படி அரசு அறிவுரை கூறியுள்ளது. கிராமப்புறங்களில் சைக்கிள் கடை,, ஒலிபெருக்கி நிலையம் வைப்பதற்கு நல்ல வரவேற்பு உள்ளது.

தேசிய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 771 பணிகள் இந்த ஆண்டு மட்டும் எடுத்துச் செய்யப்பட்டுள்ளது. இதற்கென ரூபாய் 128 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சத்துணவுக் கூடம் கட்டுதல், ஆதிதிராவிடர் வீடுகள் கட்டுதல், பள்ளிச் சமையல் அறை கட்டுதல் போன்ற பணிகள் இதில் அடங்கும்.

தேசிய கிராமப்புற நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு 488 வேலைகள் ரூபாய் 1.15 கோடி செலவில் செய்யப்படுகிறது. இதுவரை ரூபாய் 46.5 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டு மட்டும் ஆதிதிராவிடர்களுக்கு 721 வீடுகள் கட்டித் தரப்படும். வறட்சிக்கு இலக்காகும் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு மத்திய அரசு அனுமதியுடன் ரூபாய் 1.29 கோடி செலவிடப்படவுள்ளது. இதில் குடிதண்ணீர் வசதிக்கென 22 இலட்சமும், நீரூற்று ஏற்படுத்திட சிறிய பாசனத் திட்டத்தின் கீழ் சிறிய குட்டைகள், ஏரிகள் அமைத்திட ரூபாய் 17 இலட்சமும், பட்டு வளர்ப்புக்கு



ரூபாய் 19 இலட்சமும், கால்நடைப் பராமரிப்புக்கு ரூபாய் 16 இலட்சமும், மீன் வளர்ப்புக்கு ரூபாய் 17 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சமூகநலக் காடுகள் உற்பத்தி ரூபாய் 25 இலட்சம் செலவிடப்படும். 1980 எக்டேரில் இவை உருவாக்கப்படும். காமராஜர் மாவட்டத்தில் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலம் இந்த ஆண்டு 17,070 பேருக்கு ரூபாய் 20 கோடி கடனாக வழங்கப்படும். இதில் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1000 பேருக்கு ரூபாய் விவசாயக் கடனாக வழங்கப்படும். தொழில் வளர்ச்சிக்கு ரூபாய் 7 கோடி வழங்கப்படும். போக்குவரத்து போன்ற சேவை நிறுவனங்களுக்கு 1.79 கோடி வழங்கப்படும். குடிநீர் வடிகால் வாரியம் மூலம் கிராமப்புறங்களில் ரூபாய் 1.5 கோடி செலவில் 150 கிராமங்களில் குடிதண்ணீர் வசதி செய்து தரப்படும்.

இவ்வாறு தொழில்வளர்ச்சிக்கு முக்கியத்துவமும், முதலிடமும் கொடுக்கும் வகையில் புதிய இம்மாவட்டத்தில் பல்வேறு துரித நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுகின்றன. இப்புதிய மாவட்டம் முழுவதும் விரைவில் சிறு தொழில்கள் அமைப்பில் ''ஒரு குட்டி ஜப்பானாக'' விளங்கும் என்பதை எதிர்காலம் நிரூபிக்கப் போகிறது.

சிவகாசியில் உள்ள ஆயிரக்கணக்கான தீப்பெட்டித் தொழிற்சாலைகள், ஆப்செட், லித்தோ அச்சகங்களில் வேலை செய்யும் சிறுவர்களின் நலனும் இம்மாநில அரசாலும், மத்திய அரசாலும், 'யூனிசெப்' போன்ற நிறுவன உதவியாலும் வளர்க்கப்படுகின்றன. இந்த ஆண்டு மத்திய அரசு இச்சிறுவர்கள் நலனுக்கான திட்டங்களுக்கென ரூபாய் 136.97 இலட்சம் ஒதுக்கியுள்ளது. இதில் மாநில அரசு 46.41 இலட்சமும், யூனிசெப் நிறுவனம் 77.88 இலட்சமும் வழங்குகிறது. பொது மக்களிடமிருந்து ரூபாய் 12.68 இலட்சம் வசூல் செய்யப்படவுள்ளது. இத்தொகை மூன்று ஆண்டுகளில் செலவிடப்படும்.

இச்சிறுவர்களின் கல்வி நலனுக்கென முறைசாராப்பள்ளிகள் தோற்றுவிக்கப்பட்டு அவர்களுடைய கல்வி வளர்ச்சி அடிகோலப்பட்டுள்ளது. ஊதியத்துடன் கூடிய கல்வி இக்குழந்தைத் தொழிலாளர்க்கு வழங்கப்படுகிறது. இவர்களுக்கென சுகாதார வசதிகள் செய்து கொடுக்கவும், தங்கும் வசதி அமைத்துத் தரவும் பாதுகாக்கப்பட்ட குடிநீர்வழங்கவும் ஆவன செய்யப்பட்டுள்ளது. அகில இந்தியாவிலும் சிறுவர்கள் தொழிலாளர்களாய் அதிக அளவில் பணிபுரியும் இடம் இச் சிவகாசி நகரம்தான்!

சமீபத்தில் இவர்களின் நலனை ஆய்வு செய்யவந்த மத்திய அரசின் தொழிலாளர் நலச் செயலர் திரு.பட்நாதன் அவர்கள் குழு, இவர்களுக்கு மேலும் வசதிகளைச் செய்து தரவும், ஊதியத்தில் மாற்றம் செய்து தர வேண்டும் என்றும் கூறியுள்ளது. இவர்களது நலனில் மத்திய, மாநில அரசுகள் பெரிதும் அக்கறை கொண்டுள்ளது. இவர்களுக்கெனத் தீட்டப்படும் நல்வாழ்வுத் திட்டங்கள் இம்மாவட்டத்தில் விரைவில் அமல்படுத்தப்பட்டு, இக்குழந்தைத் தொழிலாளர்கள் வாழ்வில் ஒரு திருப்புமுனை ஏற்படும் என்று உறுதியாய் நம்புவோம்!

**எஸ். தீனதயாளன்**
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
காமராஜர் மாவட்டம்.



# சேலம் மாவட்டத்தில்

சேலம் மாவட்டத்தில் 1985 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் 1198 சிறு தொழில் பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. 60 தொழில்களுக்கு- 105 கைவினைஞர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

1985 அக்டோபர் திங்களில் வங்கி நிதி உதவி திட்டத்தின் கீழ் மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு கடன் வழங்கிட வங்கிகளுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 20 விண்ணப்பங்கள் மின் இணைப்புக்காகப் பெறப்பட்டு 20 தொழில்களுக்கும் மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1985-86ஆம் ஆண்டிற்குச் சேலம் மாவட்டத்திற்கான குறியீடு 1500 நபர்களாகும். விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 4948 ஆகும்.

சேலம் மாவட்டத்தில் 26,650 எக்டேர் பரப்பளவில் துவரை சாகுபடி செய்யப்பட்டு வருகின்றது. தற்போது துவரை நல்ல மகசூல் தரும் நிலையிலுள்ளது. ஒருமித்த பயிர்ப் பாதுகாப்பு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாமக்கல் வட்டாரத்தில் மோகனூர், கபிலர் மலை, வேலூர், பகுதிகளில் நெற்பயிரில் புகையான் தாக்குதலைக் கட்டுப்படுத்த ஒரு எக்டேர் 50 மானிய விலையில் பூச்சி மருந்துகள் விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனை விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ள கேட்டு கொள்ளப்படுகிறார்கள். இத்திட்டத்தின் கீழ் ரூ.26,250 ஒதுக்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் கரீப் பருவத்தில் மானாவாரியாக 1.16 இலட்சம் எக்டேரில் பயிர் செய்யப்பட்டிருந்த நிலக்கடலை அறுவடைமுடிவுறும் நிலையிலுள்ளது. இதுவரை அறுவடையான பகுதிகளில் பயிர் மதிப்பீட்டாய்வு சோதனை நடத்தியதில் மகசூல் எக்டேருக்கு 1.10 மெ.டன் கிடைத்துள்ளது. எண்ணெய் வித்துக்களின் உற்பத்திக்கென நிர்ணயிக்கப்பட்ட 1.3612 இலட்சம் டன்னுக்கு இதுவரை 1.23 இலட்சம் டன் சாதனை புரியப்பட்டுள்ளது. இதன்படி கரீப் பருவ உற்பத்திக்கென நிர்ணயிக்கப்பட்ட 1.10 இலட்சம் டன்னுக்கு 1.23 இலட்சம் டன் சாதனை புரியப்பட்டுள்ளது. திட்ட ஒதுக்கீடான ரூ. 29.69 இலட்சத்திற்கு இதுவரை ரூ. 13 இலட்சம் மானியம் செலவு செய்யப்பட்டுள்ளது.

நெசவாளர்கள் நல்வாழ்வுத் திட்டத்தின்கீழ் கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் மற்றும் வீடுகட்டும் திட்டம் அமல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் சேர்ந்து இறக்கும் உறுப்பினர்களின் நியமனதாரர்களுக்கு ஆயுள் காப்பீட்டுக் கழகம் ரூ. 3000 வழங்குகிறது. இத்திட்டத்தின் கீழ் 16,321 உறுப்பினர்கள் சேர்ந்துள்ளனர்.



குடியிருப்புத் திட்டத்தின் கீழ் நெசவாளர்களுக்கு நகர்ப்புற வீட்டுவசதி மேம்பாட்டுக்கழகம் (ஹட்கோ) உதவியுடன் வீடுகள் ரூ.12,000 மதிப்பில் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. இதற்கென ஒரு வீட்டிற்குக் கடன் ரூ. 9600 அரசு மானியம் ரூ.1000.

இம்மாவட்டத்தில் 29,000 கிராம மக்கள் பட்டு வளர்ச்சித் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். 1985-86-ஆம் ஆண்டில் 400 ஏக்கர் மல்பெரி பயிர் செய்யத் திட்டமிடப்பட்டு இதுவரை 250 ஏக்கர் அளவில் நடவுப்பணி பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. புறா வளர்ப்பு மனை மானியம் மற்றும் தளவாட மானியமாக ரூ.1.70 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கொல்லி மலையில் 1985-86 ஆம் ஆண்டில் 50 ஏக்கர் மல்பெரி பயிர் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

**வை. பழனிச்சாமி, இ.ஆ.ப.**
மாவட்ட ஆட்சித் தலைவர்,
சேலம்.

1985-86-ஆம் கல்வியாண்டில் 27 ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகள் துவக்கப்பட்டுள்ளன. ஒரு நகராட்சித் தொடக்கப் பள்ளியும், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி 5ம், உயர்நிலைப் பள்ளிகள் 4ம், 4 உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக உயர்த்தியும் உள்ளது.

1985-ஆம் ஆண்டு ஜனவரி முதல் அக்டோபர் முடிய 21,491 பதிவுதாரர்கள் வேலைவாய்ப்புக் கோரிபதிவு செய்துள்ளனர். அவர்களில் 5222 பெண்கள் பதிவு செய்தார்கள். அக்டோபர் 1985 திங்கள் முடிய 2621 பதிவுதாரர்கள் பணி அமர்த்தப்பட்டனர். அவர்களில் பெண்கள் 428 பேராகும். பணி அமர்த்தப்பட்டவர்களில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள் எண்ணிக்கை 570, பழங்குடியினர் 23 பேர்.— மற்றும் இலங்கை அகதிகள் 90 பேராகும்.

சேலம் சேவை இல்லத்தின் ஒவ்வொரு ஆண்டும் பொதுப்பிரிவுக்கு 20 மாணவிகளும், தையல் பிரிவுக்கு 15 மாணவிகளும் சேர்க்கப்பட்டு பொதுக்கல்வியும், தொழில்கல்வியும் கற்றுக் கொடுக்கப்பட்டு வருகிறது.

விதவை மகள் திருமண உதவித் திட்டத்தின் கீழ் 17,000 செலவிடப்பட்டு 17 பேர் பயனடைந்துள்ளனர். 280 விதவைக் குழந்தைகளுக்குப் பாடப்புத்தகம் இலவசமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. 1 முதல் 8 வகுப்பு வரை பயிலும் உடல் ஊனமுற்ற மாணவ மாணவிகளுக்கு ரூ. 16,200 உதவித் தொகை அளிக்கப்பட்டு 405 மாணவ மாணவியர் பயன் பெற்றனர்.

இதுவரை தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த 829 பேர்களுக்குவீட்டு மனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டன. மற்றும் 58 நபர்களுக்குத் தொழில் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

சேலம் மாவட்டத்தில் 16.11.1985 முடிய குடும்ப நலம் பற்றிய சாதனைகள் விவரங்கள் வருமாறு:

ஆண் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை 1338 பேர்கள், பெண் அறுவைச் சிகிச்சை செய்துகொண்டவர்களின் எண்ணிக்கை 9667 பேர்கள், நவீன குடும்பநலச் சிகிச்சை செய்து கொண்டவர்கள் எண்ணிக்கை 3295 பேர்கள், லூப் பொருத்திக் கொண்டவர்கள் எண்ணிக்கை 3454 பேர்கள்.

அனைத்துக்கும் விரிவுபடுத்துவதற்கும் இத்தொகை பயன்படுத்தப்படும். அறுவைச் சிகிச்சை அரங்குகள் இல்லாத நகர, கிராமப்புறப் பகுதிகளில் அவற்றை அமைக்கவும், தண்ணீர் வசதி ஏற்படுத்தவும், அறுவைச் சிகிச்சை அரங்குகளுக்கு மின் உற்பத்தி எந்திரங்கள் வழங்கவும், ஏற்கெனவே உள்ள மகப்பேறு பின்கவனிப்பு மையங்களை விரிவுபடுத்தவும், தேவைப்படும் இடங்களில் மகப்பேறு பின் கவனிப்பு மையங்களைப் புதியதாக அமைக்கவும் இப்பரிசுத் தொகை பயன்படுத்தப் படும்.




தமிழக அரசுக்கு இப்பரிசு வழங்கப்பட்டுள்ளதை மாண்புமிகு மத்திய குடும்பநலத்துறைத் துணை அமைச்சர் திரு எஸ். கிருஷ்ணகுமார் அவர்கள் கோவையில் 30-11-85 அன்று நடைபெற்ற குடும்பநல மாத நிறைவு விழாவினையொட்டி, ''லாப்பராஸ்கோப்'' முகாம் ஒன்றைத் துவக்கி வைத்துப் பேசுகையில் தெரிவித்தார். மேலும், இச்சாதனை, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் சிறப்புமிகு தலைமையாலும், மாண்புமிகு தமிழக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச்.வி. ஹண்டே அவர்களின் அக்கறையினாலும் நிறைவேறியது என்றார்.

குடும்பநலத்திட்டத்தை ஆர்வத்தோடு முடுக்கிவிடும் தலைமைச் செயலாளர் திரு டி.வி. அந்தோணி தலைமையில் செயற்படும் குடும்பநல அலுவலர்களையும் குடும்பநலத் திட்டத்திற்கு ஒத்துழைக்கும் தமிழக மக்களையும் மத்திய அமைச்சர் பாராட்டினார்.

விரும்புவதாகத் தெரிவித்தார்.

விழாவில், தமிழகத் தலைமைச் செயலாளர் திரு டி.வி.அந்தோணி, இ.ஆ.ப. கலந்து கொண்டு உரையாற்றினார்.

கோவை மாவட்ட ஆட்சித்





விழாவுக்குத் தலைமையேற்ற மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் எச்.வி. ஹண்டே அவர்கள், தமிழக அரசை மாண்புமிகு மத்திய துறை அமைச்சர் திருமதி மோசினா கித்வாய் அவர்கள் இச்சாதனைக்காக மிகவும் பாராட்டி

தலைவர் திரு அபுல்ஹசன் இ.ஆ.ப. வரவேற்புரையாற்றினார்.

தமிழகக் குடும்பநலத்துறை இயக்குநர் திருமதி ஓ.பி. சோசம்மா, இ.ஆ.ப. நன்றி

# இந்திய வர்த்தகப் பொருட்காட்சி



ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் திங்களில் இந்திய உலக வர்த்தகப் பொருட்காட்சியை இந்திய வர்த்தகப் பொருட்காட்சிக் கழகம் ஏற்பாடு செய்து வருகிறது. புதுடில்லியிலுள்ள பிரகதி திடலில் இப்பொருட்காட்சி நடத்தப்படுகிறது. இந்த ஆண்டு இப்பொருட்காட்சி நவம்பர் 14 முதல் 27 வரை நடைபெற்றது. கடந்த ஆண்டுகளில் இப்பொருட்காட்சி மூலம் நடைபெற்ற உலக வாணிபம் ரூ. 300000 இலட்சம் ஆகும்; பார்வையிட்டவர்களின் எண்ணிக்கை 120 இலட்சம் ஆகும்.

உலகில் எங்குமிருந்து வந்து கலந்து கொள்ளும் தொழில் அதிபர்களும் பொருள்களை வாங்குவோரும் இந்த உலகப் பொருட்காட்சியில் சந்தித்து மேலும் தொழில், வர்த்தகத் தொடர்புகளை எவ்வாறு பெருக்குவது, எந்தெந்த வகையில் மேம்படுத்துவது என்பதை ஆய்ந்து முடிவெடுக்கின்றனர். இந்திய நாட்டின் இறக்குமதி, ஏற்றுமதி வர்த்தக வாய்ப்புகளை முறைப்படுத்துவதற்கும் புதிய ஏற்றுமதி வாய்ப்புகளைக் கண்டறிவதற்கும் இந்தப் பொருட்காட்சி நல் வாய்ப்பை நல்குகிறது. இந்தியாவின் பொருளாதாரக் கூட்டுறவு நிலைகளை மேம்படுத்தி நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்த இது பெரிதும் உதவுகிறது.

ஒவ்வோர் ஆண்டும் ஐம்பதுக்கும் மேற்பட்ட வெளிநாடுகள் இதில் பங்கு பெறுவதுடன் புகழ் மிக்க பல அயல்நாட்டுக் கம்பெனிகளும் கலந்து கொள்கின்றன.



இந்தியாவில் எல்லா மாநிலங்களும் மத்திய அரசின் அமைச்சுத் துறைகளும், பிற துறைகளும், அரசின் முக்கிய அமைப்புகளும், பொதுத்துறைகளும், தனியார் நிறுவனங்களும் இதில் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றன.

1981 முதல் இப்பொருட்காட்சி நடத்தப்படுகிறது; தமிழ்நாடு அரசு தொடர்ந்து இதில் பங்கு பெற்று வருகிறது.

1981, 82, 83 ஆண்டுகளில் தமிழ்நாட்டிற்குத் தற்காலிகமான அரங்கு இருந்தது. 1982-ல் தமிழ்நாடு அரங்கு மாநில அரங்குகளில் சிறந்ததாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெள்ளிப்பதக்கம் வழங்கப்பட்டது.

நிலையான தமிழ்நாடு அரங்கம் ரூ. 124 இலட்சம் செலவில் அழகுற அமைக்கப்பட்டது. கீழ்த்தளம் அலுவலகத்திற்காகவும் கிடங்காகப் பயன்படுத்தவும் அமைக்கப் பட்டது. அடித்தளத்தில் சிப்காட், டிட்கோ, சிட்கோ, எல்காட் முதலியவற்றின் தொழில் மேம்பாட்டுப் பணிகள் இங்கே விவரிக்கப்பட்டன. தமிழ்நாட்டின் சுற்றுலாச் சிறப்புமிக்க இடங்களைச் சுற்றுலாத்துறை விவரித்துள்ளது. முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம், கிராமப்புறமக்களுக்கு மின்சார வசதிகள், வீடுகள் முதலிய அரசின் ஆக்கப் பணிகளை விளக்கிடும் வகையில் செய்தித்துறை காட்சியை வகுத்துள்ளது.

மொத்தத்தில், எந்நாட்டவரும் வியந்து போற்றும்படி தமிழ்நாடு அரங்கு அழகோடு திகழ்கிறது.

(14-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தவிர உணவு விடுதிகளிலிருந்தும் உணவுப் பொட்டலங்கள் விலைக்கு வாங்கி அளிக்கப்பட்டன. உணவுப்பொட்டலங்கள் மட்டுமல்லாமல் ரொட்டியும் எண்ணிறந்த அளவில் வாங்கி வழங்கப்பட்டன.

முதல் நாள் ஒன்றரைலட்சம் உணவுப் பொட்டலமும், 5000 ரொட்டிகளும் என்றிருந்தது. அடுத்த இருநாட்களில் 2½ இலட்சம் உணவுப் பொட்டலங்கள் பத்தாயிரம் ரொட்டிகளாக அதிகரித்தன. மொத்தம் பதினான்கு லட்சம் உணவுப் பொட்டலங்களையும், ஐம்பதாயிரம் ரொட்டிகளையும் மாநகராட்சி வழங்கியது·உணவுப் பொட்டலங்களையும் ரொட்டிகளையும் எடுத்துச் செல்ல முதலில் மாநகராட்சியின் 70 லாரிகள் பயன்படுத்தப்பட்டன. இவை போதவில்லையாதலால் 25 பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் ஈடுபடுத்தப்பட்டன. இந்த எண்ணிக்கையும் போதாமல் போகவே இறுதியில் 50 பல்லவன் பேருந்துகளும் பணியில் ஈடுபடுத்தப்பட்டன.

மழை நின்றவுடன் தெருக்களில் தேங்கியிருந்த தண்ணீரை வடியச்செய்ய மழை நீர்வடிகால் அடைப்புகள் விரைவில் நீக்கப்பட்டன. ராட்சச 35 குதிரைசக்தி பம்புகள் மூலம் தாழ்வான பகுதிகளில் தேங்கியிருந்த நீர் அப்புறப்படுத்தப்பட்டது. சுரங்கப்பாதைகளில் இருந்த நீரும் மோட்டார் பம்புகள் மூலம் அகற்றப்பட்டன. சில குடியிருப்புப் பகுதிகளில் கால்வாய் வெட்டி வெள்ளநீர் வடிய வைக்கப்பட்டது.

தொற்றுநோய் பரவக்கூடிய அபாயத்தைத் தடுக்க மாநகராட்சி மருத்துவத்துறை உடனடியாகத் தீவிரமாகக் காலரா தடுப்பூசி போடும் பணியை மேற்கொண்டது. நிவாரண முகாம்களில் தங்கியிருந்த 2½ இலட்சம் பேர்களுக்குத் தடுப்பூசி போட்டதோடு நாளொன்றுக்கு 20,000 பேர்களுக்குத் தடுப்பூசி போடும் பணியையும், போர்க்கால நடவடிக்கையைப் போல் செய்தது. இதனால் வழக்கமான எண்ணிக்கை அளவு ஏற்படக் கூடிய காலராவும் குறைந்தது. மாநகரம் தொற்றுநோய் அபாயத்திலிருந்து காப்பாற்றப்பட்டது. இதைச் சுற்றிப் பார்த்த மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் எச்.வி. ஹண்டே அவர்களும் மாநகராட்சியின் சேவையைப் பாராட்டினார்.

இந்த வெள்ளத்தால் மாநகராட்சிக்கு ரூ. 40 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது. பெரும்பாலான பஸ் செல்லும் சாலைகள், இதர சாலைகள் இவை பழுதுபட்டன. இவற்றைச் செப்பனிட ரூ. 27 கோடி தேவைப்படுகிறது. தெருவிளக்கு கேபிள்கள், மழைநீர் வடிகால்கள் இவையும் சேதம் அடைந்துள்ளன. இவற்றைச் செப்பனிட ரூ. 13 கோடி தேவைப்படுகிறது. சாலைகளைச் செப்பனிட மாநகராட்சிக்கு உடனடியாக ரூ. 5 கோடியை அரசு அனுமதித்துள்ளது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள சென்னை நகரச் சாலைகளை விரைந்து செப்பனிடும் பணியில் இப்போது மூழ்கியுள்ளது மாநகராட்சி.







# இலவசப் பல்பொடிக்கு மூன்று வயது!

**ப**ண்டித நேரு பிறந்தநாளன்று (14.11.1982) தமிழக அரசால் பொன்னேரியில் துவக்கப்பட்ட உன்னதத் திட்டமே ஏழைக் குழந்தைகளுக்கு இலவசப் பல்பொடி வழங்கும் திட்டம். இப்போது அதற்கு மூன்று வயதாகிறது!

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் திரு.கே.ஏ.கிருஷ்ணசாமி, திரு.எச்.வி. ஹண்டே ஆகியோரால் - பல் மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் பி.பி.ராஜன் தலைமையில் அன்று துவக்கப்பட்ட இத்திட்டம், சத்துணவுண்ணும் குழந்தைகளுக்கெல்லாம்- அதாவது ஐந்தாம் வகுப்பு வரை படிக்கும் பத்துவயதுப் பிள்ளைகளுக்கெல்லாம் பயன்மிக அளிப்பதாகும்.

இத் திட்டம் துவங்க முழுமுதற் காரணமான சம்பவம் எது தெரியுமோ?

திருச்சி மாவட்டத்தில் உள்ள ஆமூரில் ஒரு சமயம் இலவச மருத்துவமுகாம் நடந்து கொண்டிருந்தது. அம் மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்ய வந்திருந்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் திரு.எம்.ஜி.ஆர். அவர்கள் எதிர்பாராத விதமாக அங்கே வந்து சேர்ந்தார். முகாமில் நடக்கும் சிகிச்சைகள் பற்றிப் பொது மக்களிடமும், மக்களின் நலக்கேடுகள் பற்றி மருத்துவர்களிடமும் கேட்டார்.

''பொதுவாகப் பல்சொத்தை அதிகம் காணப்படுகிறது'' என்றார்கள் மருத்துவர்கள்.

''இது எதனால்?'' என்றார். மாண்புமிகு முதல்வர்.

''பல்பொடி, மணல், கரித்தூள் போன்றவைகளை இளமையில் பயன்படுத்திப் பல்தேய்ப்பதே இதற்கெல்லாம் மூல காரணம்'' என்று பதில் வந்தது.

அவ்வளவு தான். அதற்கடுத்த சில மாதங்களிலேயே இலவசப் பல்பொடித்திட்டம் தமிழகமெங்கும் அமலுக்கு வந்தது!

ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு மாதத்துக்கு 30 கிராம் வீதம் தரப்படுகிற இந்தப் பல்பொடி தயாரித்து வினியோக்க ஆண்டு ஒன்றுக்கு இரண்டரைக் கோடி ரூபாய் செலவிடப்படுகிறது அரசால். ஏறத்தாழ 60 இலட்சம் குழந்தைகள் இப்போது இதன் மூலம் முத்துப்பல் வரிசையைச் சொத்தை அணுகாமல் பாதுகாத்துக் கொள்கிறார்கள்.

சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ) மூலம் பல மாவட்டங்களுக்கும், 'சின்கோனா' துறை மூலம் ஏழுமாவட்டங்களுக்கும் இலவசப் பல்பொடி தயாரித்து வழங்கப்படுகிறது. இதன் தரக் கட்டுப்பாட்டை நிர்ணயிக்கப் பல் மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் பி.பி. ராஜன் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

கடந்த செப்டம்பர் முதல் இத்திட்டம் உடல் ஊன முற்றோர் பள்ளிக் குழந்தைகளுக்கும் விரிவாக்கப்பட்டிருக்கிறது. ஆதரவற்றோர் பள்ளிக் குழந்தைகளுக்கும் விரிவாக்குவது பற்றி அரசிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது. இது மட்டுமல்ல; எல்லா சத்துணவு மைய அமைப்பாளருக்கும் இந்தப் பற்பொடியைப் பயன்படுத்தும் முறை பற்றிக் குழந்தைகளுக்கு விளக்க ஒரு நாள் பயிற்சி வகுப்பு நடத்தவும் அரசிடம் அனுமதி கேட்கப்பட்டிருக்கிறது.



அண்மையில் - வாய் நலம் பற்றிய கருத்தரங்கொன்று சென்னையில் 2 நாட்கள் நடத்தப்பட்டது. 'முத்துப்பல் சிரிப்பு' என்ற திரைப்படம் கிராமந்தோறும் காட்டப்படுகிறது.

இலவசப் பல்பொடி மூலம் ஏற்படும்பலா பலன்கள் பற்றி அறிய அமைக்கப்பட்டுள்ள 9 பேர் கொண்ட குழுவினர் மாவட்டந்தோறும் சுற்றுப்பயணம்செய்து வருகிறார்கள் இப்போது. மக்களால் மகிழ்ந்து வரவேற்கப்படும் திட்டமாகவே இருக்கிறது இத்திட்டம் என்கிறார்கள் அவர்கள்.

இந்தத் திட்டத்தால் கிராமாந்திரத்தில் இருப்போரின் வாய் நலம் சரிப்படுவது மட்டுமல்ல; ஏறத்தாழ 50 சிறுதொழில் நிறுவனங்கள் பயன் பெறுகின்றன. 1500 பேர் வேலைவாய்ப்பு அடைந்திருக்கிறார்கள் என்கிறார் மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் பி.பி. ராஜன்.

—'ராஜு'

### கோயம்புத்தூர் மாவட்டத்தில்

# புதிய வருவாய் வட்டாட்சியர் அலுவலகம்..

**கோ**வை மாவட்டம் மேட்டுப்பாளையத்தில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்திற்கான புதிய கட்டடத்தினை, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு எஸ். முத்துசாமி அவர்கள் தலைமையில் தமிழ்நாடு சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் திரு. நா. அரிபாஸ்கர், இ. ஆ. ப., அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு நிதி மற்றும் வருவாய்த்துறை அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 12.10.85 அன்று திறந்து வைத்தார்.

இக்கட்டடம் 11 மாதங்களில் ரூ.21.70 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளது. இந்த வருவாய் வட்டாட்சியர் அலுவலகம் 12,600 ச.அடி. பரப்பளவு கொண்டதாகும். இக்கட்டடம் தான் தமிழகத்திலேயே அதிகப் பரப்பளவுடன் கட்டப்பட்ட கட்டடமாகும்.

இவ்விழாவில், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு மு. அபுல்ஹசன் இ.ஆ.ப., அவர்கள் தனது வரவேற்புரையில் கோவை மாவட்டத்தின் பல்வேறு வளர்ச்சிப்பணிகளையும், அரசு நடைமுறைப் படுத்தி வரும் திட்டங்களையும், அதற்கான அரசின் செலவினங்களையும், பயன்பெற்ற மக்கள் எண்ணிக்கையையும் விரிவாக எடுத்துக் கூறினார்.

இவ்விழாவிற்குத் தலைமையேற்று உரையாற்றிய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர், திருஎஸ். முத்துசாமி அவர்கள் இதுவரை கோவை மாவட்டத்தில் பேருந்து செல்லாத கிராமப் பகுதிகளுக்கு 8 புதிய வழித் தடங்களில் பேருந்துகள் செல்வதற்கான திட்டத்தைத் தொடக்கி வைத்தார். 1977ல் அரசு போக்குவரத்துக் கழகங்களிடமிருந்த 4300 பேருந்துகளின் எண்ணிக்கை தற்போது 9500ஆக உயர்ந்துள்ளதாகவும், இன்று பாதைவசதிகள் உள்ள அனைத்துக் கிராமங்களுக்கும் பேருந்துகள் விடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். நிர்வாக வசதிக்காகவும், மக்களின் வசதிக்காகவும் போக்குவரத்துக் கழகங்கள் பிரிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருவதாகவும், போக்குவரத்துத் துறையின் அரசு போக்குவரத்துக் கழகங்கள் நல்லமுறையில் செயல்பட அனைவரும் ஒத்துழைப்பு நல்கிட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

புதிய வருவாய் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடத்தினையும், அண்ணல் காந்தியடிகள், பண்டித நேரு, திருவள்ளுவர், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரது திருவுருவப் படங்களையும் திறந்து வைத்து, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.10.45 இலட்சம் கடன் மற்றும் மானியமாகவும், 1194 வீடற்ற ஏழை மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்களையும், 44 பேருக்கு முதியோர் உதவித் தொகைகளையும், 11 பேருக்குத் தொழிற் கருவிகளையும், 5 பேருக்குக் காதொலிக் கருவிகளையும் வழங்கி மாண்புமிகு நிதி மற்றும் வருவாய்த்துறை அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேருரையாற்றினார்.

மாண்புமிகு தமிழகத்தின் முதல்வராக எம்.ஜி.ஆர். அவர்கள் பொறுப்பு ஏற்ற பிறகு 5 மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டடங்களும், 16 கோட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்களும், 18 வட்டாட்சியர் அலுவலக் கட்டடங்களும், புதியதாகத் திறக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், தமிழகத்திலுள்ள 234 சட்டமன்றத் தொகுதிகளில் அடங்கியுள்ள 384 ஊராட்சி ஒன்றியங்களில் மூன்று ஆண்டுகளில் 262 கோடி ரூபாய் செலவில் கிராமங்கள் தன்னிறைவு பெறுவதற்காக அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளன என்றார்.

மேலும் பேசுகையில் அவர் குறிப்பிட்டதாவது:

கடந்த 5 ஆண்டுகளில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், ஏழை, எளிய விவசாயிகள், ஆதிதிராவிடர்கள் மற்றும் மலைவாழ் மக்கள் பயன் பெறுகிற வகையில் வங்கிகள்



உதவியோடு 13,96,014 பேர்களுக்கு ரூ.403.89 கோடி வழங்கப்பட்டுள்ளது. இதில் வங்கிக் கடன்கள் ரூ. 257.28 கோடியாகும். அரசு மானியமாக வழங்கிய தொகை 146.61 கோடி ரூபாய் ஆகும். இதில் 4,85,000 ஆதிதிராவிட மக்களும், 3,30,000 மலைவாழ் மக்களும் பயன்பெற்றுள்ளனர்.

தமிழகத்திலுள்ள 48 வங்கிகள் மூலம் நலிவுற்றோர் தொழில் துவங்கவும், விவசாயிகள் தொழிலை மேம்படுத்தவும் ரூ. 162 கோடி கடனாக வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 6 இலட்சம் பேர் பயன் பெற்றுள்ளனர். நடப்பு ஆண்டில் 8 இலட்சம் பேர்களுக்கு ரூ. 280 கோடி கடன் வழங்கத் தமிழக அரசு ஏற்பாடு செய்துள்ளது. வங்கிகளும் கடன் வழங்குவதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

இந்தியா விடுதலை பெற்று கடந்த 30 ஆண்டுகளில் ஏழை எளியோர் 4 லட்சம் பேர்களுக்குத் தான் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன. ஆனால் மாண்புமிகு தமிழக முதல்வராக எம்.ஜி.ஆர். அவர்கள் பொறுப்பேற்றதிலிருந்து இந்த ஆண்டு மார்ச் திங்கள் வரை 8 இலட்சத்து 17 ஆயிரத்து 416 பேர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர்தான் ஊராட்சி ஒன்றியங்களுக்கும், ஊராட்சிகளுக்கும் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மத்திய அரசின் 20 அம்சத் திட்டத்தினை நிறைவேற்றுவதில் இந்தியாவிலுள்ள 22 மாநிலங்களில் தமிழகம்தான் முதலிடம் வகிக்கிறது. 20 அம்சங்களில் 16 அம்சங்களில் குறியீட்டை 100 சதவீதத்திற்கு மேல் தாண்டி சாதனை செய்யப்பட்டுள்ளது.

குஜராத்-ஆந்திரா மாநிலங்கள் சத்துணவினைத் தொடங்கி கைவிட்ட போதும் தொடர்ந்து சத்துணவுத் திட்டத்தினைத் தமிழ்நாடு அரசு 83 இலட்சம் பேருக்கு வழங்கி வருகிறது. இதற்காக மட்டும் கடந்த 2 ஆண்டுகளில் 348 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் சத்துணவிற்கு 163 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

அகில இந்தியாவிலேயே தமிழகத்தில் உள்ள அரசு போக்குவரத்துக் கழகங்களைப் போல் சிறப்பாகப் பேருந்துகளை இயக்கும் நிலையை வேறு எந்த மாநிலத்திலும் பார்க்க இயலாது. இப்படிப்பட்ட தமிழகத்தில் கடந்த 8 ஆண்டுகளில் மட்டும் 4½ கோடி ரூபாய் மதிப்புள்ள அரசுப்பேருந்துகளை நொறுக்கியும், தீவைத்துக் கொளுத்தியும் சேதம் விளைவிக்கப்பட்டுள்ளது. இதுபோன்று பேருந்துகள் கொளுத்தும் செயல் உலகிலேயே தமிழகத்தைத் தவிர வேறு எங்கும் இல்லை.

கோவை மாவட்டத்தினைப் பொறுத்த வரையில் 1985-86ல் வீடற்றோர்க்கு 5000 வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இது வரை 3294 பேர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இவ்விழாவில் 1194 பேர்களுக்குப் பட்டாக்கள் வழங்கப்படுகிறது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் இலக்கு 145 இலட்சம் ரூபாயில் இதுவரை 62 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இவ்விழாவில் ரூ. 10.45 இலட்சம் ரூபாய் 217 பேருக்கு வழங்கப்படுகிறது. ஆதிதிராவிடர் நலத்துறையின் சார்பில் தொழில் கருவிகள் 275 பேர்களுக்கு வழங்க திட்டமிடப்பட்டு இதுவரை 230 பேர்களுக்கும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் சார்பில் 250 பேர்களுக்கு திட்டமிடப்பட்டு 206 பேர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. சமூக நலத்துறையின் சார்பில் 1191 காதொலிக் கருவிகள் வழங்கப்படுகிறது. காப்புறுதித் திட்டத்தில் கோவை மாவட்டத்தில் இதுவரை 12 ஆயிரம் பேர் சேர்ந்துள்ளனர். 6919 ஏக்கர் நிலம் எடுக்கப்பட்டு ஆதிதிராவிட மக்களுக்கு 1460 ஏக்கரும், மற்றவர்களுக்கு 5489 ஏக்கரும் நில ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளர் திரு. என். சுப்பிரமணியன் திட்ட விளக்க உரை நிகழ்த்தினார்.

தமிழ்நாடு சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் திரு நா. அரிபாஸ்கர் இ.ஆ.ப., அவர்கள் அரசின் சாதனைகளையும், திட்டங்களையும் எடுத்துக் கூறினார்.

மேட்டுப்பாளையம் சட்டப் பேரவை உறுப்பினர் திரு. மா. சின்னராசு, தமிழ்நாடு கதர் வாரியத் திட்டக் குழுத் தலைவர் பொள்ளாச்சி திரு வ. ஜெயராமன், சார் ஆட்சியர் திரு. ஸ்கந்தன் குமார் கிருஷ்ணன், இ.ஆ.ப., ஆகியோர் சிறப்புரையாற்றினர். மாவட்ட வருவாய் அலுவலர் திரு. து. இராசேந்திரன் நன்றியுரை ஆற்றினார்.

தொகுப்பு: **எஸ். நாகராசன்,**
**உதவி-மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) கோவை மாவட்டம்**

## நீலகிரி மாவட்டத்தில் வயது வந்தோர் கல்வித் திட்டம்

**ந**ம் நாட்டில் எழுத்தறிவற்றோர் உள்ளனர். நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரை இவ்வாண்டுத் தொடக்கத்தில் எழுத்தறிவு அற்றவர் ஆண்கள் 86,653 பேரும், பெண்கள் 1,55,359 பேரும் உள்ளனர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் உதகமண்டலம், கோத்தகிரி, குன்னூர், கூடலூர் ஆக நான்கு ஒன்றியங்கள் உள்ளன. ஒவ்வொரு ஒன்றியத்திலும் 100 வயது வந்தோர் கல்வி மையங்கள் திறக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு மையத்திலும் ஒரு ஆண்டில் 15 முதல் 35 வயதுள்ள, 30 பேர் சேர்க்கப்படுகின்றனர். எனவே, ஆண்டொன்றுக்கு 12,000 பேர் எழுத்தறிவு பெற்று வருகின்றனர்.

வயது வந்தோர் கல்வி மையங்கள் புதிதாகத் தொடங்கும்போது மலைவாழ் ஆதிவாசி மக்கள் விரைவில் எழுத்தறிவு பெறும் வகையில் அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சென்னையில், வயதுவந்தோர் கல்விக் கருவூலம் என்று ஒரு அமைப்பு உள்ளது. இதில் பணிபுரியும் மொழி வல்லுநர்கள் மலைவாழ் ஆதிவாசி மக்களுக்கென அவர்களுடைய மொழியினைத் தமிழ் எழுத்துக்களில் எழுதி அவர்களுக்கென்றே தனியாகப் பாடப் புத்தகங்கள் தயாரித்துள்ளனர். தன்மொழிபால் எழுதப்பெற்ற பாடங்களைப் படிப்பதன்மூலம் கூடுதல் ஆர்வத்துடன் அவர்கள் எழுதப்படிக்க உதவும் என்பதே இம்முயற்சியின் நோக்கம். மலைவாழ் ஆதிவாசிகள் நலனில் சிறப்புக் கவனம் எடுக்கப்படுவதற்கு இம்முயற்சியும் ஒரு எடுத்துக்காட்டாகும்.

**இரெ. அண்ணாதுரை**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**உதகமண்டலம்**



# நாளைய வெற்றிக்கு வழி

இந்தியா-பாகிஸ்தான் போர் நடைபெற்று 14 ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ளன. இந்நாளில் இந்தியர்களாகிய நாம் இந்தியக் கடற்படை பெற்றுவரும் முன்னேற்றம் குறித்து நினைவுகூர்வது அவசியம். இந்நேரத்தில் அப்போரில் உயிர்நீத்த கேப்டன் நரேந்திரநாத் முல்லாவிற்கும் கடலுக்கடியில் தங்கள் உடல்களைப் புதைத்து உயிர்த்தியாகம் புரிந்த 'ஐஎன்எஸ் குக்ரி' யின் கடற்படை வீரப்புதல்வர்களுக்கும் நினைவாஞ்சலி செலுத்த வேண்டியவர்களாக உள்ளோம். இந்நேரத்தில் கடற்படை கப்பல்கள் ஒவ்வொன்றும் இரண்டு நிமிட நேரத்திற்கு இயங்காமல் இருந்து மௌன அஞ்சலி செலுத்தும். கடற்படை வாரத்தின்போது, வெள்ளைச் சீருடை அணிந்த கடற்படைவீரர்களின் சேவையை எண்ணிப் பார்த்தல் அவசியம்.

## வரலாற்றுப்பாடங்கள்

புத்தெழுச்சி பெற விரும்புகின்ற ஒவ்வொரு நாடும் வலிமை, பெருமை, வர்த்தகப் பெருக்கம், நாட்டின் சிறப்பை வளர்த்தல் போன்றவற்றை அடைய கடற்படை வலிமை பெற்று விளங்க வேண்டும் என்பது மறைக்க முடியாத உண்மையாகும். பண்டைய நாளில் இந்தியா கிழக்கிந்திய நாடுகளுடன் அமைதியான முறையில் வாணிபத்தைப் பெருக்கி வந்தது. தென்கிழக்காசிய நாடுகளுடன் இத்தகைய உறவு இன்னும் நீடித்திருப்பதை நாம் உணரலாம் அண்மை நூற்றாண்டுகளில் ஐரோப்பிய நாடுகளின் கடற்படை வலிமை பெற்றிருந்ததால் உலகின் பல பகுதிகளில் காலனிகளைப் பெற்றிருந்தன. 19ஆம் நூற்றாண்டின் பிற்பட்ட காலத்தில் ஆங்கில ஆதிக்கத்தின் சின்னமாக 'பாக்ஸ் பிரிட்டானிகா' கப்பல் திகழ்ந்தது. கடற்படை ஆதிக்கத்தையே இரண்டு உலகப் போர்களும் எடுத்துக் காட்டுகின்றன. கடற்படைப்போரின் முடிவில்தான் ஜெர்மனியும், ஜப்பானும் சரணடைந்தன. 1971ல் நடைபெற்ற இந்திய-பாகிஸ்தான் போரிலும் கடற்படைப் போர்தான் முடிவு ஏற்படக்காரணமாக விளங்கியது. அண்மைக் கால அராபிய-இஸ்ரேல் போர், இராக் இரான் சண்டை அனைத்திலும் கடற்படை வலிமை முக்கியக்காரணியாக விளங்கியதை உணரலாம். ரஷ்யாவும் அமெரிக்காவும் தங்கள் வல்லரசுத் தன்மையை நிலைநிறுத்த கடற்படை வலிமையைப் பெருக்கி வருகின்றன.

## நவீன போர் முறைகள்

கடற்படைத்தினம் கொண்டாடப்படும் இந்நேரத்தில் கடலில் நவீன போர் பற்றிச் சிந்திப்பது சாலச்சிறந்தது. இன்று போர் முறை மிகவும் சிக்கலானது. கம்ப்யூட்டர் கட்டுப்பாட்டினால் இயங்கக்கூடிய சாதனங்களைப் படைகள் பெற்றுள்ளன. அணுச்சக்தி ஆயுதங்களும், ஏவுகணைகளும் போர்முறையில் மிகுந்த அபாயத்தை விளைவிக்கக் கூடியனவாய் உள்ளன. கடற்படை போர் முப்பரிமாணத்தை அடைந்துள்ளது. கடலின் மீது செல்லும் கப்பல்களைக் காட்டிலும் நீருக்கடியில் செல்கின்ற நீர் மூழ்கிக் கப்பல்களின் வேகம் அதிகமானதாகும். நீருக்கடியில் இயங்கும் இவை ஏவுகணையினால் தாக்கப்பட முடியாதவை. எனவே, கடற்படையில் நீர்மூழ்கிக் கப்பல் வலிமை மிகுந்த முக்கியப் படைக்கலமாக விளங்குகிறது. இந்தியா மேற்கு ஜெர்மனியிடமிருந்து நீர்மூழ்கிக் கப்பல்களைக் கூட்டுமுயற்சியில் கட்ட உத்தேசித்துள்ளது. இரண்டாவது இடத்தைப்பெறும் கடலில் மிதக்கும் போர்க்கப்பல்கள் அமைதி காலத்தில் ரோந்துப் படையாகச்செயல்படுகிறது. ஏவுகணைகள், பீரங்கிகள் பொருத்தப்பட்ட இக்கப்பல்கள் எதிரிக் கப்பல்கள், நீர் மூழ்கிக் கப்பல்கள், விமானங்களுக்கு எதிராகப் போர்க்காலங்களில் செயல்படும். எனவே, இந்தியா 'ஐஎன்எஸ் கோதாவரி' போன்ற போர்க் கப்பலை முதல்தரப் போர்க் கப்பலாகப் பயன்படுத்தி வருகிறது.





மூன்றாவது இடத்தை விமானந்தாங்கிக் கப்பல்கள் பெறுகின்றன. இக் கப்பல் தளத்திலிருந்து விமானங்கள் தங்கள் இலக்குகளைச் சென்று தாக்கும். நவீன விமானந்தாங்கிக் கப்பல்களில் அணு ஆயுதக்கணைகள் கொண்டுள்ளவையும் உள்ளன. விமானந்தாங்கிக் கப்பலுள்ள விமானங்கள் தாய்க் கப்பலையும் மற்ற கப்பல்களையும் பாதுகாக்கும். எனவே 'ஐஎன்எஸ் விக்ராந்' கடற்கழுகு விமானங்களைப் பெற்று வலிமை பெற்று விளங்குகிறது. அண்மைக் காலத்தில் ஹெலிகாப்டர் படை நீர்மூழ்கிக் கப்பல்களிலிருந்து பாதுகாக்கப் பயன்படுத்தப்படுகின்றன. எனவே நவீன கடற்படையை அமைக்க அதிக அளவில் நிதி தேவைப்படும். பாகிஸ்தான் அமெரிக்க ஹார்ப்பூன் ஏவுகணைகளைப் பெற்று தனது படை வலிமையைப் பெருக்கியுள்ளது. இந்நிலையில் நீர்மூழ்கிக் கப்பல்களில் பணி புரியும் நமது வீரர்களுக்கு அதிக அளவில் பயிற்சி அளிக்க வேண்டியுள்ளது. அதிக அளவில் செலவு செய்ய வேண்டி இருந்த போதிலும் நமது கடற்படையை வலிமை பெற்றதாக வைத்திருத்தல் அவசியம்.

## அண்மைக்கால அனுபவங்கள்

மிக அண்மையில் நடைபெற்ற பாக்லாந்து மற்றும் இராக், இரான் போர்கள், கடற்படைக் கப்பல்கள், நீர்மூழ்கிக் கப்பல்கள், விமானத்தாங்கிக் கப்பல்கள் இணைந்த கடற்படைத் தேவை என்பதை நிரூபித்துள்ளன.

இந்தியாவின் அயல்நாட்டுக் கொள்கை அமைதி அணிசேரா நாடுகள் கொள்கையைப் பின்பற்றியபோதிலும் அதன் முப்படை வலிமையைக் குறைத்துக் கொள்ளவேண்டும் என்பதில்லை. உண்மையில் கூறப்போனால் இந்தியாவின் பொருளாதாரக் கடற்பரப்பிலிருந்து கிடைக்கும் எண்ணெய் வளம், மீன்வளம், எரிசக்தி போன்றவற்றை நம்பி நமது நாடு உள்ளது. எனவே, இவற்றைப் பாதுகாக்கக் கடற்படை மற்றும் கரையோரக் காவல் படைகளின் மீது அதிக கவனம் செலுத்தப்படவேண்டும்.

வருகின்ற ஆண்டுகளில் கச்சாப் பொருட்கள் மற்றும் எரிசக்தி வளத்திற்காகக் கடலையே உலக நாடுகள் நம்பியிருக்க வேண்டிய நிலை ஏற்படும் என்பது மறைக்க முடியாத உண்மையாகும். இதை நோக்கில் நாட்டின் பாதுகாப்பு வளர்ச்சிக்குக் கடற்படைக்கு அளிக்க வேண்டிய முக்கியத்துவம் விளங்கும். இன்று இடப்படும் அடிக்கல் நாளைய வெற்றிக்கு வழிகோலும்.



# சமூக நலப்பணி முகாம்...

வடஆர்க்காடு மாவட்டம் கீழ் விசாரத்தில் சமூக நலப் பணி முகாம் சிறப்புற நடத்தப்பட்டது.

31.10.85 அன்று மாலை 3 மணியளவில் தொடங்கிய இப்பணி முகாமில் கலந்து கொண்ட 100 இளைஞர்கள் தேசிய ஒருமைப்பாடு உறுதிமொழியை ஏற்க விழா ஆரம்பமானது. பத்து நாள் பணி முகாமினை ராணிப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு. எம். கதிர்வேலு அவர்கள் கலந்துகொண்டு துவக்கி வைத்துச் சிறப்புரையாற்றினார்.

பத்து நாள் முகாமில் இக்கிராம மக்கள் பயனடையும் வண்ணம் கிணறுகளில் தூர் எடுக்கப்பட்டது. ஏரியின் கரை சரிபார்க்கப்பட்டது, குளத்து மேட்டில் பூங்கா அமைக்க குளத்தின் மேட்டைச் சுற்றிலும் சுமார் 1000 குழிகள் தோண்டப்பட்டன. மரக்கன்றுகள் நடப்பட்டன. இக்கிராம மக்கள் சுகாதாரத்தோடு வாழ வசதியாக கிராமத் தெருக்களையெல்லாம் சுத்தம் செய்யப்பட்டன. தெருக் கால்வாய்களில் கழிவு நீர் தடங்கலின்றிச் செல்ல கால்வாய்கள் சுத்தம் செய்யப்பட்டன. இக்கிராமத்தின் ஒதுக்குப்புறமாக உள்ள இடத்தில் அமைக்கப்பட்டுள்ள மரச்செடிகள் பாதுகாப்பிற்காக அதனைச் சுற்றிலும் 3 ஏக்கர் பரப்பளவிற்கு வேலிகள் அமைக்கப்பட்டன. இப்பகுதியின் பொது மருத்துவமனைக்கு உள்ளே அடங்கியிருந்த குப்பைக் கூளங்கள், பூல் புண்டுகள் போன்றவை அகற்றப்பட்டு அசுத்தமான தண்ணீர் வெளியே செல்ல கால்வாய் வெட்டப்பட்டு வழிவகைகள் செய்யப்பட்டன.

எல்லாவற்றிற்கும் மேலாக விவசாயக் குடிமக்கள் பயனடையும் வண்ணம் ரூபாய் 20,000 மதிப்பு கொண்ட 3 கிலோ மீட்டர் தூரமுள்ள வேப்பூர் கால்வாயில் தூர் எடுத்துச் செடிகள் வெட்டப்பட்டு அகலப்படுத்தும் பணியை இப்பணி முகாமில் 1, 2 ஆகிய தேதிகளில் கள விளம்பரத் துறை, செய்தி-மக்கள் தொடர்புத் துறை சார்பில் செய்திப் படங்களும், கருத்துப்படங்களும் இலவசமாகப் பொதுமக்களுக்குப் போட்டுக் காண்பிக்கப்பட்டன.

**மு. அண்ணாமலை**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**வேலூர்,**
**வட ஆர்க்காடு மாவட்டம்.**

செய்தி-மக்கள் தொடர்புத்துறை சார்பில் பொருட்காட்சியும் ஏற்பாடு செய்யப்பட்டு சிறப்புற இருந்தது. பொதுமக்கள் அனைவரும் மிகவும் விரும்பிப் பார்த்தனர்.

இப்பணி முகாமில் புதுப்பாடி மருத்துவ அதிகாரிகளால் இலவசப் பரிசோதனை முகாம் நடத்தப்பட்டது. ஏராளமான பொது மக்கள் இலவசச் சிகிச்சையைப் பயன்படுத்திக் கொண்டனர். இராணிப்பேட்டை கால்நடை மருத்துவ அதிகாரிகளால் இலவசக் கால்நடை சிகிச்சை முகாமும், கால்நடை பராமரிப்பும் பற்றிய கருத்துக்களும் மக்களுக்கு எடுத்துச் சொல்லப்பட்டன. ஏராளமான கால்நடைகளுக்குத் தடுப்பு ஊசிகளும் போடப்பட்டன. 8.11.85 அன்று காலை 8 மணியளவில் ஆர்க்காடு வட்டார அளவில் இப்பணி முகாமிலும் மாபெரும் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன. இவ்விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு நிறைவு நாள் விழாவில் மாவட்டக் காவல் துறை அதிகாரி திரு. இராமராசன் பரிசுகளையும் நற்சான்றிதழ்களையும் வழங்கினார்.

9.11.85 அன்று நடைபெற்ற நிறைவு விழாவில் சிறப்பு விருந்தினராகக் காவல்துறை அதிகாரி திரு. இராமராசன் அவர்கள் கலந்துகொண்டு இப்பணிமுகாமில் கலந்து கொண்டவர்களுக்கு நற்சான்றிதழ்களையும் விளையாட்டுப் பொருள்களையும் வழங்கினார். விழா முடிவில் மரக்கன்றுகளை நட்டார். இலவசத் தையல் வகுப்பினையும் அவர் துவக்கி வைத்தார்.

வட ஆர்க்காடு மாவட்டச் செய்தி-மக்கள் தொடர்பு அலுவலகம், வடஆர்க்காடு மாவட்ட நேரு யுவகேந்திரா மற்றும் கீழ் விசாரம் நேரு இளைஞர் மன்றம் ஆகியவை இணைந்து நடத்தியதே இந்தச் சமூக நலப் பணிமுகாம் ஆகும்.

## வெள்ள நிவாரணம்:
## ரூ 187 கோடி உதவி தேவை

[illegible]



# சங்கரதாசர் நினைவு நாள்



தமிழ்நாடு அரசு - இயல், இசை, நாடகமன்றத்தின் சார்பில் தமிழ் நாடகத் தந்தை தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் நினைவு நாள் சென்னையில் நடைபெற்றது.

ரசிகரஞ்சனி சபாவில் (8.12.85) நடைபெற்ற அக்கூட்டத்தில் மாண்புமிகு கல்வியமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் பங்கேற்றுச் சிறப்பித்தார்.

நினைவு நாள் கூட்டத்திற்கு வந்திருந்தோரை இயல் இசை நாடக மன்றச் செயலாளர் திரு டி.வி. நாராயணசாமி வரவேற்றுரையாற்றினார். கலைமாமணி எம். ஏ. மஜீத் சங்கரதாசர் இயற்றிய பாடல்களை இசை நயத்தோடு பாடினார்.

தமிழ்நாடு இசைக் கல்லூரி மாணவரான திரு உத்திரகுமாரன் குழு நாயன இசையோடு துவங்கிய இக்கூட்டத்திற்குக் கலைமாமணி எஸ். வி. சகஸ்ரநாமம் தலைமை தாங்கிப் பேசுகையில் ''ஏறத்தாழ 50 நாடகங்களை எழுதிய சங்கரதாசர், உரையாடல் எழுதுவதில், பாடல் எழுதுவதில், இசையமைப்பதில், நடிப்பதிலெல்லாம் சிறந்து விளங்கினார். 'அபிமன்யு சுந்தரி' என்ற 4 மணி நேரம் நடந்த நாடகத்தை ஒரே இரவில் எழுதிய பெருமையாளர் அவர். தமிழ் நாடகக் கலை வாழ அவரே காரணம்'' என்றார்.

டாக்டர் கே. சமரசம், எம்.எல்.ஏ., பேசுகையில்-''ஒழுக்கத்தை உயிரினும் மேலாக மதித்த சங்கரதாசர், 'பாய்ஸ் கம்பெனி' என்ற தன் நாடகக் குழுவை பெண்களே இல்லாமல் நடத்தி வந்தார். தெருக்கூத்து என்கிற அளவில் இருந்த தமிழ் நாடகத்தை முதன் முதல் இப்படிப்பட்ட சபாக்களில் அரங்கேறச் செய்த பெருமை அவருடையது'' என்று குறிப்பிட்டார்.

கலைமாமணி கே.ஏ.தங்கவேலு பேசும்போது - ''நடிப்புக் கலையால் நாங்களெல்லாம் இன்று சாப்பிடுகிறோம் என்றால் அதற்குக் காரணமே சங்கரதாசர் தான்; ஆகவே அவரைத் தந்தை என்றே குறிப்பிடலாம். அவர் முதன்முதல் துவக்கிய நாடக சபா, சமரச சன்மார்க்க நாடக சபா என்பதாகும்'' என்று குறிப்பிட்டார்.

இயல் இசை நாடக மன்றச் செயலாளர் திரு டி.வி.நாராயணசாமி தமது நன்றியுரையில்—''கலைஞர்கள் யார்? எவர்? என்ற பெயரில் நூலொன்று தயாரிக்க அரசு அனுமதித்துள்ளது. மறைந்த கலைஞர்களின், வாழும் கலைஞர்களின் வாழ்க்கை வரலாறு அதில் தொகுத்தளிக்கப்படும்'' என்றார்.

இதன் பிறகு மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ.அரங்கநாயகம் அவர்கள் தலைமையில்—தவத்திரு சங்கரதாசர் எழுதிய 'கோவலன்' நாடகம் கலைமாமணி திரு கே.ஆர். சீதாராமன் குழுவினரின் 'முக்கனி' நாடக மன்றத்தாரால் நடிக்கப்பட்டது.

மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் தமது சொற்பொழிவின்போது குறிப்பிட்டதாவது:

''தமிழில் சிறந்த பல நாடகங்கள் எழுதிய சங்கரதாசர் நாடகத் தமிழுக்கு நல்ல தொண்டாற்றியிருக்கிறார். அதற்கு நன்றி தெரிவிக்கும் வகையிலேயே இந்த விழா நடைபெறுகிறது. நாடகங்கள் மூலம் நல்ல கருத்துக்கள் சொல்லப்பட வேண்டும் என்பதற்கு அவருடைய நாடகங்கள் சிறந்த உதாரணம். கலையுலகில் புதுமை காண விரும்புகிறவர்கள் பழங்கலைகளைப் பாதுகாக்கும் மனப்பக்குவம் பெறவேண்டும்''.

—'முடிகொண்டான்'

## கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கூட்டுறவுச் சங்கங்கள்

கைராட்டையும் நெய்தலும் தொன்று தொட்டுத் தமிழகத்தில் இருந்துவரும் கிராமத் தொழில்களாகும். இக்கிராமத் தொழில்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் செழித்து வளருகின்றன. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில்கள் வாரியத்தின் கீழ் இயங்கும் கூட்டுறவுச் சங்கங்களாவன:

நாட்டுச் செக்கு எண்ணெய் உற்பத்தி செய்வோர் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் 31.

தோல் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் 12.

காகிதம் தயாரிப்போர் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் 5.

தச்சு மற்றும் கருமார் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் 44.

சுண்ணாம்பு உற்பத்தி செய்வோர் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் 7.

பிரம்பு மற்றும் மூங்கில் கூடை முடைவோர் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் 26.

தேனீ வளர்ப்போர் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் 15.

மட்பாண்டம் மற்றும் செங்கல் தொழிலாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் 63.

கயிறு மற்றும் பாய் நெய்வோர் தொழில் கூட்டுறவுச சங்கங்கள் 47.

சிறுதானியம் மற்றும் பயறு வகைகள் பதப்படுத்தும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் 33.

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

வரப்புயர நீர் உயரும்,
நீர் உயர நெல் உயரும்,
தொழில் பெருக வளம் பெருகும்,
தொன்று தொட்டு தமிழகத்தில்,
புரட்சித்தலைவர்
டாக்டர் **எம்.ஜி.ஆர்** அவர்கள் ஆட்சியில்
டிட்கோ தொடர்ந்து புகழ்பெறும் வண்ணம்
புதுப் புதுத் தொழில்கள் பெருக பல திட்டங்கள்
தீட்டி செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் ஆற்றிடும் சாதனைகள்

பெரிய மற்றும் நடுத்தர தொழில்களை பொதுத் துறையிலும் கூட்டுத்துறையிலும் அனேகமாக பின்தங்கிய பகுதிகளில் நிறுவுதல்.

கூட்டுத்துறை நிறுவனங்களின் பங்கு மூலதனத்தில் முதலீடு செய்தல்.

கூட்டுத்துறையில் நடுத்தர மற்றும் பெரிய தொழில் திட்டங்களுக்கு தொழில் நுட்பம் மற்றும் அடிப்படை தேவைகளைப் பெற உதவி செய்தல்.

மாநில மற்றும் மத்திய அரசு, நிதி நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு தொழில் உரிமம், இறக்குமதி உரிமம், தொழில் சாத்தியக்கூறு அறிக்கை மற்றும் கடனுதவி பெற உதவி செய்தல்.

ரூ. 600 கோடி முதலீட்டில் செயல்படுத்தப்பட்ட 41 திட்டங்களில் 15,520 பேருக்கு வேலை வாய்ப்பு.

மேலும் ரூ. 400 கோடி முதலீட்டில் செயல்படுத்தப்பட்ட 10 திட்டங்களில் 12,000 பேருக்கு வேலை வாய்ப்பு.





ஈ.வெ.கி. சுலோசனா சம்பத்
தலைவர்
தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்
(தமிழ்நாடு அரசு நிறுவனம்)
735, அண்ணா சாலை, சென்னை-600 002

DIPR/296/85 NAS

தமிழக வெள்ளச் சேதம்:

# தமிழ் நாடு அரசுக்கு மத்திய அமைச்சர் பாராட்டு

கடந்த நவம்பர்த் திங்களில் தமிழ்நாட்டில் ஏற்பட்ட கடும் வெள்ளச் சேதப் பகுதிகளைப் பார்வையிட மாண்புமிகு மத்திய வேளாண்மைத்துறை அமைச்சர் திரு பூட்டாசிங் அவர்கள் 22.11.85 அன்று காலை சென்னை வந்தார்.

பிறகு அவர் ஹெலிகாப்டர் விமானத்தில் செங்கல்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, தஞ்சை ஆகிய மாவட்டங்களிலும் பாண்டிச்சேரியிலும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டார்.

வெள்ளப் பகுதிகளைப் பார்வையிட்டு மாலை சென்னை திரும்பிய மாண்புமிகு திரு பூட்டாசிங் அவர்கள் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களைத் தலைமைச் செயலகத்தில் சந்தித்தார்.

தமிழக அரசு மேற்கொண்டுள்ள வெள்ள நிவாரணப் பணிகள் பற்றிய விவரங்கள் அடங்கிய விண்ணப்பத்தினை மாண்புமிகு அமைச்சர் திரு பூட்டாசிங் அவர்களிடம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொடுத்தார். அதில், வெள்ள நிவாரணப் பணிகளுக்காகத் தமிழகத்துக்கு மத்திய அரசு ரூ. 125 கோடி ஒதுக்க வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது.

பின்னர் பேசிய மாண்புமிகு அமைச்சர் திரு பூட்டாசிங் அவர்கள் செய்தியாளர்களிடம் குறிப்பிட்டார்:

''தமிழ்நாட்டில் ஏற்பட்ட வெள்ளக் கொடுமை, சேதம் மிகக் கடுமையானது; வரலாறு காணாத ஒன்று.

''அரசு சொத்துக்கள்; தனியார் வீடுகள், ரயில்வே மற்றும் இதரப் பொதுச்சொத்துக்களுக்கு ஏற்பட்ட நாசம் மிக அதிகம்.

''தமிழக அரசு விரைந்து மேற்கொண்ட துயர் துடைப்புப் பணிகளை, நான் சென்ற இடம் எல்லாம் மக்கள் பாராட்டியதைக் கேட்டேன். தமிழக நிர்வாக இயந்திரம் மிகச் சிறப்பாகச் செயல்பட்டதால், சேதத்தின் கடுமையும், துயரின் கொடுமையும் கணிசமாகக் குறைந்துள்ளது. இதற்காகத் தமிழக அரசுக்குப் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

''அகில இந்தியாவிலும் வெள்ள, புயல் சேத நிவாரணப் பணிகளைக் கவனிப்பதற்காக ஒரு சிறப்பு நிறுவனத்தை ஏற்படுத்துவது என்று மத்திய அரசு முடிவு செய்துள்ளது. வெள்ளம், புயல் நேரங்களில் எப்படிச் சமாளிப்பது என்று அந்த நிலையத்தில் அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். அந்த நிறுவனம் விரைவில் தொடங்கப்பட இருக்கிறது. இடம் இன்னும் முடிவு செய்யப்படவில்லை.



தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2016
குரோதன - கார்த்திகை 16
மலர்: 15 இதழ்: 11
1-12-1985



''தமிழக வெள்ள நிவாரண நிதிக்கு மத்திய நிதி உதவி கிடைப்பதில் ஒரு விநாடித் தாமதமும் இராது. சென்னை வந்துள்ள மத்திய நிபுணர் குழு தனது சிபாரிசு அறிக்கையை அளித்ததும், மத்திய அரசின் உயர் மட்டக்குழு அதைப் பரிசிலித்து நிதிஉதவி அளிப்பது குறித்து முடிவு செய்யும். இந்த மத்திய நிதி உதவி கிடைப்பதில் ஒரு நாள் காலத் தாமதம் கூட ஏற்படாது.

''தற்போது 90 ஆயிரம் டன் அரிசி தமிழகத்துக்குக் கொடுக்கப்படுகிறது. அடுத்த மூன்று மாதக் காலத்துக்கு மாதம் ஒன்றுக்கு ஒரு இலட்சம் டன் அரிசி வீதம் கொடுப்பதில் எவ்விதச் சிரமும் இராது. முதல்வரின் ஆணை- விருப்பம் நிறைவேற்றி வைக்கப்படும்.''

**மத்திய நிபுணர் குழு பார்வையிட்டது**

மத்தியநிபுணர் குழு 23.11.85 அன்று காலை இரு பிரிவுகளாகச் சென்று-குழுவின் தலைவர் திரு ஷிக்தர் தலைமையில் ஒரு பிரிவினர் சென்னை, செங்கல்பட்டு மாவட்டப்பகுதிகளைப் பார்வையிட்டனர். மற்றொரு பிரிவினர் தென் தஞ்சை ஆகிய மாவட்டப் பகுதிகளைப் பார்வையிட்டனர்.

சென்னை மாநகரில் வெள்ளம் சூழ்ந்த எருக்கஞ்சேரி, யானைகவுனி, கொடுங்கையூர், பெரம்பூர், ஓட்டேரி, சேத்துப்பட்டு, கோடம்பாக்கம், அசோக் நகர், ஈக்காட்டுத்தாங்கல், கோட்டூர்புரம், அடையாறு ஆகிய பகுதிகளை மத்திய நிபுணர் குழுவினர் பார்வையிட்டனர்.

மத்தியநிபுணர் குழுவினருடன் சென்னை மாநகராட்சித் தனி அலுவலர் திரு கே. மாதவசர்மா இ.ஆ.ப., ஆணையர் திருமதி சாந்தாஷீலா நாயர் இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடன் சென்றனர்.

மத்திய நிதியமைச்சகத்தின் சிறப்புப் பணி அலுவலர் திரு வி. சீனிவாசன் தலைமையிலான 4 பேர் அடங்கிய மத்திய நிபுணர் குழுவினர் தஞ்சை மாவட்டத்தில் வெள்ளம் பாதித்த அதிராம்பட்டினம், திருத்துறைப்பூண்டி, வேதாரண்யம், தலைஞாயிறு, நாகப்பட்டினம் ஆகிய பகுதிகளில் துண்டிக்கப்பட்ட சாலைகள், உடைப்பெடுத்த ஆறுகள், நீரில் மூழ்கிய நெல் வயல்கள் ஆகியவற்றைப் பார்வையிட்டனர்.

இந்த நால்வர் அடங்கிய குழுவில், மத்திய நீர் கமிஷன் (பாசனம்) இயக்குநர் திரு பி.வி. நாராயணசாமி, சுகாதார அமைச்சகத்தைச் சேர்ந்த அலுவலர் டாக்டர் பி.கே. வர்மா, கிராமப்புற வளர்ச்சி அமைச்சக அலுவலர் திரு எப். எம். தத்தா ஆகியோர் மற்ற உறுப்பினர்கள்.

திரு. ஷிக்தர் தலைமையிலான மத்திய நிபுணர் குழு, மதுராந்தகம் ஏரியைப் பார்வையிட்டது. பிறகு அங்கு நடந்த கூட்டத்தில் திரு ஷிக்தர் பேசுகையில், ''வீடுகள் கட்டுவதற்கு முதலிடம் தரப்படும். துணிகள், பாத்திரங்கள் அளிக்கப்படும். கட்டுமரங்களை இழந்த மீனவர்களுக்குக் கட்டுமரங்களையும், வலைகளையும் அரசு வாங்கித் தரும். மண் மேடிட்ட விவசாய நிலங்களை அரசு சீர்படுத்திக் கொடுக்கும்'' என்று கூறினார்.

**சென்னை மாநகராட்சி கோரிக்கை**

சென்னை மாநகரில் வெள்ளத்தால் சேதமடைந்த சாலைகள், தெரு விளக்குக் கேபிள்கள், மழை நீர் வடிகால்கள் ஆகியவற்றைச் செப்பனிட நாற்பது கோடி ரூபாய் நிவாரண உதவி தேவை என்று தமிழக அரசிடமும், மதிப்பீடு செய்ய வந்துள்ள மத்திய நிபுணர்குழுவிடமும் சென்னை மாநகராட்சி கேட்டுள்ளது என்றும், இந்த உதவித்தொகையில் பெரும் பங்குத்தொகை அதாவது 27 கோடி ரூபாய் சேதமடைந்த சாலைகள் செப்பனிடப் பயன்படுத்தப்படும் என்றும் சென்னை மாநகராட்சித் தனி அலுவலர் திரு கே. மாதவசர்மா இ.ஆ.ப. 23-11-85 அன்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

**நிவாரணப் பணிகள்**

சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தின் மூலம் சென்னையில் இதுவரையில் 30 ஆயிரத்து 932 பேர்களுக்கு 14 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள நிவாரண உதவி வழங்கப்பட்டுள்ளது. வெள்ளத்தில் இறந்த 16 பேர்களுக்குத் தலா இரண்டாயிரம் ரூபாய் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது. நிவாரண உதவி வழங்குவதில் இதுவரை 35 சதவிகித அளவுக்குப் பணிகள் முடிந்துள்ளன. மீதமுள்ள பணிகளையும் விரைந்து நிறைவேற்றி முடிக்க நகரிலுள்ள ஐந்து வட்டங்களிலும் மொத்தம் 125 அலுவலர் குழுக்கள் ஏற்படுத்தப்படும்'' என்று சென்னைமாவட்ட ஆட்சித் தலைவர் திரு லால் ராணா சைலோ இ.ஆ.ப. செய்தியாளர்களிடம் கூறினார்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் வெள்ளம் பாதித்துள்ள பகுதிகளை மத்திய நிதி அமைச்சகச் சிறப்பு அலுவலர் திரு வி. சீனிவாசன் தலைமையிலுள்ள நால்வர் உறுப்பினர்கள் கொண்ட மத்தியக் குழு நவம்பர்த் திங்கள் 23, 24 ஆகிய நாட்களில் பார்வையிட்டது.





''நெற் பயிர்களுக்கு ஏற்பட்டுள்ள சேதம் பரவலாக உள்ளது. நிவாரணப் பணிகளை மாவட்ட நிர்வாகம் மிகவும் சிறப்பாகச் செய்துள்ளது'' என்று திரு சீனிவாசன் அவர்கள் சீர்காழியில் செய்தியாளர்களிடம் கூறினார்.

திருத்துறைப் பூண்டி, வேதாரண்யம், சீர்காழி, தலைஞாயிறு ஆகிய பகுதிகளில் மூழ்கிய மற்றும் அழுகிய நெற்பயிர்களையும், சாலைகள் வாய்க்கால்கள் ஆறுகளின் உடைப்புகளையும், இடிந்த வீடுகளையும் நிபுணர் குழு பார்வையிட்டது.

இரண்டு நாட்களாக வெள்ளப் பகுதிகளில் சுற்றுப் பயணம் செய்துவிட்டு நிபுணர் குழு சென்னை திரும்பியது. 25.11.85 அன்று தலைமைச் செயலகத்தில் தமிழக அரசின் அலுவலர்களை அவர்கள் சந்தித்து, நிவாரணப் பணிகள் அதன் செலவு விவரங்கள் பற்றிக்கலந்து பேசினார்கள். அதன்பிறகு செய்தியாளர்களிடம் அந்தக் குழுவின் தலைவர் திரு சிக்தர் அவர்கள் கூறியதாவது:

''வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களான சென்னை நகரம், செங்கல்பட்டு மாவட்டம், தென் ஆர்க்காடு மாவட்டம், வட ஆர்க்காடு மாவட்டத்தில் வந்தவாசிப் பகுதி, தஞ்சை மாவட்டம் ஆகியவற்றை நாங்கள் 8 பேர் 2 குழுவாகப் பிரிந்து போய்ச் சுற்றிப் பார்த்தோம். மொத்தத்தில் வெள்ளச் சேதம் மிகக் கடுமையாகவே இருக்கிறது. கொஞ்சம் வழக்கத்திற்கு மாறாகவும் இருக்கிறது. பல பாலங்கள், சாலைகள், குளங்கள், கால்வாய்கள் உடைப்பினால் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. பயிர்ச் சேதமும் பெரும் அளவில் இருக்கிறது.

''சென்னை நகரச் சாலைகள் படுமோசமாகப் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. சம்பந்தப்பட 4 மாவட்ட ஆட்சித் தலைவர்களும், சென்னை மாநகராட்சி ஆணையாளர், தனிஅலுவலர் ஆகியோரும் இந்த நிவாரணப் பணிகளுக்குத் தங்களை முழுவதுமாக அர்ப்பணித்துக் கொண்டு செயற்பட்டு இருக்கிறார்கள். மாநில அரசு இந்த நிவாரணப் பணிகளைச் சிறந்த விஞ்ஞான முறையில் மற்ற மாநிலங்கள் இதைப் பின்பற்றத் தூண்டும் அளவுக்குச் செய்து இருக்கிறது. தலைமைச் செயலாளரும், மணிக்கு மணி சேத விவரங்கள், நிவாரணப் பணிகளைப் பற்றிக் கணக்கெடுத்துப் பல இரவுகள் தூக்கம் இல்லாமல் சிறப்பாகச் செயல்பட்டு இருக்கிறார்.

''முதலில் கால்வாய், குளம் உடைப்புகள், சாலைகள் உடைப்பு இவற்றைச் சீர்செய்ய வேண்டியுள்ளது. அடுத்து பயிர் நாசத்திற்கும் கவனிக்க வேண்டியது இருக்கிறது. பல இடங்களில் நிலத்தை மணல் மூடிவிட்டது. அந்த மணலை உடனே நீக்க மாநில அரசு சம்மதித்துள்ளது.

''சென்னையில் பாதிக்கப்பட்ட சாலைகளைச் சீரமைக்கும் வேலையை மக்கள் வசதிக்காக மாநகராட்சி விரைவாகச் செய்து வருகிறது. உடனடி நிவாரணம் இங்கு கொடுக்கப்பட்டு இருக்கிறது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண முகாம்களில் உடனடியாக துணி, உணவுகள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன.

''மாநில அரசு கொடுத்துள்ள தகவலின் அடிப்படையில் கணக்கிட வேண்டி இருக்கிறது. முதலில் 91 கோடி ரூபாய்க்கு நிவாரணச் செலவுப் பட்டியலைக் கொடுத்தார்கள். அதன்பிறகு அந்தச் செலவுப் பட்டியலை 125 கோடி ரூபாயாக உயர்த்திக் கொடுத்து இருக்கிறார்கள். மேலும் சில முக்கியமான செலவினங்கள் சேர்க்கப்பட வேண்டியது இருக்கிறது. அது பற்றிய துணைப்பட்டியலைத் தயாரித்து டெல்லிக்கு அனுப்புவதாக மாநில அரசு கூறியிருக்கிறது. அதன்பிறகுதான் மொத்தம் எவ்வளவு நிவாரண உதவி வழங்கலாம் என்பதை நாங்கள் பரிந்துரை செய்ய முடியும். எவ்வளவு விரைவில் முடிமோ அவ்வளவு விரைவில் பரிந்துரை செய்து விடுவோம்.''

இந்த நிபுணர் குழு 25.11.85 அன்று மாலை விமானம் மூலம் டெல்லிக்குப் புறப்பட்டுச் சென்றது.

—பி.வி.ஜி.





## தமிழ்நாட்டில் வெள்ளச் சேதம்: சில காட்சிகள்






























# எல்லாருக்குமாக நாம்-நமக்காக எல்லாரும்!

தேசிய ஒருமைப்பாடு வார விழா 25-11-85 அன்று சென்னைக் கலைவாணர் அரங்கில் நடந்தது.

நாயன இசையுடன் தொடங்கிய இவ்விழாவில், செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. இரா. கற்பூர சுந்தர பாண்டியன் இ.ஆ.ப. அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

விழாவுக்குத் தலைமை வகித்த மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழியைப்படிக்க மற்றவர்கள் அதனை அப்படியே சொன்னார்கள்.

தேசிய ஒருமைப்பாடு உறுதிமொழி—

''நாட்டின் சுதந்தரத்தையும் ஒருமைப்பாட்டையும், காத்து வலுப்படுத்த முழு மனதான ஈடுபாட்டுடன் பாடுபடுவேன் என்று நான் காணிக்கை உணர்வுடன் உறுதி கூறுகிறேன்.

''நான் ஒருபோதும் வன்முறையில் ஈடுபட மாட்டேன் என்றும், சமயம், மொழி, வட்டார மற்ற அரசியல் பொருளாதாரக் குறைபாடுகளைப் பொறுத்த வேறுபாடுகளுக்கும், பூசல்களுக்கும் அமைதியான முறையில், சட்ட நெறி சார்ந்த வழிகளில் தீர்வு காணப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறேன்.''

தமிழ்நாடு காவல்துறைத் தலைவர் திரு சு. ஸ்ரீபால் இ.கா.ப. அவர்கள் பேசுகையில், ''இலக்கிய ரீதியில் பார்த்தால் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பாடினார் ஒரு புலவர். பாரதியாரும் 'காக்கை குருவி எங்கள் சாதி' என்றார். எந்தச் சமயத்தை எடுத்துக் கொண்டாலும் எல்லாரும் இணைந்து வாழ வேண்டும் என்ற கருத்தையே போதிக்கின்றன'' என்றார்.

திருமதி சௌந்தரா கைலாசம் அவர்கள் பேசுகையில், "தேசிய ஒருமைப்பாட்டுக்கருத்துக்களைப் பாடப்புத்தகங்களில் இடம் பெறச் செய்ய வேண்டும். இளம் வயதிலேயே இந்தக் கருத்துக்கள் மனத்தில் பதியவேண்டும்'' என்றார்.

சென்னை மயிலை பேராயர் திரு ஆர். அருளப்பா அவர்கள் பேசுகையில், "இறைப்பற்றை வளர்க்க வேண்டும். குழந்தைகளிடத்தில் நல்ல கருத்துக்கள் பரவ வேண்டும். பகைவர்களை நேசிக்கக் கூடிய அளவுக்கு நம் மனம் பண்பட வேண்டும். 'சாதி மதங்களைப் பாரோம்' என்ற பாரதியின் கருத்தைச் சிந்திக்க வேண்டும்'' என்றார்.

சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி டாக்டர் மு.மு. இஸ்மாயீல் அவர்கள் பேசுகையில், ''தேசிய ஒருமைப்பாடு என்பது மனித ஒருமைப்பாட்டின் ஒரு பகுதியாகும். மனிதனை மனிதனாகக் காண வேண்டும். எந்தச் சாதி, எந்த மதம் என்ற கேள்வியே இன்று எழுகிறது. அனைவரும் இறைவனுடைய படைப்புகள் என்ற உணர்வு ஏற்பட்டால் இந்தக் கேள்வி எழாது'' என்றார்.

மாண்புமிகு சட்ட அமைச்சர் திரு சி.பொன்னையன் அவர்கள் பேசுகையில், ''நாட்டினுடைய ஒற்றுமைக்குத் தடைக் கற்களாய் இருப்பது மத வெறி என்றாலும் மொழிப் பற்று இனப்பற்றுஆகியவற்றை விடுவது நடைமுறை சாத்தியமற்றது. ஆட்சிமொழிச் சட்டத்தில் இடம்பெற்றுள்ள நேருவின் உறுதிமொழி அரசியல் சட்டத்திலும் இடம் பெற வேண்டும். இதை ஆங்கில மொழியையும் அங்கீகரிக்கப்பட்ட இந்திய மொழியாக ஆக்குவதன் மூலம் மைய அரசு செய்ய வேண்டும்" என்றார்.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் பேசுகையில், ''தேசிய ஒருமைப்பாடு விழாமல் இருப்பதற்காக நாம் விழா எடுத்துக் கொண்டிருக்கிறோம். இந்தியாவில் மெய்யான கூட்டாட்சி அமைவதன் மூலமே ஒருமைப்பாட்டைக் காண முடியும். மாநில உணர்வுகளைப் புறக்கணிக்காத பெருந்தன்மையுடைய ராஜீவ் காந்தி பிரதமராக இருப்பதால்தான் பஞ்சாபிலும், அசாமிலும் அமைதி காண முடிந்தது'' என்றார்.

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசுகையில் ''கட்சி, சமயம், மொழி ஆகியவற்றில் பற்று இருக்கலாம். ஆனால் வெறிகூடாது. வெறி சிந்திக்கவிடாது; உண்மையைப் பார்க்க விடாது. நம் நாடு நாட்டுப் பற்றை, ஒருமைப்பாட்டை வளர்த்த நாடு. கருத்து வேறுபாடுகளுக்கு மதிப்பளித்து மனிதத் தன்மை காப்பாற்றப்பட வேண்டும். 'எல்லாருக்குமாக நாம்-நமக்காக எல்லாரும்' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன அந்த உணர்வு ஏற்பட வேண்டும். அதனால்தான் பாரதியாரும் 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்றார்'' என்றார்.

விழா முடிவில் செய்தி-மக்கள் தொடர்புத் துறை துணை இயக்குநர் திரு வி. டி. வீரப்பன் அவர்கள் நன்றி நவின்றார்.

—பொ. மறைமலை



# குடும்ப நலம் காத்திடுவோம்

டி.வி. அந்தோணி, இ.ஆ.ப.
அரசுத் தலைமைச் செயலர்

கருத்தடை பற்றிய விவரங்களை மிகச் சிலரே அறிந்துள்ளனர். இது மிகவும் அந்தரங்கமான ஒன்றாதலால், கல்வி அறிவுடைய தம்பதியர் கூட இதனைப் பற்றி விசாரிக்கவோ, இது சம்பந்தமான புத்தகங்களை வாங்கவோ தயங்குகின்றனர். சிலர் தம்முடைய மதமும், இனமும் இத்திட்டத்தை ஏற்பதில்லை என்ற தவறான எண்ணத்தைக் கொண்டுள்ளனர். ஆதலால் அவர்கள் இதைப்பற்றி அறிந்து கொள்ளவே விரும்புவதில்லை.

கருத்தடைச் சாதனங்களைப் பயன்படுத்துவதால் சிலர் `எப்படியோ போலுள்ளது' என்று சொல்லலாம். இயற்கையான குடும்பக் கட்டுப்பாட்டிற்கு மன அடக்கம் தேவைப்படலாம். நிரோத் பயன்படுத்துவோர் மன நிறைவில்லை என்று கூறலாம். 'லூப்' பொருத்திக்கொண்டதால் முதுகுவலியோ, இரத்தப் போக்கோ இருக்கிறது எனச் சிலர் கருதலாம். அறுவை முறையால் வலியும் சங்கடங்களும் தோன்றுகின்றன என்று கூறலாம்.

இத்தகைய தவறான கருத்துக்களை மாற்றவும், இதிலுள்ள சங்கடங்களை நீக்கவும், பொதுவான மந்தநிலையைப்போக்கவும் மிகப் பொருத்தமான முறையைக் கையாளவேண்டும். குடும்பநலத் திட்டத்தை மேற்கொள்ள வேண்டிய நிலையிலுள்ள தம்பதியருக்கு இத்திட்டத்தின் மீது ஆர்வம் ஏற்படும் வகையிலும், இத்திட்டத்தின் இன்றியமையாமையைச் சரியான முறையில் ஒவ்வொருவரும் சிறப்பாக உணரும் வண்ணமும் நாம் அறிவுறுத்த வேண்டும்.

எதிர்பார்த்த இலக்கை நாம் இன்னும் இத்துறையில் எட்டவில்லை. தற்பொழுது, ஊக்குவிப்புத் தொகைக்காகத் தான் பலர் குடும்பநல அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள முன்வருகின்றனர். சில மாநிலங்களில் லூப் பொருத்திக் கொள்வதற்குக் கூட ஊக்குவிப்புத் தொகை வழங்கப்படுகிறது. இச் சிகிச்சை பெறும் நாளில் அவர்கள் இழக்கும் நாட் கூலியை ஈடுகட்டவே ஊக்குவிப்புத் தொகை வழங்கப்பட்டபோதிலும் பலர் அதிகப்படியான நபர்களை அறுவைச் சிகிச்சையில் ஈடுபடுத்துவதற்கு இந்த ஊக்குவிப்புத் தொகையையே முதன்மையான செயல்முறைத் திட்டமாகத் தெரிவிப்பது வருந்தத்தக்கது. குடும்பநலத் திட்ட வாரங்களின் போது ஊக்குவிப்புத் தொகை அதிகரிக்கப்பட்டால், பலர் அப்பணத்திற்காக அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள முன்வருவதைக் காண்கிறோம். இந்த முறையிலும் சில குறைபாடுகள் உள்ளன.

முதலாவது, ஆரம்ப காலத்தில் பலர் முன்வந்தாலும் சிறிது காலத்திற்குப் பின் முன்வருவோர் எண்ணிக்கை குறையத் தொடங்குகிறது. இன்னும் அதிக ஊக்குவிப்புத் தொகையை மக்கள் எதிர்பார்க்கின்றனர். மேலும் ஊக்குவிப்புத் தொகை உயர்த்தப்படுகிறது. இதன் விளைவாகத் தேவையில்லாதவர்கள் ஈர்க்கப்படுகிறார்கள். எடுத்துக்காட்டாக மிகுந்த வயதானவர்கள் பணத்திற்காக அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள விரும்புகின்றனர். அறுவைச் சிகிச்சையும் ஊக்குவிப்புத் தொகையும் அவர்களுக்கு உரிய உரிமை என்று கூற அவர்கள் எண்ணுகின்றனர். சரி, அறுவைச் சிகிச்சை முடிகிறது. தேவையான எண்ணிக்கை கிடைக்கிறது. பணம் கைமாறுகிறது. ஆனால், அதற்குப் பிறகு பின் விளைவுச் சிக்கல்கள் பெரிதாக உருவெடுக்கின்றன.

இரண்டாவது, உயர்த்தப்பட்ட ஊக்குவிப்புத் தொகை பொய்யான புள்ளிவிவரம் தயாரிக்க வழி வகுக்கிறது. குறிப்பாக, கோலாகலமாகக் குடும்பநல முகாம் நடக்கும்போது, சமூக விரோதசக்திகள் எளிதில் ஊக்குவிப்புத் தொகையைச் சுருட்டிக் கொள்கின்றன. ஆகவே தேவைக்கு அதிகமாக ஊக்குவிப்புத் தொகையை வழங்கிப் பணத்தை வீணடிப்பதற்குப் பதிலாக இத்திட்டத்தின் சிறப்பை எடுத்துரைப்பதற்கும், அறுவைச் சிகிச்சை செய்துகொள்வோர்க்கு மேலும் பல வசதிகளைச் செய்து கொடுப்பதற்கும் இப்பணத்தைச் செலவழிக்கலாம். எடுத்துக்காட்டாக அறுவைச் சிகிச்சையின் போது தனிப்பட்ட கவனம் செலுத்தலாம். தூய, வசதியான படுக்கைகள் அமைக்கலாம். இனிய சுற்றுப்புறச் சூழ்நிலைகளை ஏற்படுத்தலாம்.

இப்பொழுது நாம் என்ன செய்ய வேண்டும்? திறப்பு விழா, திருமணம், திரைப்படம், நேர்முகப் பேட்டி, இறுதிச்சடங்கு முதலான அனைத்து நிகழ்ச்சிகளிலும் குடும்பநலத் திட்டத்தின் அவசியம் பற்றி பயிற்சி பெற்ற பேச்சாளர்களால் மக்கள் மனத்தில் பதியும் வண்ணம் உணர்த்த வேண்டும்.



# ஆசிரியர்களுக்குத் தமிழக அரசு

# அளித்துள்ள சலுகைகள்

ஆசிரியர்களின் பிரச்சனைகள் இம்மாநில அரசால் எப்போதும் ஆழ்ந்த கவனத்துடன் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. அவர்களின் பணி தொடர்புடைய மற்றும் அவர்களின் நலன் பற்றிய கோரிக்கைகளை அரசு அனுதாபத்துடன் அணுகுவது மட்டுமல்லாமல் தேவையான துரித நடவடிக்கைகளை எடுத்து, உடனுக்குடன் ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன. ஆசிரியர்களுக்கு அளிக்கப்பட்ட உதவிகளும், சலுகைகளும் எண்ணற்றவை. பலகோடி கணக்கில் அரசு செலவினை ஏற்று கிட்டத்தட்ட 88 கோரிக்கைகள் ஏற்கப்பட்டுள்ளன. கல்வித்துறையில் பணியாற்றும் பலவகையான ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட்ட உதவிகளும் சலுகைகளும் பின்வருமாறு:-

## மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கான சலுகைகள்

1978-79ல் ஹையர் செகண்டரி எனப்படும் மேல்நிலைப் பள்ளிகள் தொடங்கப்பட்டன. இப்பள்ளிகளில் பாடங்களை நடத்த முதுகலை பட்டத் தகுதி பெறாதவர்கள் உட்பட உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களே பயன்படுத்திக் கொள்ளப்பட்டனர். மேலும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு 7190 ஆசிரியர்களும், உடற்பயிற்சி இயக்குநர்களாக 250 பேரும் ஆய்வுக்கூட உதவியாளர்களாக 900 பேரும் நியமிக்க வழி செய்யப்பட்டது. ஆக, 8340 பேருக்கு வேலைவாய்ப்பு கிட்டியது.

* உயர்நிலைப் பள்ளியிலிருந்து மேல்நிலைப் பள்ளிகளில் ஆசிரியராக நியமனம் பெற பயிற்சி வசதி செய்யப்பட்டது. பயிற்சிக் காலத்தில் ரூ. 40/- சிறப்பூதியம், பயிற்சி முடிந்து சான்றிதழ் பெறுவோர் முறைப்படி நியமனம் பெற்று உரிய ஊதியம் பெற வசதிகள்.

* 750 மாணவர்களுக்கு மேலுள்ள மேல்நிலைப் பள்ளிகளில் கூடுதலாக ஒரு உதவி தலைமை ஆசிரியர் பதவியும் அதற்கு சிறப்பூதியம் ரூ. 25/-ம் கொடுக்கப்படுகிறது.

* மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் பதவிக்கு விதிகள் அறிவிக்கப்பட்டதற்கு முன்னால், தலைமை ஆசிரியர்களாக இருந்தவர்கள் 1.7.78 முதல் இடைக்கால ஏற்பாடாக ரூ. 50/- கூடுதல் ஊதியம் பெற்றனர். ஆசிரியர்கள் கோரிக்கையை ஏற்று இதனை திரும்பப் பெறும் திட்டத்தை அரசு கை விட்டது.

* மேல்நிலைப் பள்ளி பகுதி நேர தொழிலாசிரியர்களின் ஊதியம் ரூ. 150/-லிருந்து ரூ. 300/- ஆக உயர்த்தப்பட்டது.

* மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பதவிகளில் 50 சதவிகித பணியிடங்களை தகுதி வாய்ந்த முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்களைக் கொண்டு நிரப்பலாம் என ஆணையிடப்பட்டுள்ளது.

* மேல்நிலைப்பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களின் வேலை நேரத்தை $5\frac{1}{2}$ மணியாக்கி ஆண்டுக்குரிய வேலை நாட்கள் 220 என்று இருந்ததை 200 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

## உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு

* உயர்நிலைப் பள்ளிகளில் கூடுதலாக தலைமை ஆசிரியர் பதவிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

* அனைத்து ஆசிரியர்களுக்கும் வருடத்தில் 10 நாட்கள் ஈட்டிய விடுப்பு அளித்து ஆணை பிறப்பிக்கப்பட்டது.

* ஆசிரியர்களின், நீண்டகாலக் கோரிக்கைகளை ஏற்று ஆசிரியர்களுக்கான வீட்டு வசதி வாரியம் ஏற்படுத்தப் பட்டுள்ளது.

* ஆசிரியர்களுக்கு பணி பாதுகாப்பு அளித்து பல ஆணைகளை அரசு வெளியிட்டுள்ளது.

* திருமணக் கடன் பெறும் சலுகை அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் வேலை செய்கிறவர்களுக்கும் கிடைக்குமாறு உத்தரவிடப் பட்டது.

* அரசு உதவி பெறும் பள்ளிக்கூட ஆசிரியர்களுக்கும் சிறப்பு சேமநல நிதி மற்றும் பணிக்கொடை திட்டம் விரிவுபடுத்தப் பட்டுள்ளது.

* 3-3-73க்குப் பிறகு தற்காலிகமாக நியமிக்கப்பட்ட பள்ளிக்கூட ஆசிரியர்கள், மொழிப் பண்டிதர்கள், உடற்பயிற்சி ஆசிரியர்கள் ஆகியோர் பிறகு தேர்வாணைக் குழுவால் தேர்ந்து எடுக்கப்பட்டு இருந்தால் அவர்களது பதவி முன் தேதியிட்டு முறைப்படுத்தப் பட்டது.

* தனியார் கல்வி நிலையங்களின் ஆசிரியர்களின் பணி பாதுகாப்புக்கு சட்டப்பூர்வமான வகை செய்யப்பட்டுள்ளது.

* அரசு அல்லாத கல்வி நிலையங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்களுக்கும் தாராள ஓய்வூதியம் கணக்கிடும் முறையில் சிறப்புச் சலுகைகள் அளித்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளன.

* தற்காலிக முதல்நிலை தமிழாசிரியர்கள் நீக்கம் செய்யப்பட இருந்த நிலைமையை தவிர்த்து அவர்கள் பணியை பாதுகாக்க கூடுதலாக 318 பணியிடங்களை அரசு வழங்கி, அவர்கள்

வேலைக்கு பாதுகாப்பு அளித்தது.

* முன்னாள் மாவட்ட கழக உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஒருங்கிணைக்க உரிய ஆணையிடப் பட்டது.

* முன்னாள் மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளிகளில் 1966 முதல் 1970 வரையிலான காலத்தில் பணிபுரிந்த ஆசிரியர்கள் பணிக்காலத்தில் மரணம் அடைந்திருந்தால் அவர்களின் வாரிசுகளுக்கு கருணை அடிப்படையில் வேலை கொடுக்க உத்தரவு போடப் பட்டது.

* அரசு நிதி உதவி பெறும் தனியார் கல்வி நிலையங்களில் வேலை செய்யும் ஊழியர்களுக்கு அரசு ஊழியர்கள் பெறுவது போன்ற பெரும்பாலான சலுகைகளும் ஊதியமும் கிடைக்க அரசு ஏற்பாடு செய்துள்ளது.

### ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும் சலுகைகள்.

* ஆரம்பப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு தனியாக பணிப்படி வழங்க ஆணை பிறப்பிக்கப் பட்டது.

* மிதி வண்டி முன்பணம் பண்டிகை முன்பணம் பெற வகை செய்யப்பட்டது.

* இருபது வருடம் பணிபுரிந்த இளநிலை-இடைநிலை ஆசிரியர்கள் சிறப்பு நிலையும் உரிய ஊதியமும் பெற ஆணையிடப் பட்டது.

* தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் இளநிலை ஆசிரியர்கள் பதவி உயர்வு பெற்று இடைநிலை ஆசிரியர்களாக பணியாற்ற பயிற்சித் திட்டம் வகுக்கப் பட்டது. இதனால் இதுவரை 36 ஆயிரத்து 444 ஆசிரியர்கள் பயன் பெற்றுள்ளனர்.

* ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்கள் அரசு ஊழியர்களாக்கப் பட்டனர். அவர்கள் மற்ற உள்ளாட்சி நிறுவன பள்ளிகளுக்கும், நிதி உதவி பெறும் பள்ளிகளுக்கும் மாறுதலில் செல்ல வழி வகுக்கப்பட்டது.
* 3 ஆண்டுகள் பயிற்றுநர்-விளக்குநர் ஆக பணியாற்றியவர்கள் போதிய கல்வித் தகுதி பெற்றிருந்தால் உதவிப் பேராசிரியர் ஆகவும், அதேபோல பத்தாண்டு உதவிப் பேராசிரியர் களாக இருந்தவர்கள் பேராசிரியர்களாகலாம் என்றும் சலுகை அளிக்கப்பட்டுள்ளது.
* உதவிபெறும் தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கும் இதர பணியாளர்களுக்கும் இதுவரை எந்த அரசும் செய்திராத வகையில் பணி பாதுகாப்பும், சலுகைகளும், ஊதியங்களும் கிடைக்க அவ்வப்போது உரிய ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு வருகின்றன.
* பல்வேறு தொழில்நுட்பக் கல்வி நிலையங்களில் பணிபுரிவோருக்கு உரிய ஊதியங்களும் இதர சலுகைகளும் பணி பாதுகாப்பும் பதவி உயர்வுக்கு வாய்ப்பும் அளிக்கத் தேவையான உத்தரவு ஆணை பிறப்பித்து அவை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.
* 1982 முதல் 1985 வரை 3 ஆயிரத்து 750 இடைநிலை ஆசிரியர் பதவிகளும், 910 பி.எட். தகுதி ஆசிரியர் பதவிகளும், 755 தமிழாசிரியர் பதவிகளும், 280 உடற்பயிற்சி ஆசிரியர் பதவிகளும் 350 தொழில்பயிற்சி ஆசிரியர் பதவிகளும் உருவாக்கப்பட்டுள்ளன. இதனால் ஏற்பட்டுள்ள வேலை வாய்ப்பையும் மக்கள் கவனிக்க வேண்டும். இவை தவிர கீழ்க்கூறிய மற்ற சில சலுகைகளும் அளிக்கப்பட்டுள்ளன:

### கல்லூரி ஆசிரியர்கள்:

* குழு ஆயுட்காப்பு திட்டத்தின்படி அளிக்கப்படும் தொகை ரூ. 10,000லிருந்து ரூ. 20,000 ஆக மாற்றப்பட்டது.
* தனியார் உதவிபெறும் கல்லூரி ஆசிரியர் மற்றும் பணியாளர்களுக்கு அரசு நிதியிலிருந்து பண்டிகை முன்பணம் வழங்கப்பட்டது.
* நியமனத் தேதியிலிருந்து 5 வருடங்களுக்குள் துணைப் பேராசிரியர்கள் மற்றும் பேராசிரியர்கள் நிர்வாக அதிகாரிகளுக்கான கணக்குத் தேர்வில் தேர்ச்சி பெற அனுமதி.
* உடற்கல்வி இயக்குநர்களின் ஊதிய விகிதம் ரூ. 700-1600 ஆக மாற்றப்பட்டது.
* நூலகர்களின் ஊதிய விகிதம் ரூ. 700-1600 ஆக மாற்றப்பட்டது.
* பணிக்காலத்தில் உயிர் நீத்த உதவிபெறும் கல்லூரி பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் வேலை வாய்ப்பு.

### மேனிலைப் பள்ளி ஆசிரியர்கள்:

* உடற்கல்வி இயக்குநர்கள் எம்பிஎட் தகுதி பெறுவதற்கான பயிற்சி காலத்தில் 64 நாட்கள் வரை பணிக்காலமாகக் கருதுதல்.
* கோடை விடுமுறைக் காலத்திலும் பயிற்சி பெறாத தற்காலிக முதுகலை ஆசிரியர்களை தொடர்ந்து பணி புரிய அனுமதி.
* முழுநேர தொழிற்கல்வி ஆசிரியர்களின் தனி ஊதியம் ரூ. 25லிருந்து ரூ. 40ஆக உயர்த்தப்பட்டது.
* முழுநேர தொழிற்கல்வி ஆசிரியர்கள் தனி ஊதியம் பெறுவதற்கு வாரத்திற்கு 24 பிரிவு வேளைகள் பணி இருக்க வேண்டுமென்ற நிபந்தனை நீக்கப்பட்டது.
* உட்படுத்தப்பட்ட ஆசிரியர்களுக்கு நடத்தப்படும் பட்ட மேற்படிப்பு சான்றிதழ் பயிற்சியை பொருளாதாரம், புவியியல் மற்றும் மனையியல் ஆசிரியர்களுக்கும் அளிக்கப்பட்டது.
* கர்நாடகா மாநில ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களின் சான்றிதழ்களை மதிப்பீடு செய்வதில் இருந்த இடர்பாடுகள் நீக்கப்பட்டு, பணிப்பாதுகாப்பு அளிக்கப்பட்டது.

### ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள்:

* ஓராண்டு பயிற்சிபெற்ற இளநிலை மற்றும் இடைநிலை ஆசிரியர்களுக்கு கூடுதல் ஊதியம் அளிக்கப்பட்டது.
* ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட் மாதத்தில் மாணவர் வருகை சராசரி அடிப்படையில் ஆசிரியர் எண்ணிக்கையை அரசு உதவிபெறும் பள்ளிகளில் நிர்ணயம் செய்து கல்வி மானியம் வழங்குதல்
* பதவி உயர்வைத் துறந்தவர்களுக்கும் தேர்வு நிலை/சிறப்பு நிலை வழங்குதல்.
* 1.4.1978 முதல் முழுநேர கைத்தொழில் ஆசிரியர்களுக்கு (இனம். 3 மற்றும் 4) ஊதிய விகித மாற்றம்.

மேற்கூறியவைகளிலிருந்து ஆசிரியர்கள் இவ்வரசினால் மிகுந்த பயனடைந்துள்ளார்கள் என்பது நன்கு தெரியவரும். ஆகவே மாணவர்களின் நலன் கருதி, பள்ளிகள் தொடர்ந்து நடைபெற ஆசிரியர்கள் உடனடியாக தங்கள் பணிக்குத் திரும்புவார்கள் என்று அரசு எதிர்பார்க்கின்றது.

**— கல்வித் துறை, சென்னை 9.**







## தந்தை பெரியார் நினைவகம் அடிக்கல் நாட்டு விழா

### வாழ்த்துச் செய்தி

தந்தை பெரியார் அவர்கள் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக இருந்தபோது 1924-ல் மன்னராட்சி நடைபெற்ற கேரளத்தில் வைக்கம் நகரில் தீண்டாமையை ஒழிக்க அறப்போர் நடத்தி இருமுறை சிறைப்பட்டார்.

இந்தியாவிலேயே தீண்டாமையை எதிர்த்து முதன்முதலாகச் செயல்வடிவத்தில் அறப்போர் நடத்தப்பட்டதும், அந்தப் போரின் முதல் நாயகராக விளங்கியவரும் தந்தை பெரியார் அவர்கள்தான். மகத்தான இந்தச் சாதனை புரிந்த பெரியாரை அனைத்து இந்தியாவும் 'வைக்கம் வீரர்' என்று போற்றிப் புகழ்ந்தது.

பெரியார் அவர்களின் நூற்றாண்டு விழாவை யொட்டி, தமிழக அரசு அமைத்த குழுவின் பரிந்துரையையொட்டி, வைக்கம் நகரில் தந்தை பெரியார் அவர்களுக்கு நினைவகம் அமைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. கேரள அரசு மனமுவந்து வழங்கியுள்ள நிலத்தில் குழந்தைகள் பூங்காவும் தந்தை பெரியார் அவர்களின் சிலையும் வைக்க தமிழக அரசின் சார்பில் ஏற்பாடு நடக்கிறது. இந்த நினைவகத்தின் அடிக்கல் நாட்டு விழாவினை கேரள அரசுடன் இணைந்து தமிழக அரசு நடத்துவது பெரியார் அவர்களின் நினைவுக்குப் பெருமை சேர்ப்பதாகும்.

வைக்கம் நகரில் 3.11.85 அன்று நடைபெறும் தந்தை பெரியார் நினைவக அடிக்கல் நாட்டு விழாவில் நான் நேரில் வந்து கலந்து கொள்ள இயலாவிடினும் நான் அங்கு வந்து இருப்பதாகவே கருதிட வேண்டுகிறேன்.

தந்தை பெரியாரின் சீரிய நினைவுகளை அனைவருடைய உள்ளங்களிலும் எழுப்பிடும் வண்ணம் இந்த நினைவகம் அமைந்திடும் என்று நம்புகிறேன்.

பெரியார் நினைவக அடிக்கல் நாட்டு விழா இனிது நிறைவேற என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**எம். ஜி. இராமச்சந்திரன்**

## எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்:

# வறுமைக்கோட்டைத் தாண்டுவோம்!

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டம், வாழ்க்கையில் முன்னேறத் துடிக்கும் ஏழை எளியவர்களுக்கு ஓர் வரப்பிரசாதமாகும்.

சமுதாயத்தின் அடித்தளத்தில் வாழும் மக்கள் சீரான வாழ்க்கையை அமைத்திடவும், அவர்களை வறுமைக்கோட்டிற்கு மேலே கொண்டுவரவும் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் உதவிக் கரமாக விளங்கி வருகின்றன.

கன்னியாகுமரி மாவட்டத்தில், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ள பலரைச் சந்தித்தபோது—

### திருமதி செய்தூன்

திருமதி செய்தூன் என்பவர் ஒரு விதவைப் பெண். இவருக்கு மூன்று சிறுவர்கள் இருக்கின்றார்கள். கோரைப்பாய் நிறுவுத் தொழிலினை தமது பரம்பரைத் தொழிலாகக் கொண்ட இவர் தமக்குத் கோரைப்பாய் தறி உடைமையாக இல்லாத காரணத்தால் கூலிவேலை ஆற்றி வந்தார். இவருக்குத் தினசரி கூலி ரூபாய் 3 மட்டும்தான்.

மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவனத்தில் 1983-84ஆம் ஆண்டு பொருளாதார ஆய்வுக் கணக்கெடுப்பில் வறுமைக் கோட்டிற்கு கீழ் கண்டெடுக்கப்பட்டு பாரத ஸ்டேட் வங்கியின் மூலம் 31.1.1984 அன்று ரூ. 1000 மானியத்துடன் கூடிய கடனாக வழங்கப்பட்டது. ரூபாய் 750 ஆண்டு வருமானத்தினைக் கொண்டிருந்த இவர் குடும்பம் தற்போது ரூபாய் 1,500 வருமானத்தினைக் கொண்டு மின்னல் வேகத்தோடு முன்னேறிக் கொண்டு வருகின்றது.

கடன் தொகையினை ஒழுங்காக ரூபாய் 35 வீதம் வங்கியில் இவர் செலுத்திவந்தார். இவர் உற்சாகத்தைக் கண்ணுற்ற பாரத ஸ்டேட் வங்கியினர் மானியமில்லாக் கடன் உதவியினை வழங்கி உள்ளனர். இவர் குடும்பப்பொருளாதார நிலை இப்போது உயர்ந்த வண்ணமிருக்கிறது. இவர் வறுமைக்கோடு என்னும் வேலியினைத் தாண்டும் நாள் வெகு தொலைவில் இல்லை.

### திரு சந்திரன்காணி

திரு.சந்திரன்காணி ஒரு சிறு விவசாயி. இவருக்கு நான்கு பிள்ளைகள் இருக்கின்றனர். இவர் தமக்குரிய மூன்று ஏக்கர் மலை நிலத்தில் சிறுபயிர்கள் செய்து வந்தார். இவர் தமது வேளாண்மையின் மூலம் கிடைக்கும் மிகக் குறைந்த வருமானத்தைக் கொண்டு வறுமையோடு போராடிக்கொண்டிருந்தார்.

1983-84ஆம் ஆண்டு மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவனம் நடத்திய குடும்பக் கணக்கெடுப்பில், இவர் குடும்பம் வறுமைக் கோட்டிற்குக் கீழ்வாழ்ந்து வருவதாகக் கணக்கெடுக்கப்பட்டு, மானியத்துடன் கூடிய கடன் ரூ. 1700 அருமனை பாரதஸ்டேட் வங்கி வாயிலாகக் கிடைப்பதற்கு வழிவகை செய்யப்பட்டது.

இவர் மானியத்துடன் கூடிய கடன் தொகையைக் கொண்டு 15 தேனீப் பெட்டிகள், ஸ்மோக்கர், தேன் சுத்திகரிக்கும் கருவி, மற்றும் இதர கருவிகள் ஆகியவற்றை வாங்கி தேனீ வளர்ப்புத் தொழிலைத் தொடங்கினார். இவர் குடும்பத்தாரின் கடின உழைப்பினைக் கண்ணுற்று வியந்த மேல்புறம் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர், இவரது மூத்தமகள் லீலாவுக்கு அருமனை,



பாரத ஸ்டேட் வங்கி மூலம் சுயவேலை வாய்ப்புத்திட்டத்தின்கீழ் தையல் இயந்திரத்திற்குமானியம் இல்லாத கடன் கிடைப்பதற்கு வழிவகை செய்தார்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டம் மூலம் கடன் பெறுவதற்கு முன்னர் சந்திரன்காணியின் ஆண்டு வருமானம் ரூ.1500 ஆக இருந்தது. தற்போது இவர் குடும்பம் தேனீ வளர்ப்பதன் மூலம் ரூ. 700, பயிர்த்தொழில் மூலம் ரூ. 1500, தையல்தொழில் மூலம் ரூ. 140 ஆக ரூ. 2,240. ஆண்டு வருமானமாகப் பெறுவதுடன், வறுமைக் கோட்டினைத் தாண்டும் வண்ணம் வாழ்க்கைத் தரத்தில் உயர்ந்து, பெற்ற கடனுக்கான தவணைத் தொகையையும் தவறாமல் செலுத்தப்பட்டு வருகிறது.



தேனீ வளர்ப்பு: திரு. சந்திரன்காணி

### திரு பாஸ்கரன்காணி

திரு பாஸ்கரன்காணி என்பவர் பழங்குடி வகுப்பினைச் சார்ந்தவர். இவருக்கு இரண்டு ஆண் குழந்தைகள் மற்றும் ஒரு பெண் குழந்தை ஆகியோர் உள்ளனர்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டத்தின் மூலம் கடன் பெறுவதற்கு முன்னர் ரூ. 1000 இவர் ஆண்டு வருமானமாகக் கொண்டிருந்தார். தற்போது இவர் வருமானம் ரூ. 1800 ஆக உயர்ந்துள்ளது. கிடைத்த வாய்ப்

இவருக்கு உடைமையாக 1½ ஏக்கர் தரிசு நிலம் இருந்தது. சிறிய தேனீர்க்கடை வைத்திருக்கும் இவர் இதன்மூலம் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு வாழ்க்கையைத் தொடரமுடியாமல் வறுமையில்வாடினார். 1983-84ஆம் ஆண்டு மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவனம் நடத்திய குடும்பக் கணக்கெடுப்பில் இவர் குடும்பம் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்ந்து வருவதாகக் கண்டெடுத்து அருமனை, பாரத ஸ்டேட் வங்கி கிளையின் வழியாக, தேனீ வளர்ப்பதற்காக மானியத்துடன் கூடிய கடனாக வழங்கியது. கிடைக்கப்பெற்ற கடன் உதவியைக் கொண்டு 14 தேனீக் கூடுகள் மற்றும் இதரக் கருவிகள் வாங்கி தேனீவளர்ப்புத் தொழில் துவங்கியபின் இவரது வாழ்க்கைத்தரம் உயர்ந்திருக்கின்றது.

பினைக் கொண்டு கடுமையாக உழைக்கின்றார்.

### திரு நீலகண்டப் பிள்ளை

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி நிறுவனம் மூலம் நலிந்த பிரிவினர் ஒவ்வொருவரும் 3000 ரூபாய் மானியமாக அடைய தகுந்த இடைவெளிக்குப் பிறகு (6 மாதம்) கடன் கொடுத்து கடன் பெறுபவர்களின் வாழ்க்கையினைப் படிப்படியாக உயர்த்தி வருகிறது. இவ்வாறு பயனடைபவர்களில் ஈசாந்திமங்கலம் (மேற்கு) பகுதியைச் சார்ந்த திரு நீலகண்டப்பிள்ளையும் ஒருவர். இவருக்குப் பசுமாடு ஒன்று கடனாக இந்நிறுவனம் வழங்கியது. பிறகு ஒரு மாட்டுத் தொழுவம் வைக்க வடசேரி கனரா வங்கி, மூலம் கடன் வழங்கியது. அதில் 1000 ரூபாய் மானியமும் வழங்கியது. இப்போது மாட்டினை உரிய முறையில் பேணிபாதுகாக்க மாட்டுத் தொழுவம் அமைத்துள்ளமையால் மேலும் அவரது வருமானம் உயர்ந்துள்ளது. வாழ்க்கையில் நல்ல நிலையில் அவர் முன்னேறியுள்ளார்.

### திரு நாடான்கண்

மனைவி மற்றும் 7 குழந்தைகளுடன் வறுமையுடன் வாழும் நாடான்கண், பனை ஏறும் தொழில் மூலம் நாளொன்றுக்குக் கிடைத்த ரூ. 7 சராசரி வருமானத்தில் குடும்பத்தினை நடத்தி வந்தார். அவரது அயராத உழைப்பினால் பசுமாடு ஒன்றை வாங்கி நல்லமுறையில் பேணிவருகிறார். இவரது முயற்சியினைப் பாராட்டி அவரது சொந்த பசுமாட்டினை மேலும் நல்ல முறையில் பராமரிக்க மாட்டுத்தொழுவம் ஒன்று அமைக்க 1984-85ல் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ஊக்கமளிக்கப்பட்டது.

ஊராட்சி ஒன்றியம் கிள்ளியூர் வழியாக மார்த்தாண்டம் ஸ்டேட் பாங்க் ஆப் திருவிதாங்கூருக்குக் கடன் மனு அனுப்பப்பட்டு உரிய காலத்திற்குள் கடன் மனு அங்கீகரிக்கப்பட்டது. மாட்டுத் தொழுவம் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்ட வழிமுறைகளைப் பின்பற்றியே கட்டப்பட்டுள்ளது. இவருக்கு 3000 ரூபாய் கடனில் 1000 ரூபாய் மானியமாக நாகர்கோவில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி நிறுவனம் வழங்கியது.

இவரது தற்போதைய தினசரி வருமானம் ரூ. 15 வரை கிடைக்கிறது. வறுமைக்கோட்டைத் தாண்டும் நிலைமையை இவர் அடைந்து கொண்டிருக்கிறார்.

# தமிழ்நாட்டில் கைத்தறி வளர்ச்சி

நீண்டகாலமாக இயங்கி வரும் கிராமியத் தொழில்களில் ஒன்றான கைத்தறித் தொழில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக வேலைவாய்ப்பினை மக்களுக்குப் பெருமளவில் அளித்து வருகிறது. தமிழ்நாட்டில் 5.56 இலட்சம் கைத்தறிகள் இயங்கிவருகின்றன. இதன் மூலம் 13.34 இலட்சம் நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கிறது. 1984-85-ஆம் ஆண்டு முடிய 68 சதவிகித நெசவாளர்கள் கூட்டுறவு அமைப்பின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர். தேசிய இலக்கான 60 சதவிகிதத்தைத் தாண்டி, தமிழ்நாட்டைப் பொறுத்தவரை 68சதவிகிதம் கைத்தறிகள் கூட்டுறவு அமைப்பின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

### கைத்தறிகளைக் கூட்டுறவு அமைப்பின்கீழ் கொண்டு வந்து சலுகைகள் வழங்கல்

தமிழ்நாட்டிலுள்ள நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்தினராக அனுமதிக்கப்படும் ஒவ்வொரு நெசவாளருக்கும் பங்கு மூலதனத் தொகை செலுத்துவதற்காக, பருத்தித் தறி ஒன்றிற்கு ரூ. 200 பட்டு மற்றும் கம்பளித் தறி ஒன்றிற்கு ரூ. 250, பாலியஸ்டர் தறி ஒன்றிற்கு ரூ. 500 என்ற உச்ச வரம்பிற்கு உட்பட்டுக் கடன் உதவி அளிக்கப்பட்டு வருகிறது. 31-3-1985-ல் தமிழ்நாட்டில் 1588 கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் 3.74 இலட்சம் தறிகளுடன் இயங்கி வருகின்றன.

கூட்டுறவுச் சங்கங்களின் நடைமுறை மூலதனத்தினை அதிகரிக்கும் பொருட்டு தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி நிறுவனம் (NABARD) மறு நிதி உதவியளித்துவருகிறது. இந்நிறுவனம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வங்கி வீதத்தை விட 2.5 சதவிகிதம் குறைந்த வட்டி கடன் உதவி அளித்து வருகிறது. இச்சலுகையின் மூலம் தலைமை மற்றும் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 7.5 சதவிகித வட்டியில் நடைமுறை மூலதனம் பெற்று வருகின்றன.

### நெசவாளர் நலத் திட்டங்கள்

நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்தினராக உள்ளவர்களின் நலனை முன்னிட்டு நெசவாளர்கள் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் சேர்ந்துள்ள ஒரு நெசவாளர், தான் சம்பாதிக்கும் ஒவ்வொரு ரூபாய்க்கும் 6 காசு சந்தாத் தொகையைக் கட்டி வருகின்றார். இந்த ரூபாய்க்கு அரசு 3 காசு கொடுக்கிறது. இத்திட்டத்தின்கீழ் ஒருவர் இறக்க நேரிட்டால் அவரது நியமனதாரருக்குச் சேமிப்புக் கணக்கில் உள்ள மொத்தத் தொகை, அதற்குரிய வட்டி ஆகியவைகளுடன் ஆயுள் இன்சூரன்ஸ் கழகத்திடமிருந்து ரூ. 3,000 பெற்றுக் கொடுக்கப்படுகிறது. 1962 ஆம் ஆண்டிற்குப் பிறகு நிறுத்தி வைக்கப்பட்ட வீட்டு வசதித் திட்டம் மீண்டும் 1979-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1982 ஆம் ஆண்டு சூலை முதல் தேதி முதல் வீடு கட்ட ஆகும் செலவின் மதிப்பு ரூ. 12,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அதில் அரசு மானியமாக ஒரு வீட்டிற்கு ரூ. 1,000 கொடுக்கப்பட்டு வருகிறது.

சம்பந்தப்பட்ட நெசவாளர்கள் அவருடைய பங்காக ரூ. 1,300 கொடுக்க வேண்டும். இத்திட்டத்தின் கீழ், 6வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 31-3-1985 முடிய 2286 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

### தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் (கோ-ஆப்டெக்ஸ்)

கோ-ஆப்டெக்ஸ் என்று எல்லோராலும் அழைக்கப்படும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் தமிழ்நாட்டில் உள்ள 1588 பிரதம நெசவாளர்கள் சங்கங்களின் தலைமைச் சங்கம் ஆகும். இது நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்தியில் பொதுவாக 50 சதவிகிதத்தை கொள்முதல் செய்து நாடெங்கிலும் உள்ள அதன் 630 கிளை விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்து வருகின்றது. இச்சங்கம் கடந்த 1984-85ஆம் ஆண்டில் 31-1-1985 முடிய ரூ. 38.40 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகளைக் கொள்முதல் செய்து, ரூபாய் 63.88 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகளை விற்பனை செய்துள்ளது. மத்திய அரசின் மலிவு ரகத் துணிகளை அளிக்கும் ஜனதா ரகத் திட்டத்தினை இச்சங்கம் நிறைவேற்றி வருகிறது. இதன் மூலம் மக்களுக்கு மலிவு விலையில் ஜனதா ரக வேட்டிகள் சேலைகள் லுங்கிகள் போன்றவை கிடைக்கின்றன. தவிர அரசுப் பணியாளர்களுக்கும், உள்ளாட்சித் துறை ஊழியர்களுக்கும் கைத்தறித் துணிகளைக் கடனில் விற்பனை செய்யும் திட்டத்தினையும் கோ-ஆப்டெக்ஸ் தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றது.

> சமயம் என்பது மனிதனின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கக்கூடியதாய் இருக்க வேண்டும். அவனுக்கு அது சரியான பாதையைக் காட்டவேண்டும்.
>
> -பேரறிஞர் அண்ணா.



# ‘தாட்கோ’ மணிகள்

வட ஆர்க்காடு மாவட்டத்தில் ஆதிதிராவிட மாணவ, மாணவியர்களுக்கு அவர்களது கல்வி அறிவைப் பெருக்கி, சமுதாயத்தில் முன்னேற, தமிழக அரசு பல கல்விக் கூடங்களையும், அவர்கள் தங்கிப் படிக்க விடுதிகளையும் கட்டி வருகிறது. இதனால் பல்லாயிரக்கணக்காக ஆதிதிராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்ட மாணவ மாணவியர் பயன் அடைந்து வருகின்றனர்.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் இதுவரை 23 விடுதிகள் கட்ட தமிழக அரசு அனுமதித்துள்ளது. அதில் 9 ஆதிதிராவிட மாணவர் விடுதிகளும், 8 ஆதிதிராவிட மாணவியர் விடுதிகளும், 6 பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதிகளும் அடங்கும்.

அரக்கோணம், ஆரணி, வாணியம்பாடி, வேட்டவலம், வந்தவாசி, குடியாத்தம், செங்கம், கொழப்பலூர் ஆகிய இடங்களில் ஆதிதிராவிட மாணவர் விடுதிகள் கட்டி முடிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. பாணாவரம் கிராமத்தில் 50 மாணவர்கள் தங்கும் வசதி கொண்ட விடுதி கட்டப்பட்டு முடியும் தறுவாயில் உள்ளது.

ஆதிதிராவிட மாணவியர் விடுதி அரக்கோணம், வந்தவாசி, செய்யாறு, காட்பாடி, ஆரணி, சோளிங்கர், திருவண்ணாமலை ஆகிய இடங்களில் கட்டி முடிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. குடியாத்தம் நகரில் 77 மாணவியர் தங்கும் வசதி கொண்ட விடுதி கட்டப்பட்டு வருகின்றது.

மேலும், பிற்படுத்தப்பட்டோர் மாணவர்கள் விடுதிகள், திருவண்ணாமலை, குடியாத்தம், செய்யாறு, இராணிப்பேட்டை, திருப்பத்தூர், ஆரணி ஆகிய இடங்களில் கட்டி முடிக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன.

கைத்தறித் துணிகளின் ஏற்றுமதியை அதிகரிக்கும் பொருட்டு ''கோ-ஆப்டெக்ஸ் இன்டர்நேஷனல்'' என்ற ஓர் அமைப்பினை ஏற்படுத்தி அதன் மூலம் கைத்தறித் துணிகளின் ஏற்றுமதியை அதிகரிக்க, தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம்

கூட்டுறவு அமைப்பின்கீழ் வராத கைத்தறி, விசைத்தறித் தொழில்களுக்கும், அவற்றின் துணைத் தொழில்களுக்கும்தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் மூலம் கடன் உதவி அளிக்கப்பட்டு வருகிறது. இக்கழகம் 2028 தனியார் கைத்தறி நெசவாளர்களுக்கு நடைமுறை மூலதனத்தினைக் கடனாக (31-12-1984 முடிய) ரூ. 196.55 இலட்சம் அளித்துள்ளது.

### கைத்தறி வளர்ச்சித் திட்டங்கள்

மத்திய அரசின் நிதி உதவியுடன் இம்மாநிலத்தில் 4 தீவிர கைத்தறி வளர்ச்சித் திட்டங்களையும் இரண்டு ஏற்றுமதி உற்பத்தித் திட்டங்களையும் அரசு நிறுவியுள்ளது. இந்த 6 திட்டங்களிலும் 16,264 இயங்கும் தறிகள் பயன்படுத்தப்பட்டன.

நவீன சாயச்சாலைகள் 7 அமைக்கத் திட்டமிடப்பட்டு இதுவரை சேலம், திருநெல்வேலி, திருவில்லிபுத்தூர், வேலூர், ஈரோடு ஆகிய ஐந்து இடங்களில் சாயச்சாலைகள் அமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டுவருகின்றன. திருச்சி மற்றும் சென்னிமலை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டு வரும் சாயச்சாலைகள் விரைவில் செயல்படத் துவங்கும். நவீனச் சாயச் சாலைகள் கூட்டுறவுச் சங்கங்களின் நூலுக்குச் சாயமிடும் வசதியை அளிக்கின்றன.

### தமிழ்நாடு சரிகை நிறுவனம்

காஞ்சிபுரத்திலுள்ள தமிழ்நாடு சரிகை நிறுவனம் பிரதம பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான சரிகையை உற்பத்தி செய்து வழங்கி வருகிறது. இந்நிறுவனம் அதன் சரிகை உற்பத்தியை மாதம் ஒன்றிற்கு 500 மார்க்குகளிலிருந்து சுமார் 1000 ஆகஉயர்த்தியுள்ளது.

### கூட்டுறவு நூற்பாலைகள்

தமிழ்நாட்டில் 17 கூட்டுறவு நூற்பாலைகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் மொத்தம் 3.40 இலட்சம் கதிர்கள் இயங்கி வருகின்றன. இவை மாதம் ஒன்றிற்கு சுமார் 10,000 பேல்கள் (10-ம் நெம்பரிலிருந்து 120 நெம்பர் வரை) பருத்தி நூல்களை உற்பத்தி செய்து வருகின்றன. அவ்வாறு உற்பத்தி செய்யப்படும் நூல்கள் கோ-ஆப்டெக்சின் 22 நூல் விற்பனை நிலையங்கள் மூலம் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன. இவ்விதம் விநியோகிக்கப்படும் நூல்கள் நியாயமான விலையில் அதாவது மார்க்கெட் விலையை விட சகாய விலைக்குக் கைத்தறி நெசவாளர்களுக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கிடைக்கின்றன.

### தமிழ்நாடு கூட்டுறவு துணி நூல் பதனிடும் ஆலை

கைத்தறித் துணிகளின் விற்பனையை ஊக்குவிக்கும்பொருட்டு ஈரோட்டில் தமிழ்நாடு கூட்டுறவு துணி நூல்பதனிடும் ஆலைஒன்று செயல்பட்டு வருகிறது. இங்கு மாதம் ஒன்றுக்கு சுமார் 10 இலட்சம் மீட்டர் கைத்தறித் துணிகளுக்கு வெளுக்கப்படுதல்; பிரிண்ட் செய்தல்; சாயம் போடுதல்; பளபளப்பாக்குதல் முதலிய பதனிடும் வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. இவ்வாலையில் கூட்டுறவு நெசவாளர்கள் சங்கங்களுக்குத் தேவையான நூலும் சாயமிடப்பட்டு விநியோகிக்கப்படுகிறது.



திரு. பாஸ்கரன்காணி குடும்பம்

**திரு ஜெபமணி**

திரு. ஜெபமணி ஒரு விவசாயக் கூலி. பருவகாலங்களில் மட்டுமே இவருக்கு வேலை கிடைக்கும். மற்ற காலத்தில் வேலையின்றி வறுமையில் வாடி வந்தார். இவருக்கு உடைமையாக வீட்டுமனை 5 சென்ட் நிலம் உள்ளது.

கன்னியாகுமரி மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவனம், 1984-85ஆம் ஆண்டு நடத்திய குடும்பக் கணக்கெடுப்பில், இவர் குடும்பமும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்ந்து வருவதாக ஆய்வுசெய்து இவர் தேவையினை நன்குணர்ந்து உழவு மாடு வாங்குவதற்கு மானியத்துடன் கூடிய கடன் ரூ.2,500 நாகர்கோவில் சிண்டிகேட் வங்கி மூலம் கிடைக்க வழிவகை செய்தது.

உழவுத் தொழில் மூலம் வாழ்க்கையில் முன்னேறுவதற்கு வாய்ப்பினைப் பெற்ற இவர் 1.25 ஏக்கர் நிலத்தினைத் துணிவோடு குத்தகைக்கு எடுத்தும் பயிரிடுவதுடன், கூலிக்கு நிலங்களை உழுதும் வருகிறார்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் பயனடைவதற்கு முன்னர் ஆண்டு வருமானம் ரூ. 1200 பெற்ற இவர், இப்போது ரூ. 3600க்கு மேல் வருமானம் ஈட்டி, வறுமைக் கோட்டை கடந்துவிட்டார்.

**திரு ஆர். குமாரசாமி**

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தினால் ஆயிரக்கணக்கானவர் பயன்பெற்றவர். மேலும் சிலர் பெற்ற நன்மைகள் இங்கு விளக்கப்படுகின்றன.

அன்றாடம் கூலிவேலைசெய்து அதில் கிடைக்கும் மாத வருமானம் ரூ.200 கொண்டு வாழ்க்கையை ஓட்டிவந்தார், திரு குமாரசாமி. 16.9.83ல் அன்னாருக்கு நாகர்கோவில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி நிறுவனம் மூலம் மார்த்தாண்டம், யூனியன் வங்கி வண்டிமாடு வழங்கியது. கடன்தொகை ரூ.5,500. இத்தொகையில் ரூ. 1833 மானியத் தொகையாகும். மிகவும் நேர்மையும் உண்மை உழைப்பும் கொண்ட இவர் தன் கடன் தொகையினை உரிய தவணையில் ஒழுங்காகக் கட்டி வருகிறார்.

இவரது வருமானத்தினை மேம்படுத்தவும்., வறுமைக் கோட்டிற்கு மேல் இவரைக் கொண்டுவர எண்ணி இவருக்கு மானியம் ரூ. 1000த்துடன் 3000 ரூபாய்க்குப்பசுமாடு வழங்கப்பட்டது. தற்போது மாதம் ஒன்றுக்கு ரூ.300 பசுமாடு மூலம் வருமானம் பெறுகிறார்.

**திரு ராஜப்பன்**

இவர் ஒரு ஏழை சலவைத் தொழிலாளி. இவருக்கு எந்தவிதமான சொத்துக்களும் இல்லை. இவர் கூலியாக மாதம் ரூ. 150 பெற்றுவந்தார். இவர் முன்பு இத்தொழில்செய்யப் போதிய உபகரணங்களின்றி அல்லலுற்றார். இவரது ஏழ்மையினை அகற்றிட நாகர்கோவில் ஊரக வளர்ச்சி நிறுவனம் முயற்சிகளை மேற்கொண்டது. இதன்பயனாககுழித்துறை, ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா மூலம் ரூ. 1500 கடன் வழங்கப்பட்டது. இத்தொகையில் ரூ. 500 மானியமாக நாகர்கோவில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி நிறுவனம் கொடுத்துள்ளது. இவருக்குக் கடன் வழங்கப்பட்ட பிறகு தனது தொழிலை விரிவுபடுத்த பெரிய அளவில் ஆரம்பித்தார். தற்போது இவரது வாழ்க்கைத்தரம் உயர்ந்துள்ளது. முன்பு தன் செலவுதான் நடந்துவந்ததே தவிர மீதம் எதுவும் இல்லை. தற்போது இவருக்கு மாத வருமானம் ரூ. 800 வரை கிடைக்கிறது. வங்கிக்கடன் ஒழுங்காக அடைத்து வருகிறார். இவரைப் போல் நாகர்கோவில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தினால் மேன்மை பெற்றவர்கள் பலர்.

**சமுதாயத்திலே புதிய துறைகள், அதன் அமைப்பிலே புதியதோர் மாற்றம் தேவை. அந்தப் புதிய உருவத்தை உருவாக்கும் உயரிய பணிதான் மறுமலர்ச்சி.**







# ஏழை எளியோருக்கு இரண்டு இலட்சம் இல்லங்கள்

மனிதனின் முதல் மூன்று முக்கியத் தேவைகள் என, உணவு, உடை, உறைவிடம் என்று வரிசைப்படுத்தினர் அன்று. ஆனால், பெருகிவரும் மக்கள் தொகையும் மாறிவரும் பழக்க வழக்கங்களும் மறைந்து வரும் கூட்டுக் குடும்ப முறையும், மூன்றாவது இடத்திலிருந்து உறைவிடத்தை, முதலிடத்திற்குக் கொண்டுவந்து விட்டன இன்று!

ஒரு மனிதன் தன் ஆயுளில் செய்ய வேண்டிய மங்கலச் செயல்களில் ஒன்றாக, அவன் தனக்கென ஒரு வீடு கட்டிக் கொள்வது என நமது நூல்கள் கூறுகின்றன. இன்று வீடு கட்டுவதில் செலவிடப்படும் தொகை ஒரு சிறந்த முதலீடு ஆகவும் மக்கள் உணர்ந்துள்ளனர்.

தற்போது இந்தியா முழுவதிலும், 37,000 கூட்டுறவுச் சங்கங்கள் மக்களுக்கு வீட்டுவசதி அளித்திடும் பணியில் ஈடுபட்டுள்ளன. இவற்றில் 24 இலட்சம் உறுப்பினர்கள் உள்ளனர். இச்சங்கங்களின் மூலம் கடன் உதவி பெற்று 6 இலட்சம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 4 இலட்சம் வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இந்தியா முழுமைக்குமாக 20 தலைமைச் சங்கங்கள் தமது 37,000 பிரதம சங்கங்களின் மூலமாக வீடு கட்டக் கடன் வழங்கி வருகின்றன. கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களின் மூலம் இது வரை 1042 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளது. வழங்கப்பட்ட கடனில் முக்கால் பங்கு, அதாவது நான்கில் மூன்று பங்குத் தொகை பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கும், நடுத்தர வருவாய் உள்ள மக்களுக்கும் வீடுகள் கட்டிக் கொள்வதற்காக வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழகத்தில், கூட்டுறவு வீட்டு வசதி இயக்கத்தின் வரலாறு, 1914ஆம் ஆண்டு, கோவை மாவட்டத்தில், ''கோயம்புத்தூர் கூட்டுறவு வீடு அடமான பாங்கு'' தொடங்கப்பட்டதிலிருந்துஆரம்பமாகிறது. இதைத் தொடர்ந்து சென்னை, ஈரோடு, தஞ்சாவூர் ஆகிய நகரங்களில் கூட்டுறவு வீடு அடமான பாங்குகள் ஆரம்பிக்கப்பட்டுப் பொருளாதாரத்தில் நலிவுற்ற மற்றும் மத்திய தர நகர மக்கள், தங்கள் சொந்த வீடுகளைப் பழுதுபார்க்கவும் மேம்பாடு செய்யவும் முன்கடன்களைத் தீர்க்கவும், வீட்டை அடமானமாக வைத்துக் தனியாரிடம் பெற்ற அடமானக் கடன்களைத் தீர்க்கவும், சொந்த மனையில் புது வீடு கட்டிக் கொள்வதற்கும் நீண்ட காலத் தவணையில் குறைந்த வட்டியில் சுலபமான மாதத்தவணைகளில் திருப்பிச் செலுத்தக் கூடிய எளியமுறையில் கடன் வழங்கி வெற்றிகரமாகச் செயல்பட்டு வந்தன. வீடு அடமான பாங்குகளின் மூலம் அந் நகரங்களில் வாழும் நடுத்தர வருவாய் மக்களும், எளிய மக்களும், பெற்றுவந்த பயன்கள், தமிழகத்திலுள்ள மற்ற நகரங்களுக்கும் கிடைத்திட அதே போன்ற அமைப்புகள் பிற நகரங்களிலும் ஆரம்பிக்கப்பட வேண்டுமென தன்னலமற்ற கூட்டுறவாளர்களும், கூட்டுறவுத் துறை அலுவலர்களும், பொது மக்களும் விரும்பினார்கள்.

**மு. கிருஷ்ணசாமி**
**இணைப்பதிவாளர்—சிறப்பு அலுவலர், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கம்**

மேற்கண்ட நான்கு நகரங்களில் செயல்பட்டு வந்த கூட்டுறவு வீடு அடமான பாங்குகள் தென்னிந்தியக் கூட்டுறவு ஆயுள் இன்ஷுரன்ஸ் சங்கத்திடமிருந்து, நிதியுதவி பெற்று வந்தன. ஆயுள் பாதுகாப்புக் கழகங்கள் தேசியமயமாக்கப்பட்ட பிறகு, தென்னிந்திய கூட்டுறவு ஆயுள் பாதுகாப்புச் சங்கம் வீடு அடமான பாங்குகளுக்கு அளித்து வந்த கடனை நிறுத்தவேண்டியதாயிற்று. எனவே ஏற்கனவே இயங்கி வந்த வீடு அடமான பாங்குகளுக்கும் அவற்றைப் போலவே தமிழகத்தின் இதர நகரங்களில் நிறுவப்படவிருந்த பாங்குகளுக்கும், நீண்ட காலக் கடன் வழங்கவும், இத்தகைய பாங்குகளை இணைத்து, அவற்றின் பணிகளைச் சீராக்கிச் சிறப்பாகச் செயல்படுத்தவும் விரிவாக்கவும் தலைமைக் கூட்டுறவு அமைப்பு ஒன்று தேவை என, அன்றைய கூட்டுறவுப் பதிவாளரையும், தமிழக அரசையும் ஆரம்பகால வீட்டுவசதித் துறையில் ஆர்வம் கொண்டிருந்த கூட்டுறவாளர்கள் கோரிதயன் பேரில் தமிழக அரசு, மாநில கூட்டுறவுப் பதிவாளரின் பரிந்துரையின்அடிப்படையில் தமிழக வீடு அடமான பாங்குகளின் தலைமை நிறுவனமாக ( Apex Institution ) சென்னை கூட்டுறவு மத்திய ''வீடு அடமான பாங்கு'' என்ற பெயரில் நிறுவ ஆணையிட்டு அதற்கு ஆவன செய்ய, கூட்டுறவுச் சங்கங்களின் துணைப்பதிவாளர் ஒருவரையும் நியமித்தது.

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம், 18.3.1959ஆம் நாளன்று பதிவு செய்யப்பட்டு, 15.7.1959ஆம் நாளன்று 'சென்னை கூட்டுறவு மத்திய வீடு அடமான பாங்கு லிமிடெட்' என்ற பெயரில் அன்றைய தமிழக முதல்வர் அமரர் காமராசர் அவர்கள் தலைமையில், அன்றைய தமிழகக் கூட்டுறவு அமைச்சரும், தற்போதைய இந்தியக் குடியரசுத் துணைத் தலைவருமான திரு ஆர். வெங்கட்ராமன் அவர்களால், கோவை, ஈரோடு, சென்னை நகர கூட்டுறவு வீடு அடமான பாங்கு, சென்னை அரசுத் தொழிலாளர் கூட்டுறவு வீடு அடமான பாங்கு, ஒரு தனி நபர் ஆக ஐந்து உறுப்பினர்களுடன் துவக்கி வைக்கப்பட்டது. இத்தலைமைச் சங்கத்திற்கு, தமிழக அரசின் உத்திரவாதத்துடன் இந்திய ஆயுள் காப்புறுதிக்

கழகம் (LIC of India). நிதி உதவி வழங்க இசைந்தது. தலைமைச் சங்கத்தின் முதல் தலைவர் மறைந்த அமரர் ஆர்.கே. வெங்கிடசாமி ஆவார். திரு ஜி. வாகீசம் பிள்ளை அவர்கள் பொருளாளராகவும், திரு வி.வெங்கிடசாலம் அவர்கள் துணைத் தலைவராகவும், முதல் மூன்றாண்டுகளுக்கு அரசினரால் நியமிக்கப்பட்டார்கள்.

**வளர்ச்சியும் சாதனைகளும்**

தமிழகத்தில், தலைமைச் சங்கத்தின் வளர்ச்சியுடன் இணைந்தே, வீட்டுவசதிச் சங்கங்களின் வளர்ச்சியும் அமைந்துள்ளது. நான்கு பிரதம சங்கங்களுடனும், ஒரு தனி நபருடனும் ஆக ஐந்தே ஐந்து உறுப்பினர்களுடன் தொடங்கப் பெற்ற தமிழ்நாடு கூட்டுறவுவீட்டுவசதிச் சங்கம், தற்போது கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் தமிழகமெங்கும் அனைத்து நகரங்கள், பேரூர்களிலிருந்து செயல்படும் 631 பிரதம சங்கங்களை உறுப்பினராகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கத்தின் சேவைகளால், இணைக்கப்படாத தமிழக நகரமோ, கிராமமோ இல்லை என்கிற அளவில் படிப்படியாக வளர்ச்சியடைந்து வந்துள்ளது.

தலைமைச் சங்கம், தனது தொடக்க காலக் கட்டங்களில் வீடுகளை அடமானமாக ஏற்று, முன்கடன் தீர்த்தல், வீடு பழுது பார்த்தல், மேம்பாடு செய்தல் ஆகிய காரியங்களுக்கும், கடன் வழங்கியது. தற்போது இக்காரியங்களுக்குக் கடன் வழங்கப்படுவதில்லை. தலைமைச் சங்கத்திற்குப் பெருமளவில் நிதி வழங்கி ஆயுள் காப்புறுதிக் கழகத்தின் வழிமுறையின்படி சொந்தமாக இருக்கும் மனையில் புதுவீடு கட்டவும் ஏற்கெனவே இருக்கும் வீட்டுடன் சேர்த்து அதிகப்படுத்திக் கட்டவும் அல்லது முதல் மாடி கட்டவும் ரூ. 60,000 வரை 15 ஆண்டு நீண்டகாலக் கடன் வழங்கப்படுகிறது. வட்டி 14½ ஆகும். இதில் 1% குழு அடிப்படையிலான பாதுகாப்புத் திட்டத்திற்கான பிரிமியத்திற்காக வசூலிக்கப்படுகிறது.

தமிழக நகரங்கள் தோறும் 517 நகர்ப்புற வீட்டுவசதிச் சங்கங்கள் உள்ளன. இச்சங்கங்கள் தலைமைச் சங்கமான தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கத்துடன் இணைந்து ''குடும்பத்திற்கோர் இல்லம்'' என்ற இலட்சியத்தின் அடிப்படையில் குடும்ப வருமானத்தின் பேரில் ரூ. 60.000 வரை புதுவீடு கட்டக் கடன்களை வழங்கி வருகின்றன. தலைமைச் சங்கம் செயல்படத் துவங்கிய நாள்முதல் 30.6.85 முடிய 148 கோடி ரூபாய் கடனாக வழங்கப்பட்டுள்ளது. தமிழகமெங்கும், கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களிடமிருந்து பெற்ற கடன்களிலிருந்து, மேற்கண்ட தேதிவரை கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் 58,490 ஆகும்.

## ''என் பிள்ளையவர்கள் எங்கே?''



**வீ**ரச் சிதம்பரனாரை அந்த நாளில் வடநாட்டார் அறிந்து கொண்ட அளவு தமிழ் நாட்டார் தெரிந்து கொள்ளவில்லை எனத் துணிந்து கூறலாம். இதற்குச் சான்றாகச் சில சம்பவங்களை இங்கு எடுத்துக் கூறுவோம்.

சூரத் காங்கிரஸின்போது பிரதிநிதிகள் விடுதியில் மகான் அரவிந்தர், லாலா லஜபதி போன்ற தீவிரவாதத் தலைவர்களும், வேறு பல பிரதிநிதிகளும் உட்கார்ந்திருந்தனர்.

அச்சமயத்தில், அரவிந்தர் அங்கிருந்தவர்களை நோக்கி, ''Where is my Pillai?'' (என் பிள்ளை எங்கே?) என்று கேட்டார். யாவரும் சற்றுத் திகைத்திருந்தனர்.

உடனே அரவிந்தர் விளக்கமாக ''அவர்தான், புகழ்பெற்ற தேச பக்தர் தூத்துக்குடி சிதம்பரம் பிள்ளை'' என்றார். எல்லோருக்கும் இவ்வார்த்தைகள் தூக்கி வாரிப் போட்டதைப் போலிருந்தன.

பிள்ளையவர்களும் அதே நேரத்தில் அங்கு வந்து சேர்ந்தார். அவரை அன்போடு அணைத்துக் கொண்டார் அரவிந்தர்!

**''ஏழை எளியோருக்கு இரண்டு இலட்சம் இல்லங்கள்''**

நகர்ப்புற மக்களின் வீட்டு வசதித் தேவைகளை மட்டுமே கவனித்து வந்த தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கத்தின் சேவைகள், தமிழகத்தின் ஆயிரக்கணக்கான கிராமங்களில் வாழும், இலட்சக்கணக்கான, தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட கிராம மக்களுக்கும் கிடைத்திடும் வண்ணம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் தலைமையிலான, தமிழக அரசின் தனிக் கவனத்தின் பேரில் 1978-79ஆம் நிதி ஆண்டு முதல் கிராமியக் கூட்டுறவு வீட்டுவசதித் திட்டம் செயல்படத்துவங்கியது. கோட்ட மற்றும் வட்ட அளவிலான 106 கிராமியக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் தொடங்கப்பெற்று, அவை தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கத்துடன் இணைக்கப் பெற்றுக் கடன்கள் வழங்கப்படுகின்றன.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலமான 1980-81 முதல் 1984-85ஆம் ஆண்டுக்குள், இரண்டு இலட்சம் வீடுகள் கிராமப் பகுதிகளில் வாழும், பொருளாதாரத்தில் நலிவுற்ற கிராம மக்களுக்காகக் கிராமக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களின் மூலம் கட்டி முடிக்கப்பட வேண்டுமென இலட்சியக் குறியீட்டினைத் தமிழக அரசு நிர்ணயம் செய்தது. இத்திட்டத்தின்படி குறைந்த வருவாய்ப்பிரிவினரான அதாவது ஆண்டு வருமானம் ரூ. 4200க்குட்பட்ட, கிராம மக்களுக்கு, 201 சதுர அடியில் ஒரே விதமான வடிவமைப்புகள் கொண்ட வீடுகள் கட்டிக்கொள்ளக் கடன் வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், கடன் பெற்ற ஆதிதிராவிடர் மற்றும் மலைசாதி மக்களுக்கு ரூ.1000 மானியமாக வழங்கப்பட்டது. வழங்கப்பட்ட கடனுக்கும் வட்டியில்லை. வட்டி முழுவதையும் தமிழக அரசே ஏற்கிறது. இத்திட்டத்தின்படி 2,04,055 வீடுகள் திட்ட காலத்தில் கட்டி முடிக்கப்பட்டன. வழங்கப்பட்ட கடன் தொகை ரூ. 73.44 கோடியாகும்.

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக, தமிழகத்தில் செயல்படும் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களின் தலைமைச் சங்கமாக நாளும் வளர்ந்துவரும் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கம், இந்தியக் கூட்டுறவு வீட்டுவசதித் துறைக்கே ஒரு முன்மாதிரியாகத் திகழ்ந்து தொடர்ந்து தன் பணிகளைத் தமிழக மக்களுக்கு அளித்து வருகிறது.





மேதகு தமிழ்நாடு ஆளுநர்

திரு எஸ். எல். குரானா

# வேண்டுகோள்

**ஆ**யுதப் படையினரின் கொடி நாள் 1985, டிசம்பர் 5-ஆம் நாள் கொண்டாடப்படுவதறிந்து பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன்.

நெடுந் தொலைவிலுள்ள எல்லைப் பகுதியில் காவல்காக்கும் படைவீரன், நமது நாட்டின் பாதுகாப்புச் சின்னமாகத் திகழ்கிறான். வெளி அச்சுறுத்தல்களிலிருந்து நமது நாட்டின் உரிமையைப் பாதுகாப்பதற்கும் தீவிரவாதிகளிடமிருந்தும் பிரிவினைவாதிகளிடமிருந்தும் நாட்டின் ஒருமைப்பாட்டைப் பேணுவதற்கும் ஆயுதப்படையினர் ஆற்றும் தன்னலமற்ற உன்னதச் சேவையை நினைவுபடுத்திக் கொள்ளும் நாள்தான் கொடி நாளாகும்.

படைப் பணியிலிருந்து ஓய்வு பெறும் படை வீரர்களுக்கும் அலுவலர்களுக்கும் நாம் நமது ஆதரவை அளித்திடுவது நீங்காக் கடமையாகும்.

பெருமளவு நிதி தேவைப்படும் பல்வேறு திட்டங்கள் முன்னாள் படையினருக்கெனத் தொடங்கப்படுகின்றன. ஒவ்வோர் ஆண்டும், அவர்களின் சேவையைப் பாராட்டும் வகையில் கொடி நாள் நிதிக்குப் பொதுமக்கள் மனம் உவந்து பெருமளவு பொருள் உதவி அளித்திடுகின்றனர் என்பதைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி கொள்கிறேன்.

இந்த ஆண்டு இக் கொடிநாள் நிதிக்குப் பெருமளவில் நிதி அளித்திடுமாறு தமிழ்நாட்டு மக்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

—எஸ். எல். குரானா



**கொடி நாள்**
(5-12-'85)





[redacted]

**ந**மது நாட்டில் தரை, கடல், வான் ஆகிய மூன்று எல்லைகளையும் காத்து நிற்பதில் நமது முப்படை வீரர்கள் ஆற்றும் கண்துஞ்சாக் கடமைகளுக்கு நாட்டு மக்கள் நன்றி தெரிவிக்கும் ஒரு நல்ல வாய்ப்பாக ஆண்டுதோறும் டிசம்பர் திங்களில் கொண்டாடப்படும் கொடி நாள் அமைந்திருக்கிறது. போர்க்காலங்களில் மட்டுமின்றி வெள்ளம், இயற்கைச் சீற்றங்கள் போன்றவை ஏற்படுகிற நேரங்களிலும் முப்படை வீரர்கள் மக்களுக்குத் தொண்டாற்றுகிறார்கள். நாட்டைக் காக்கும் பணியில் தங்களையே காணிக்கையாக்கிவிட்ட வீரர்களின் குடும்பங்களையும் போர் நடவடிக்கைகளால் செயலிழந்து விட்ட வீரர்களையும் அவர்களை நம்பியிருப்பவர்களையும் காப்பாற்ற வேண்டியது நமது சமூகப் பொறுப்பாகும்.

இந்தப் பொறுப்பை நிறைவேற்றிட கொடி நாள் அன்று மக்கள் மனமுவந்து வழங்கும் நன்கொடைகள் பெரிதும் உதவி செய்வதாக இருக்கும்.

நமது படை வீரர்களின் தியாகத்தையும் வீரத்தையும் கடமை உணர்வையும் பாராட்டி நன்றி தெரிவிக்கும் அடையாளமாக கொடி நாள் அன்று படைவீரர் சேம நல நிதிக்கு உற்சாகத்தோடு நன்கொடை வழங்கிட வேண்டும் என்று மக்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

*எம். ஜி. இராமச்சந்திரன்*

## கொடி நாள்
**(5 - 12 - '85)**



[redacted]





# முன்னாள் படைவீரர்

## நலத்துறையின் நற்பணிகள்

**மு**ன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர் நலம் பேணுவது முன்னாள் படைவீரர் நலத்துறையின் கடமையாகும். ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைந்துள்ள முப்படை வீரர் வாரியங்கள் மூலம் முன்னாள் படைவீரர்களும் அவர்தம் குடும்பத்தினரும் பயனடையும் வகையில் நலத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதி மற்றும் தொகுப்பு நிதி ஆகிய இரண்டு நல நிதிகளை இயக்ககம் பராமரித்து வருகின்றது. இந்நிதிகளின் நிர்வாகம் அவற்றிற்கென அமைந்த குழுக்களால் நடத்தப்படுகின்றன.

தமிழ்நாட்டில் மேதகு ஆளுநர் தலைமையில் அமைந்துள்ள தமிழ்நாடு கொடிநாள் அமைப்புக்குழு ஒவ்வோர் ஆண்டும் தீர்மானிப்பதற்கு ஏற்ப கொடிநாள் கொண்டாடப்படுகிறது. 1983 ஆம் ஆண்டில் கொடிநாள் வசூல் குறியீடாக 23.35 இலட்சம் குறிப்பிடப்பட்டது. தமிழ்நாட்டு மக்கள் 30.75 இலட்சம் வாரி வழங்கினார்கள். அதேபோன்று 1984ஆம் ஆண்டில் குறியீடு 31 இலட்சம். எனினும் 18.11.85ஆம் நாளன்று 34.75 இலட்சம் இயக்ககத்தில் பெறப்பட்டுள்ளது.



தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதிக்குக் கொடிநாள் வசூலே வரவினமாகும். 1984-85ல் 3100 முன்னாள் படைவீரர்களும் அவரைச் சார்ந்தோரும் ரூ.7.34 லட்சம் நிதியுதவி பெற்று பயனடைந்தனர். மாதாந்திர நிதியுதவி, சிறு தொழிலுக்கு மானியம், திருமண நிதியுதவி, காசநோய், தொழுநோய் உடையோருக்குக் கைச் செலவுக்குப் பணம், உடனடி நிதியுதவி, ஈமச் சடங்குகளுக்கு உதவி, வெள்ளம், தீ ஆகியவற்றால் அவதியுறுவோருக்கு நிவாரணம், முன்னாள் படைவீரர்களின் குழந்தைகளுக்குக் கல்வி உதவி, முன்னாள் படை வீரர்களின் பெண்டிருக்குப் பயிற்சிகள் போன்ற பல திட்டங்களுக்குத் தொகைகள் செலவிடப்படுகின்றன. இவையன்றி நிதிகள் கீழ்க்கண்ட திட்டங்களுக்கும் பயன்படுத்தப்படுகின்றன.

வீரமரணம் எய்திய, ஓய்வு பெற்ற படையிலிருந்து வெளி



வந்த முன்னாள் படைவீரர்களின் ஆதரவில் உள்ள பெண்களுக்கு ஆறுமாத கால அளவில் தையற் பயிற்சி அளிக்கப்படுகிறது. அதன் மூலம் அவர்கள் குடும்ப வருவாய்க்குக் கூடுதலாகச் சம்பாதிக்க வாய்ப்பு ஏற்படுத்தப்படுகிறது. இத்தகைய பயிற்சி மேற்கொள்ள விரும்பும் பெண்கள் தேவையான அளவில் உள்ள மாவட்டங்கள் யாவற்றிலும் தையற் பயிற்சிக் கூடங்கள் செயல்பட்டு வருகின்றன.

பயிற்சியின் போதுதேவையான கச்சாப் பொருள்கள் வாங்குவதற்கு மாதம் ரூபாய் 25ம் பயிற்சி உதவித் தொகையாக மாதம் ரூபாய் 30ம் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து ஒவ்வோர் பயிற்சியாளருக்கும் வழங்கப்படுகிறது.

சென்னை பரங்கிமலை (செங்கற்பட்டு மாவட்டம்), வேலூர் (வடஆர்க்காடு மாவட்டம்), கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் கிருஷ்ணகிரி (தருமபுரி மாவட்டம்) ஆகிய இடங்களில் அமைந்துள்ள தையற்பயிற்சிக் கூடங்கள் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையினரால் ஏற்பு அளிக்கப்பட்ட கூடங்களாகச் செயல்பட்டு வருகின்றன. இவ்விடங்களில் ஓராண்டிற்கான பயிற்சி அளிக்கப்படுகிறது. அதன் பின் அவர்கள் தையல் ஆசிரியர்களாக வேலை பெற வாய்ப்பு உண்டு. இவர்களுக்கு மாதம் ரூபாய் 30 கல்வி உதவித்தொகையாகத் தொகுப்பு நிதியிலிருந்தும், கச்சாப் பொருள்கள் வாங்கிட மாதம் ரூ.25 தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்தும் வழங்கப்படுகிறது. இதுவரை 4860 பெண்கள் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளனர். 211 பேர் தற்போது பயின்று கொண்டு இருக்கின்றனர். பயிற்சி முடிந்தபின் விருப்பமுள்ள கைம்பெண்களுக்குத் தையல் இயந்திரம் மொத்த மானியமாக வாங்கி வழங்கப்படுகின்றது.

தையல் கலையைத் தொடர விருப்பமுள்ள முன்னாள் படைவீரரின் பெண்குழந்தைகளுக்குத் தையல் இயந்திரம் வாங்கக் கடனுதவி அளிக்க வங்கிகள் மூலம் ஏற்பாடு செய்யப்படுகிறது. 1985 மார்ச்சில், மதுரையில் உள்ள பஞ்சாப் நேஷனல் வங்கி 19 பெண்களுக்குத் தையல் இயந்திரங்களை இலவசமாக அளித்தது.

ஊனமுற்ற படையினர்போரில் வீரமரணம் எய்தியோரின் கைம்பெண்கள், தகுதியுடைய முன்னாள் படைவீரர் மற்றும் கைம்பெண்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் வகையில் சுயதொழில் செய்து வருவாய் ஈட்டிடும் வாய்ப்பாகத் தமிழ்நாடு முழுவதும் 237 ஜெய் ஜவான் கடைகள் நிறுவப்பட்டுள்ளன. இவற்றிற்கு ஆகும் விலையினைத் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியினின்று அளித்திடப்படுகிறது.

இவையன்றி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் 'இந்தியன் எக்ஸ் சர்வீஸஸ் லீக்' வழங்கிய 4 கடைகளும் சென்னையில் ரோட்டரி கிளப் வழங்கிய ஒரு கடையும் நிறுவப்பட்டுள்ளன.

மறைந்த ஜெனரல் நீல் அவர்களின் விருப்பமான ஊனமுற்ற முன்னாள் படைவீரர் ஒருவருக்கு ரூபாய் 5,000 மொத்தமானியமாக வழங்கப்பட வேண்டும் என்பதனை அடுத்து தமிழ்நாடு அலுவல் பொறுப்பாட்சியர் வழங்கிய ரூபாய் 5,000த்துடன் மீதித் தொகையைத் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து அளித்து 10-7-85 அன்று நடைபெற்ற முன்னாள் படைவீரர் நல இயக்கக வளாகத் திறப்பு விழாவின்போது ஊனமுற்ற முன்னாள் படைவீரர் ஒருவருக்கு ஒரு கடை வழங்கப்பட்டது. இக்கடை முன்னாள் படைவளாகத்திலேயே அமைந்துள்ளது. மேலும் ஜெனரல் நீல் அவர்களின் பொறுப்பாட்சி நிதியிலிருந்து வரும் ஆண்டு வருமானமாகிய ரூ. 750 ஒரு கைம்பெண்ணுக்குத் தையல் இயந்திரம் அளிக்க வழங்கப்பட்டது. ஜெனரல் நீல் அவர்களை நினைவு கூரும் வகையில் ஆண்டுதோறும் இத்தகைய கொடை அளிக்கப்பட உள்ளது.

முன்னாள் படைவீரர்களின் குழந்தைகளுக்கு உதவும் வகையில் மாவட்டங்களில் உரிய இடங்கள் கிடைப்பதைப் பொறுத்து மேலும் பல கடைகள் நிறுவிடத் திட்டம் உள்ளது.

திருச்சிராப்பள்ளி, வேலூர், சேலம், கோயம்புத்தூர், தஞ்சாவூர் ஆகிய இடங்களில் மொத்தம் ரூபாய் 27 இலட்சம் செலவில் 5 ஜவான்ஸ் பவன்கள் கட்டப்பட்டுள்ளன. வேலூரில் ரூபாய் 9.41 இலட்சம் செலவில் 72 கடைகள் கொண்ட மையம் அமைக்கப்பட்டுள்ளது. இவற்றிலிருந்து ஆண்டுதோறும் சுமார் ரூபாய் 6 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டு தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியில் சேர்க்கப்படுகிறது. மதுரையில் ரூபாய் 15 இலட்சம் செலவிலும், சிவகாசியில் ரூபாய் 7.60 இலட்சம் செலவிலும் ஜவான்ஸ் பவன்கள் அண்மையில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. தஞ்சாவூரில் ஏற்கெனவே உள்ள ஜவான்ஸ் பவனின் முதல்தளம் ரூ 7.75 இலட்சம் செலவில் முடிக்கப்பட்டுள்ளது. கோயம்புத்தூரில் ரூ. 5.4 இலட்சம் செலவில் கூடுதல் கட்டுமானப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. தென்னார்க்காடு மாவட்டம் கடலூரிலும், உதகமண்டலத்திலும், இராமநாதபுரத்திலும் ஜவான்ஸ் பவன்கள் கட்ட திட்டம் தீட்டப்பட்டுள்ளது. திருநெல்வேலி, கன்னியாகுமரி, புதுக்கோட்டை மாவட்டங்களில் ஜவான்ஸ் பவன்கள் கட்ட உரிய இடங்கள் தேர்ந்தெடுக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தஞ்சாவூர், சென்னையில் பரங்கிமலை மற்றும் நாகர்கோவில் ஆகிய இடங்களில் முன்னாள்படைவீரர்கள்-அவர்களைச் சார்ந்தோரும் பயன்பெறும் வண்ணம் மூன்று நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவை அரசால் ஏற்பளிப்பு செய்ய

பட்டவையாகும். பயில்வோர் ஒவ்வொருவருக்கும் பயிற்சி ஒன்றிற்கு ரூபாய் 120 உதவித் தொகையாகத் தொகுப்பு நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. இதுவரை 880 பேர் பயிற்சி பெற்றுள்ளனர். 120 பேர் பயின்று கொண்டிருக்கின்றனர்.

17 வட்டத் தலைமையக மருத்துவமனைகளில் முன்னாள் படைவீரர்களுக்கென 12படுக்கை வசதி கொண்ட தனிப் பிரிவுகள் அமைத்திடப்பட்டுள்ளது. இதற்கெனத் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து ரூபாய் 8 இலட்சம் வழங்கப்பட்டது. இராமநாதபுரம் தலைமையக மருத்துவமனையில் இதே போன்று ஒரு பிரிவு கட்ட ரூபாய் 1,28,250 வழங்கப்பட்டுள்ளது. கட்டுமானம் விரைவில் தொடங்கப்பட உள்ளது. நாகர்கோவிலில் இதுபோன்றே ஒரு தனிப் பிரிவு அமைத்திட கருத்துரு பெறப்பட்டுள்ளது.

வடார்க்காடு மாவட்டத்தில் உள்ள வேலூரில் சுமார் 6.30 இலட்சம் செலவில் ஆதரவற்ற படை ஒய்வூதியத்தினருக்கு வசதிகளுடன் ஓர் இல்லம் அமைக்கப்பட்டுள்ளது. 58 ஒய்வூதியத்தினர் பயன்படுத்தத் தக்க வகையில் இது அமைந்துள்ளது. இங்கு தங்கும் ஒய்வூதியத்தினர் மாதம் ரூபாய் 100 செலுத்த வேண்டும். அவர்களுக்கு ஆகும் ஏனைய பராமரிப்புத் தொகைகள் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. தற்போது வயது முதிர்ந்த 10 ஆதரவற்ற படை ஒய்வூதியத்தினர் தங்கியுள்ளனர். இவர்கள் பயன்போக மீதி உள்ள இடம் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்திற்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளது.

செங்கற்பட்டு மாவட்ட முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் அலுவலகத்தில் செயல்பட்டு வந்த அச்சுக்கூடமும் அத்துடன் இணைந்த புத்தகக் கட்டமைப்புப் பகுதியும் தற்போது முன்னாள் படைவீரர் நல இயக்கக வளாகத்தில் செயல்பட்டு வருகின்றன. அச்சடித்தல், அச்சுக்கோத்தல், புத்தகக் கட்டமைப்பு, காகிதங்களைச் சீராக வெட்டுதல் போன்றவற்றில் 15 பெண்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. பல்வேறு துறைகளின் மூலம் வேலைகளுக்கான ஆணைகள் பெற்று இப்பகுதி தற்போது தானாக இயங்கும் நிலையில் உள்ளது.

செங்கற்பட்டு, கன்னியாகுமரி, புதுக்கோட்டை, பெரியார் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்கள் தவிர்த்து ஏனைய மாவட்டங்களில் தலைமையகத்திற்கு வரும் முன்னாள் படைவீரர்களுக்கும் அவர்களைச் சார்ந்தோருக்கும் பயன்படும் வகையில் முன்னாள் படைவீரர் மையங்கள் செயல்பட்டு வருகின்றன. குறைந்த வாடகையில் தங்கும் வசதியும் உள்ளது. முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் அல்லது துணை



# தமிழக முன்னாள் ஆளுநர் மறைவு



மேதகு தமிழக முன்னாள் ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் 20.11.85 அன்று குஜராத்மாநிலம்அகமதாபாத்தில் காலமானார்.

76 வயதான திரு பட்வாரி அவர்கள் பிரபல காந்தியவாதியாவார். சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டவர். மாநில நிவாரணக் குழுவின் தலைவராகவும், சபர்மதிக்கரையில் காந்தியடிகளால் நிறுவப்பட்ட அரிசன ஆசிரமத்தின் நிர்வாக அறங்காவலராகவும் இருந்தார். பம்பாய் சட்டமன்ற உறுப்பினராகவும், உச்சநீதிமன்ற வழக்கறிஞராகவும் இருந்திருக்கிறார். 1977-ஆம் ஆண்டு மத்தியில் திரு பட்வாரி அவர்கள் தமிழ்நாடு ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

திரு பட்வாரி அவர்களின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் இரங்கல் செய்தி அனுப்பி இருக்கிறார். திரு பட்வாரி அவர்களின் மனைவிக்கு அனுப்பியுள்ள இரங்கல் செய்தியில் அவர் கூறியிருப்பதாவது:

''தங்கள் கணவரின் மரண செய்தி கேட்டு அதிர்ச்சி அடை தேன். காந்திய கொள்கைவா யான அவர், தமிழ்நாடு ஆளு நராக இருந்தபோது, தமிழ மக்களுக்காகத் தன்னை அர் பணித்தார். அவரது மறைவா இந்தியா ஒரு சுதந்திர போராட்டவீரரையும், தமிழ்நா ஒரு நல்ல நண்பரையும் இழந் விட்டது. தமிழக மக்கள் சா பிலும், தமிழக அரசு சார்பிலும் எனது சார்பிலும் ஆழ்ந்த அ தாபங்களையும் ... தெரிவித்துக் கொள்...

இயக்குநர் அலுவலகங்கள் இம்மையத்திலேயே செயல்பட்டு வருகின்றன. ஒரு நூலகமும், பொழுதுபோக்கு வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. பல்வேறு திட்டங்களின் கீழ் பயன்பெறும் முறைகள்பற்றி எடுத்துக்கூறும் ஒரு செய்தி மையமாக இவை செயலாற்றுகின்றன.

10-7-1985 அன்று மேதகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் சென்னையில் ரூபாய் 41.05 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள பல அடுக்கு முன்னாள் படை வீரர் நல இயக்கக வளாகத்தினைத் திறந்து வைத்தார். இவ்வளாகத்தின் தரைப்பகுதியில் ஒரு வங்கியும், முதல் மற்றும் இரண்டாவது தளங்களில் முன்னாள் படைவீரர் வாரகாலப் பயிற்சி அளிக்கப்பட்டது. இவை 'பாங்க் ஆப் இந்தியா' உதவியுடன் சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் நடத்தப்பட்டது. இப் பயிற்சியின்போது பயில்வோருக்கு உதவித் தொகையாக மாதம் ரூபாய் 300 என்ற விகிதத்தில் அளிக்கப்பட்டது. 70 முன்னாள் படைவீரர்கள் இப்பயிற்சியினால் பயன் அடைந்தனர்.

1984-85ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட புதிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன: (அ) கண்பார்வையற்ற முன்னாள் படை வீரர்களுக்கு நிதியுதவி: முழுமையாகக் கண்பார்வையற்ற முன்னாள் படைவீரர்களுக்கு அவர்கள் ஆயுள் முழுவதும் மாதம் ரூபாய் டம் செயல்படுத்தப்பட்டது. 1355 கைம்பெண்கள் இத்திட்டத்தின்கீழ் பயன்பெற்று வந்தனர். ஆண்டிற்கு ரூபாய் 8.40 இலட்சம் செலவிடப்பட்டது.

அண்மையில் இந்திய அரசு இவர்களுக்குச் செப்டம்பர் 1977 முதல் வழங்குவதாக ஆணைகள் பிறப்பித்தது. இதனைத் தொடர்ந்து ஒவ்வொரு கைம்பெண்களுக்கும் தேவையான விண்ணப்பங்கள் இயக்ககத்தாலேயே நிரப்பப்பட்டு அவர்களது கையொப்பம் பெற்று உரிய அதிகாரிகளுக்கு அனுப்புவதற்காக மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

போர்களினால் கணவர்களை



நல இயக்ககமும் அமைந்துள்ளன. மூன்றாவது தளத்தில் ஒரு பெருந்தகையோர் தங்கும் அறைத் தொகுதியும், மூன்று அலுவலர்களுக்கான அறைகளும் இளநிலை அலுவலர்கள் மற்றும் ஏனைய பதவியினர் தங்குவதற்கு இரண்டு துயில் கூடங்களும் மிகக் குறைந்த வாடகையில் அமைந்துள்ளன.

புதுக்கோட்டை மற்றும் நாகர்கோவில் ஆகிய இடங்களில் முன்னாள் படைவீரர் மையங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

12-5-85 முதல் 26-5-85 வரை வங்கிப்பணி தேர்வுக்குழு நடத்தும் தேர்வுகளில் பங்கேற்க முன்னாள் படைவீரர்களுக்கு இரண்டு 50 வழங்குவது என முடிவு எடுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டது. (ஆ) தொழுநோயால் அவதியுறும் முன்னாள் படை வீரர்களின் கைம்பெண்களுக்கு நிதியுதவி: தொழுநோயால் அவதியுறும் முன்னாள் படை வீரர்களின் கைம்பெண்களுக்கு அவர்கள் ஆயுள் முழுவதும் மாதம் ரூபாய் 50 வழங்குவது எனத் தீர்மானிக்கப்பட்டுச் செயல்படுத்தப்பட்டது.

1-1-64 ஆம்தேதிக்கு முன் ஓய்வூதியம் பெற்று படையிலிருந்து வெளி வந்த முன்னாள் படை வீரர்கள் இறந்த பின் அவர்களது கைம்பெண்களுக்குக் குடும்ப ஓய்வூதியம் அனுமதி இருந்த நிலையில் அவர்களுக்கு மாதந்தோறும் உதவித்தொகை வழங்கும் திட் இழந்து கைம்பெண் ஆனவர்களுக்கு நன்றிக் கடன் செலுத்தும் வகையில் ஆண்டு பராமரிப்புப் படியாக ஆண்டுதோறும் ரூபாய் 600 வழங்கப்பட்டு வருகிறது. அதேபோன்று போரில் ஊனமுற்றோருக்கு ஆண்டுதோறும் ரூ. 500 வழங்கப்பட்டு வருகிறது. 169 பேருக்கு இக்கொடையாக மொத்தம் ரூபாய் 97,800 வழங்கப்படுகிறது.

1-1-78 முதல் வங்கிகளின் ஒப்புதலுடன் வங்கிக் கடன் வட்டி உதவித்தொகைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம், தகுதியுள்ள முன்னாள் படைவீரர்கள் பயன்தரத்தக்க தொழில்களுக்கு ரூபாய் 50,000 வரை கடன் பெறலாம். ரூபாய் 5,000 வரை பெறப்படும்




கடன்களுக்கு 4 சதவீதத்திற்கு மேல் வங்கி விதிக்கும் வட்டியும், பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது.

இந்த இடம் மானாவாரி சாகுபடி நிலமாக அமைந்துள்ளபடியாலும், ஏற்கெனவே அமைந்துள்ள 13 கிணறுகள் இந்நிலங்களுக்குத் தேவையான தண்ணீர் அளிக்க இயலாத சூழ்நிலையில் கூவம் நதிக்கரையில் இருந்து சுமார் 1.5 கிலோ மீட்டர் தூரத்திற்கு ரூபாய் 6 இலட்சம் செலவில் நீர் கொணர திட்டமிடப்பட்டுள்ளது.

100 ஏக்கர் நிலப்பரப்பில் தைலமரம் அல்லது சவுக்குமரம் வளர்த்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 5 ஆண்டு முடிவில் ஒவ்வொரு ஏக்கருக்கும் ரூபாய் 5,000 நிகர இலாபம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த வருவாய் மேம்படுத்தும் திட்டங்களுக்கெனப் பெறப்பட உள்ள கடன் தொகைகளைத் திருப்பித்தர போதுமானது எனக் கருதப்படுகிறது.

புதுடெல்லியில் அமைந்துள்ள மத்திய புனரமைப்பு இயக்ககத்தின் திட்டமாக அகில இந்திய முறையில் சுயவேலை வாய்ப்பிற்கு முன்னாள் படைவீரர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டமும், தொடங்கப்பட்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட 6 மாநிலங்களில் - தென்மாநிலங்களில் தமிழ்நாடு மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டது. வடார்க்காடு மாவட்டத்தில் அமைந்துள்ள பயிற்சி நிலையங்களில் மின் இயக்கிகளுக்குத் தடங்கல்கள் நீக்குதல், பால்பண்ணை, கோழிப்பண்ணை அமைத்தல் போன்ற பயிற்சிகள் 64 முன்னாள் படை வீரர்களுக்கும், 10 படை பணிபுரிவோருக்கும் வழங்கப்பட்டது. தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் இவர்களுக்குக் கடன் அளிப்பதில் சிறிது தயக்கம் ஏற்பட்டதன் காரணமாக இத்திட்டத்தின் கீழ் பயிற்சி பெற 31-3-85-க்குப் பின் முன்னாள் படைவீரர்கள் தயக்கம் தெரிவித்தனர். இதனையடுத்து மத்திய புனரமைப்பு இயக்ககத்தின் பயிற்சி இயக்குநருடன் பேச்சு வார்த்தைகள் தொடரப்பட்டு இத்திட்டம் பயன்தரத்தக்க வகையில் நடைபெறக் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

1-4-1982 முதல் மாவட்டங்களில் அமைந்துள்ள துணை இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர் அலுவலகங்களில் சிறப்பு வேலைவாய்ப்புப் பிரிவுகள் இயங்கி வருகின்றன. 31-3-85 தேதியில் 10,435 முன்னாள் படைவீரர்கள் இச்சிறப்பு வேலை வாய்ப்பின் பிரிவின்கீழ் தங்கள் பெயரைப் பதிவு செய்துள்ளனர். 1-4-84 முதல் 31-3-85 வரையான கால அளவில் 754 முன்னாள் படைவீரர்கள் அவர்கள் தகுதிக்கு ஒப்பான பணிகளில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

சென்னை மாநகராட்சியின் கீழ் முக்கியமான இடங்களில் வாகனம் நிறுத்துவதனை மேற்பார்வையிடுதல் பொதுமக்களுக்கு வசதிகள் செய்து தரவும் வாகனம் நிறுத்துவதற்குக் கட்டணம் வசூலிப்பதற்கு முன்னாள் படைவீரர்களைக் கொண்டு ஒரு பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. வாகனம் நிறுத்தும் இடங்களை மேற்பார்வையிடுவோராக வேலை பெற்ற 160 முன்னாள் படைவீரர்கள் பயனடைந்துள்ளனர். இவர்களுக்கு மாத ஊதியமாக ரூபாய் 225ம் அளிக்கப்படுகிறது. மேலும் அவர்கள் வசூலிக்கும் தொகையில் 10 சதவீதம் ஊக்க ஊதியமாக வழங்கப்படுகிறது.

1984 டிசம்பர் திங்களில் நாடாளுமன்றத்திற்கும், சட்டசபைக்கும் ஒரே நாளில் நடைபெற்ற தேர்தலில் பாதுகாவல் துறைக்கு உதவியாக 15,000 முன்னாள் படைவீரர்களை இவ்வியக்ககம் ஒன்றுபடுத்தி உதவி அளித்தது. இளநிலை அதிகாரிகளுக்கு ரூபாய் 325ம் இதரப்பதவியினருக்கு ரூபாய் 300ம் வழங்கப்பட்டது. 5 நாள் பணிக்கு நாளொன்றுக்கு ரூபாய் 10 முதல் ரூபாய் 15 வரை உணவுத தொகையாக அளிக்கப்பட்டது.

# முத்துவின் பிடிவாதம்



**அ. சுப்பையயன்,**

மாணவர் பக்கம்

**மு**த்து, குமார் இருவரும் இணை பிரியாத நண்பர்கள்! பள்ளிக்கூட நாட்கள் மட்டுமின்றி விடுமுறை நாட்களிலும் அவர்கள் இருவரையும் சேர்ந்தே தான் பார்க்கமுடியும்.

குமார் ஒரு புகைப்படக் கருவி வைத்திருந்தான்! எங்கு சென்றாலும்கூடவே எடுத்துச் செல்வான். தனக்குப் பிடித்த காட்சிகளையெல்லாம் படம் பிடித்துக்கொள்வான்!

முத்துவிற்கும் புகைப்படக் கருவி மேல் ஆசை வந்துவிட்டது! தனக்கும் ஒன்று வேண்டுமென்று தன் அப்பாவிடம் அடம் பிடித்தான்! 'கொஞ்சநாள் போகட்டும் வாங்கித் தருகிறேன். இப்பொழுது நன்றாய்ப்படி' என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். அவன் கேட்பதாக இல்லை.

முத்துவின் பிடிவாதத்தைக் கண்டு அவன் அப்பா ''துபாய் மாமாவுக்கு வேண்டுமானால் கடிதம் போடு! விடுமுறையில் வரும்போது கொண்டு வரட்டும்! என்னால் இப்பொழுது வாங்கித்தர முடியாது'' என்று சொல்லிவிட்டார்.

சரியென்று முத்துவும், துபாய் மாமாவிற்கு ஒரு கடிதம் எழுதிப் போட்டான்!

**சீ**ர் தபால்!

நிச்சயம் இது துபாய் மாமாவிடமிருந்துதான் வந்திருக்கும்! ஓடிப்போய் முத்துதான் வாங்கினான்! அது துபாய்க் கடிதமேதான்!

''என்ன எழுதியிருக்கு? பிரிச்சுப்படிடா!'' அவன் அம்மாவிற்கும் அவசரம் தாங்கவில்லை!

அதில் அவன் நினைத்தது போலவே விரைவில் வருவதாகவும், வரும்போது அவசியம் புகைப்படக்கருவி ஒன்று வாங்கி வருவதாகவும் எழுதியிருந்தார்.

முத்துவிற்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை! ஒரே கொண்டாட்டம்தான்!

அந்த நாளும் வந்தது! அவன் மாமாவும் வந்து விட்டார். தான் எழுதியிருந்தது போல் ஒரு அழகான, சின்ன புகைப்படக் கருவியையும் வாங்கி வந்திருந்தார். முத்துவிற்கு மகிழ்ச்சிதான்! கொள்ளை மகிழ்ச்சி. மாமாவைக் கட்டிப்பிடித்தான்! விழுந்து விழுந்து உபசரித்தான்.

புகைப்படக் கருவியைத்தோளில் மாட்டி அழகு பார்த்தான். ஏற்கெனவே படம் பிடிக்க அவன் அப்பா கற்றுக்கொடுத்ததால், அந்தச் சிரமம் அப்போது அவனுக்கில்லை.

மறு நாளே அவன் மாமா ஊருக்குக் கிளம்பிவிட்டார்! வழி அனுப்ப அவனும் விமான நிலையத்திற்குச் சென்றிருந்தான்! திரும்பும் வழியில் கடைத்தெருப் பக்கம் ஒரே கூட்டம்!

திடீரென்று மின் விளக்குகள் எல்லாம் அணைந்துவிட்டன! எங்கும் இருள்! இரண்டு நிமிடம் கூட ஆகியிருக்காது! கூட்டத்தில் குய்யோ முறையோ என்று ஒரே கூச்சல், எவனோ கூட்டத்தில் ஒரு பெண்மணியின் கழுத்திலிருந்த சங்கிலியை அறுத்துக் கொண்டு ஓடிவிட்டானாம்!

விளக்குகள் எரியவும், காவலர்கள் ஓடிவந்தனர். விசாரித்தனர். யாராலும் திருடனை அடையாளம் சொல்ல முடியவில்லை. பறிகொடுத்த பெண்ணோ பரிதாபமாக அழுது கொண்டிருந்தாள். பத்துப்பவுன் சங்கிலி போய்விட்டதே! என்று கதறினாள்.

முத்து, தன்தோளில் மாட்டியிருந்த புகைப்படக்கருவியோடு காவலர்களை நோக்கி ஓடி வந்தான்!

''ஐயா! நான் அந்தத் திருடனைப் படம் பிடிச்சி வச்சிருக்கேன்! கழுவிப்பாருங்கள் தெரியும்!'' என்றான்!

காவலர்கள் அவனை ஆச்சரியத்துடன் பார்த்தார்கள்! சங்கிலியைப் பறிகொடுத்த பெண்ணோ ஆறுதல் அடைந்தாள்!

முத்துவின் அம்மாவிற்கும் அப்பாவிற்கும் பெருமையும், புரிபும் பிடிபடவில்லை.

''நீ எப்படி தம்பி திருடனைப் படம் பிடிச்சே?'' காவலர்கள் ஆச்சரியத்துடன் கேட்டனர்.

''கூட்டத்திலே அவன் பொம்பளைங்க கழுத்தைப் பார்த்துக் கிட்டே திரிஞ்சதும், முழிச்சமுழியும் எனக்கு சந்தேகத்தை உண்டாக்கிடிச்சு! அப்பவே அவனை நான் யாருக்கும் தெரியாம 'க்ளிக்' பண்ணிட்டேன்!''

''இந்த அம்மாகிட்டே திருடினவன் அவன்தான்னு எப்படிடா உறுதியாச் சொல்றே?'' அவன் அப்பா கேட்டார்!

''விளக்கு அணையறபோதுகூட அவன் அந்த அம்மா பக்கத்திலே தான் நின்னுக்கிட்டிருந்தான்!''

படச் சுருளைக் கழுவிப் பார்த்ததில் ஏற்கெனவே அவன் ஒரு கேடி என்பது தெரியவந்தது! பிடித்து விசாரித்ததில் அவனும் உண்மையை ஒத்துக் கொண்டான். சங்கிலியும் பறிமுதல் செய்யப்பட்டது!

''ஏங்க, இப்ப பார்த்தீங்களா? ஒரு புகைப்படக் கருவி வாங்கிக் கொடுக்க யோசிச்சீங்களே! பத்துப் பவுன் சங்கிலியை அல்லவா மீட்டுக் கொடுத்தான் நம்ம முத்து. முத்து முத்துதான்!''

ஒரு நாள் முத்துவுக்குக் காவல் துறை ஆணையாளர் அவன் சமயோசித செயலுக்குப் பரிசு வழங்கிப் பாராட்டினார். நாமும் அவனைப் பாராட்டுவோம்!

# தமிழகமும் காந்தியாரும்



**கா**ந்தியார் முதன் முதலாகத் தமிழகத்திற்கு வந்தது கி.பி. 1896-ஆம் ஆண்டிலாகும். அவர் கடைசி முறையாக இங்குவந்தது 1946-ஆம் ஆண்டிலாகும். இடைப்பட்ட ஐம்பது ஆண்டுகளில் அவர் சுமார் 31 முறை தமிழகத்திற்கு வந்துள்ளார்.

'அவர் அமர்ந்த இடம் எல்லாம் ஆலயம் ஆகும்' என்று பண்டித நேரு கூறினார். அதைப் போல, புது சகாப்தத்தை உருவாக்கிய காந்தியடிகளின் வாழ்க்கையில் எத்தனையோ 'முதன்மை'களைத் தமிழகம் அடைந்திருக்கிறது.

வழக்கறிஞராகத் தென்னாப்பிரிக்கா சென்றவரை, தென்னாப்பிரிக்காவில் மட்டுமின்றி, பிரிட்டிஷார் அடிமைப்படுத்தியிருந்த நாடுகளில் எல்லாம் ஒப்பந்தக் கூலிகள் என்ற பெயரில் அடிமைகளாக இருந்த இந்திய மக்களின் நலனுக்காக, வெள்ளையரை எதிர்த்துப்போராடக்கூடிய பாமர மக்களின் பரம நண்பராக மாற்றியவர் பாலசுந்தரம்' என்ற தென்னாப்பிரிக்கத் தமிழன்தான். ஒரு வழக்கறிஞரின் பாதை தேச மக்களின் துயர் களைவதாக மாற்றம் பெற்றது.

தன் முப்பத்து ஆறாவது வயதில் தமிழ்மொழியைக் கற்கத் தொடங்கிய காந்தி, முதிய வயதில் மறையும் வரை தமிழ் கற்கும் முயற்சியைக் கைவிடவில்லை.

—தி. கமல்

## இது உங்கள் பக்கம் !

மாணவ மணிகளே !

இது உங்கள் பக்கம்.

இப்பகுதியில் நீங்கள் கதை, கட்டுரை கவிதைகள் பொது அறிவுத் துணுக்குகள் முதலானவை எழுதி அனுப்பலாம் ஆனால் அவை உங்கள் சொந்தக் கற்பனையாக இருத்தல் வேண்டும் பொது அறிவுத் துணுக்குகளுக்கு ஆதாரம் இருத்தல் வேண்டும். கல்வியோடு பிற துறைகளில் திறமையுள்ள மாணவ, மாணவிகள் தங்களைப் பற்றிய குறிப்புடன் 'பாஸ்போர்ட்' அளவு புகைப்படத்தையும் அனுப்பி வைக்கலாம். அத்துடன் ஆசிரியரின் கையொப்பமும் அந்தக் குறிப்பில் இருத்தல் வேண்டும்.

—ஆசிரியர்.

பற்பசையை அளவோடு உபயோகிக்க வேண்டும். ஒரு நபர் ஒரு வருடம் முழுவதும் 565 கிராம் பற்பசையைத் தான் தேய்க்கலாம் என்று பல் மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். இவர்கள் கணக்குப்படிப் பார்த்தால், ஒரு நபருக்கு ஒரு மாதத்திற்கு சுமார் 50 கிராம் பற்பசை போதுமானது.

## உழைப்பே உயர்வு

உடமைகள் அனைத்தும் பெற்றிடவே—தம்பி
கடமையை முதலில் செய்திடுநீ
மடமையை நாளும் போக்கிடுவாய்—தம்பி
மகிமையை இன்றே சேர்த்திடுவாய்!

சுயமாய் வேலை தொடங்கிடுவாய்—தம்பி
சுயநல மின்றி வாழ்ந்திடுவாய்
செல்வம் உன்னைத் தேடிவரும்—பெரும்
சிந்தனை யாவும் நாடிவரும்!

உழைத்தால் உயர்வு பெற்றிடலாம்—தம்பி
உன்னத வெற்றி குவித்திடலாம்
ஒவ்வொரு மனிதனும் இவ்வாறே—உண்மை
உணர்ந்தால் துயரம் கிடையாதே!

—ஜி. புஷ்பராஜ்



இவர்களது பணி எல்லோராலும் பாராட்டப்பட்டது. இதன் விளைவாக ஆந்திர மாநில அரசு அவர்களது தேர்தலின் போது பாதுகாவல் துறைக்கு உதவியாகத் தமிழ்நாட்டிலிருந்து 3,000 முன்னாள் படைவீரர்களை வேண்டினர். அவர்களின் வேண்டுகோளின்படி 1985 மார்ச்சுத் திங்களில் 3,000 முன்னாள் படைவீரர்கள் தமிழ்நாட்டிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டனர். நடைபெற உள்ள பஞ்சாயத்துத் தேர்தல்களிலும், இதே போன்று தமிழ்நாடு அரசிற்கு உதவிட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

முன்னாள் படைவீரர் வாணிபக் கழகம் அமைக்க தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது: முன்னாள் படைவீரர்களின் புனரமைப்பு மறுவாழ்வு இவற்றிற்கு உதவிடும் வகையில் அவர்கள் தொடங்க உள்ள பல்வேறு வாணிப முயற்சிகளுக்கு நிதியுதவி, திட்டம் தீட்டுதல், செயல்படுத்துதல் போன்ற பல்வேறு உதவியினை இந்த வாணிபக் கழகம் மேற்கொள்ளும். இதன் தலைமையகம் சென்னையில் அமையும்.

மெய்யூர் கடப்பாக்கத்தில் உள்ள நில கூட்டுறவுச் சங்கத்தில் அதனை உயிர்ப்பித்து எல்லா உறுப்பினர்களும், நிறைந்த பயனடையதொடர்ச்சியான திட்டம் உருவாக்கப்பட்டு வருகிறது. தற்போது அதிக செயல்பாடு இல்லாத இந்தக் கூட்டுறவுச் சங்கத்தினை மேம்படுத்த ஒரு கூட்டுறவு சார்பதிவாளர் பதவி வேண்டி தமிழ்நாடு அரசிடம் கேட்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு உறுப்பினருக்கும் 6 ஏக்கர் நிலம் என்பதை அவர்களது ஒப்புதலுடன் 4.5 ஏக்கர் எனக் குறைக்கப்பட்டுள்ளது. இதனால் உறுப்பினர்கள் சிறு விவசாயிகளுக்கு



* அறிவாலும், ஆற்றலாலும் ஆகாத காரியம் இல்லை; அறிவும், ஆற்றலும் சேர்ந்து உழைத்தால் வெற்றி நிச்சயமாகக் கிடைக்கும்.

—பேரறிஞர் அண்ணா

அளிக்கப்படும் பல்வேறு சலுகைகளைப் பெற இயலும்.

இவ்வாறு குறைக்கப்பட்ட அளவினால் பெறப்பட்டுள்ள நிலங்கள் இளைய முன்னாள் படைவீரர்களை உறுப்பினர்களாக்கி அவர்களுக்கு ஒப்புவிக்கப்பட உள்ளது. இதுவரை 34 புதிய உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு காஞ்சிபுரத்தில் உள்ள விவசாயப் பயிற்சி மையத்தில் ரூபாய் 5000-க்கு மேல் ரூபாய் 50,000 வரை பெறப்படும் கடன்களுக்கு 7 சதவீதத்திற்கு மேல் வங்கி விதிக்கும் வட்டியும் உதவித் தொகையாக திருப்பித்தரப்படும். 1984-ஆம் ஆண்டில் 214 முன்னாள் படைவீரர்கள் ரூபாய் 18.75 இலட்சம் கடன்களை வங்கிகளிலிருந்து பெற்றுப் பயன் அடைந்துள்ளனர்.

கல்வி உதவித்தொகை: இத்திட்டத்தின்கீழ் 708 முன்னாள் படைவீரர்களும் அவர்களைச்



சார்ந்தோர்களும் உதவி பெற்றுள்ளனர். மொத்தத்தில் ரூபாய் 2.13 இலட்சம் உதவித்தொகையாக வழங்கப்பட்டது. முன்னாள் படைவீரர்கள் ஓய்வுக்கு முன்னும் பின்னும் பயிற்சிஅளிக்கும் இத்திட்டத்தின்கீழ் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறும்போது அவர்களுக்கு மாதம் ரூபாய் 250 உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

போரில் உயிர் துறக்கும் வீரர்களின் கைம்பெண்களுக்கு வீடு கட்டவோ அல்லது மேம்படுத்தவோ அல்லது புதியதாக வாங்கவோ மானியமாக ரூபாய் 5,000 வழங்கப்படுகிறது. இதுவரை 94 கைம்பெண்களுக்கு மொத்தம் ரூபாய் 4,31,325 வழங்கப்பட்டுள்ளது.

## தேனீ வளர்ப்பு

தேனீ வளர்த்தல் இலாபகரமான தொழிலாகும். அதிக முதலீடின்றி வீட்டுத் தோட்டப் பகுதியில் ஒரு தேன் பெட்டியை வைத்தால், உடல் ஆரோக்கியத்துக்கு உகந்த நல்ல தேன் கிடைக்கும்! தேனீ வளர்த்துத் தேன் சேகரிக்கும் நபர் ஒருவருக்கு ரூ. 50 மான்யமாகத் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில்கள் வாரியத்தால் வழங்கப்படுகின்றன. ரூ. 25 தேன் கூட்டுக்காகவும், இடம் பெயர் தேனீக் கூட்டத்துக்காக ரூ. 5 மானியமாகவும் வழங்கப்படுகின்றது. கிராமப்புறங்களிலும் நகர்ப்புறங்களிலும் வசிப்போர் இந்த வசதியைப் பயன்படுத்தி, தேனீ வளர்க்கலாம். தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியமே ரூ. 150 விலையில் தேனீ வளர்ப்புப் பெட்டியையும் வழங்குகின்றது.

## மரம் வளர்ப்போம்!

ஜப்பானில் அதன் மொத்த நிலப்பரப்பில் 67.6 சதவீதம் காடுகளால் சூழப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து சுவீடன் நாட்டில் 57.8 சதவீதமும், சோவியத் யூனியனில் 48.07 சதவீதமும் காடுகள் அமைந்துள்ளன. இதை ஒப்பிடுகையில் இந்தியாவில் 2.8 சதவீதம் மட்டுமே காடுகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

இந்தியாவில் 7.50 கோடி எக்டேர் பரப்பிற்குக் காடுகள் அமைந்துள்ளன. தேசிய வனக்கொள்கை குறைந்தபட்சம் இந்தியாவில் 11 கோடி எக்டேர் பரப்பிற்குக் காடுகள் வளர்க்கப்பட வேண்டும் என்று கருத்து தெரிவித்துள்ளது. இதன் மூலம் உயிரின வாழ்க்கைச் சூழ்நிலை மற்றும் சுற்றுப்புறச் சூழ்நிலை நிலைபெறும் என்று கருதுகிறது. மக்கள் தொகைப் பெருக்கம் காடுகள் பரப்பைக் கணிசமாகக் குறைத்து வருகிறது.

காடுகள் பரப்பு குறைந்து வரும் அபாயத்தைப் பல்வேறு நடவடிக்கைகள் மூலம் தடைசெய்யப்பட்டு வருகிறது. அரசும் காடுகளைப் பாதுகாப்பதற்காக 1980ல் தனிச் சட்டம் ஒன்றை வகுத்துள்ளது. இச்சட்டத்தின் மூலம் காடுகள் நிறைந்த நிலப்பரப்பு வேறு தேவைகளுக்கான அரசின் முன் அனுமதி பெறாமல் அழிக்கப்படுவது தடை செய்யப்பட்டு வருகிறது.

இந்தியக் காடுகளிலிருந்து பல்வேறு முக்கிய மற்றும் சிறிய பொருட்கள் கிடைக்கின்றன. மரவேலைப்பாடு செய்வதற்கான மரங்கள் மற்றும் விறகுகள் இவற்றில் அடங்கும். காகிதக்கூழ், தீக்குச்சிகள் மற்றும் மரவேலைத் தொழிலுக்குத் தேவையான மரங்கள் காடுகளிலிருந்து கிடைக்கின்றன. மூங்கில், முக்கியத் தைலங்கள், மருந்துகள் தயாரிக்க உதவும் தாவரங்கள், ரெசின், தேன், கொழுப்பு-எண்ணெய்கள் மற்றும் பதனிடுவதற்குத் தேவையான சாயங்கள் போன்ற சிறிய பொருட்களும் காடுகளிலிருந்து கிடைக்கப்பெறுகின்றன.

ஆண்டுதோறும் காடுகள் வளர்ப்பு விழா ஒன்றை அரசு நடத்திவருகிறது. மேலும் இத்திட்டத்தின் கீழ் உயிரினச் சூழ்நிலை வளர்ச்சிப் பணிப்படை ஒன்றை அரசு அமைத்துள்ளது.

இதைத்தவிர மாணவர்கள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் வளர்ச்சி முகாம்களை நடத்த அரசு ஊக்கமளித்து வருகிறது. இவர்கள் மரம்நடுவிழா, வேலி அமைத்தல் போன்ற பணிகளைச் செய்து வருகின்றனர். நாமும் நம்மைச் சுற்றியுள்ள மரங்களைப் பாதுகாத்து வளர்ப்போம்!

## நிலவள வங்கியின் கடனுதவி

கிணறுகளைத் தோண்டி, பம்பு செட்டுகளைப் பொருத்தும் பணிகளுக்குக் கணிசமான அளவில் கடனுதவி புரிந்துவரும் நிலவள வங்கிகள், தமிழ்நாட்டில் பாசன வசதிகளைப் பெருக்குவதில் சிறப்பான பங்கு வகித்து வருகின்றன. அத்தோடு வேளாண்மையை இயந்திர மயமாக்கும் பணிகளுக்குக் கை கொடுத்து உதவும் நோக்கத்தோடு டிராக்டர்கள் மற்றும் உபகரணங்களை வாங்குவதற்கும் நிதியுதவிகளைப் புரிந்துவருகின்றன.

அதுமட்டுமின்றி, வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டித் தருகின்ற லவங்கம், ரப்பர், முந்திரி, தேயிலை போன்றவற்றின் சாகுபடிக்கும், பழத்தோட்டப் பயிர்களான திராட்சை, எலுமிச்சை, மா, அன்னாசிபோன்றவற்றின் சாகுபடிக்கும் கடனுதவிகள் அளிக்கப்படுகின்றன.

எளிய விவசாயிகளுக்குக் கூடுதல் வருவாய் கிடைக்கச் செய்யும் நோக்கத்தோடு, வேளாண்மை சார்ந்த பட்டுப்பூச்சி வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு போன்ற துணைத் தொழில்கள் நடத்தவும் நிதியுதவிகள் தரப்படுகின்றன.

1983-85ல் 31.6.85 முடிய மாநில நிலவள வங்கி, தொடக்க நிலவள வங்கிகளுக்கு என்னென்ன பணிகளுக்காக எவ்வளவு கடன் வழங்கியது என்னும் விவரம் வருமாறு:

| கடன் வழங்கப்படும் பணிகள் | 1984-85 (31.6.85 முடிய) |
|---|---|
| சிறுபாசனப் பணிகள் | 599,83 |
| நிலத்தைப் பண்படுத்துதல் | 6,81 |
| டிராக்டர்களும்இதரச் சாதனங்களும் | 588:40 |
| இதர இயந்திரங்கள் | 53.56 |
| தோட்டப் பயிர்கள் | 65.37 |
| மற்ற பணிகள் (வளர்ச்சி) | 412.01 |
| முன் கடன் தீர்த்தல் | 6.52 |
| நிலம் வாங்குதல் | 24.22 |
| நீரேற்றுப் பாசனக் கூட்டுறவுச் சங்கங்கள் | ... |
| வேளாண்மை வளர்ச்சி-கிராமீயச் சீரமைப்புத் தேசிய வங்கியால் யோசனை கூறப்பட்ட திட்டங்கள் | 5.45 |
| மின் வாரியத்துக்கு நேரடி நிதியுதவி | ... |
| | 1762.17 |

அறிவியல் சாரம்:

# தாவர விண்வெளி வீரர்கள்

மிக ஆழமான கிணறுகள் தோண்டியதன் மூலம் கிடைத்துள்ள பூர்வாங்கத் தகவல்களைச் சோவியத் புவி-பௌதிக இயலாளர்கள் மிகவும் உயர்வாக மதிப்பிடுகின்றனர். இந்தக் கிணறுகளின் அடித்தளத்திலிருந்து மேலே கொண்டுவரப்பட்ட மாதிரிப் பொருள்கள், பல்வேறு ஆழங்களிலும் பாறைகளின் அமைப்பு, மற்றும் தோற்றம் பற்றிய பழைய கருத்துக்களைவிஞ்ஞானிகள்மாற்றிக் கொண்டு அவற்றிற்குப் புதுமுறையில் விளக்கம் கூறுமாறு செய்கின்றன. அதி ஆழக் கனிப்பொருள் படிவங்கள் மற்றும் அவற்றைச் சக்தி வாய்ந்த முறையில் பயன்படுத்துவது ஆகியவை பற்றிய கருத்தை உருவாக்க இது உதவுகிறது.

பூமியின் மேல் பரப்புப் பற்றி நில அதிர்வு முறை மற்றும் மின்காந்த அலைகள் மூலம் அறிய முடியாத தகவல்களை, அதி ஆழக் கிணறுகளிலிருந்து பெற முடிகிறது. எனவே, நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் அதி-ஆழக் கிணறுகள் தோண்ட முடிவு செய்யப்பட்டது.

இவற்றில் முதலாவது அதி ஆழக் கிணறு வடக்கே கோலாவிலும், இரண்டாவது கிணறு தெற்கே அஜர்பாய்ஜானிலும் உள்ளன. அஜர்பாய்ஜான் கிணற்றின் ஆழம் 8 கிலோ மீட்டருக்கு மேலும் போய் விட்டது. இப்போது மேலும் சில கிணறுகள் தோண்டப்படுகின்றன. உதாரணமாக, உக்ரேனில், இரும்புக் கனிப் பொருள் படிவம் அதிகம் உள்ள கிரிவாய் ரோகில் முதலில் 1000 மீட்டர் ஆழத்திற்குக் கிணறு தோண்டப்பட்டுள்ளது. மொத்தம் 12 கிலோ மீட்டர் ஆழம் இருக்கக் கூடிய இந்தக் கிணறு, இரும்புக் கனிப் பொருள் உருவாவது பற்றிய சித்தாந்தத்தை உருவாக்க உதவும்.





### சூரிய மண்டல நிகழ்ச்சிகளால் பயிர்ப்பூச்சிகள் பெருக்கம்

பயிர்களைப் பாதிக்கும் பூச்சிகள் எப்பொழுது அதிகரிக்கும் என்பதை, விவசாய ஆராய்ச்சிக் கழக நிபுணர்கள் பலர் பதினான்காண்டுகளுக்கு முன்னதாகவே கூறியிருக்கின்றனர். இந்த ஆராய்ச்சியானது, சூரிய மண்டலத்தில் சில ஆண்டுகளுக்கு ஒருமுறை ஏற்படும் நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டது.

''பயிர்களைப் பாதிக்கும் பூச்சிகளின் அளவு, நெடுங்காலமாகவே, திடீர் திடீர் என்று எதிர்பாராத விதமாக அதிகரித்துள்ளது. இந்தப் பூச்சிகள் எப்போது அதிகரிக்கும் என்பதை முன்கூட்டியே அறிந்தால், பயிர்ப் பாதுகாப்புக்கான செலவையும், பூச்சி மருந்துகளால் சுற்றுப்புறச் சூழல் கெடுவதையும் தடுக்க முடியும்'' என்று உயிரியல் நிபுணர் கூறுகிறார்.

பயிர்களைப் பாதிக்கும் பலவிதமான பூச்சி இனங்களுக்குள், தானியப் பயிருக்குப் பேரபாயம் விளைவிக்கும் உண்ணி வகை சோதனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்தப் பூச்சியின் அளவு எப்பொழுது அதிகரிக்கும் என்பதைத் துல்லியமாக முன்கூட்டிக் கூற முடிகிறது.

### தாவர 'விண்வெளி வீரர்கள்'.

விண்வெளியில் இருப்பது போன்ற எடையற்ற நிலையில் செடிகள் வளர்வதற்கான நிலைமைகளை விஞ்ஞானிகள் ஏற்படுத்தியுள்ளனர். பூமியைவிட 100 மடங்கு குறைந்த ஈர்ப்புச் சக்தியோடு கூடிய விண்வெளியில் அமைக்கப்படும் சோதனைக் கூடங்களில் செடிகள் மிகவும் நன்றாக வளர்வதாக அவர்கள் நம்புகின்றனர். உதாரணமாக, முட்டைக் கோஸ் போன்ற 'லெட்யூஸ்' என்ற கீரை 'ஸல்யூத்-7' விண்கலத்தில் 200 நாள் வளர்க்கப்பட்டது. அது பூமியில் வளர்வது போலவே செழிப்பாக வளர்ந்தது.

தாவரங்களின் வரலாற்று ரீதியான பரிணாமத்திற்கும், அவற்றின் வேர்கள், கிளைகள், இலைக்காம்புகள் முதலியவற்றின் வளர்ச்சிக்கும் பூமியின் ஈர்ப்புச் சக்தி முக்கியம் என்று தாவர இயலாளர்கள் நெடுநாளாக நம்பி வந்தனர். எனவே, எடையற்ற நிலையில் செடிகள் எப்படி வளர்கின்றன என்பதை அறிய அவர்கள் ஆவலாக இருந்தனர். ஆனால் பூமியில் அந்தச் சோதனையை நடத்துவது சாத்தியமில்லாமல் இருந்தது.

சோவியத் விண்வெளி வீரர்கள் விண்வெளியில் நீண்ட நாள் பயணம் செய்யத் தொடங்கிய பிறகுதான் இந்தச் சோதனை நடத்துவது சாத்தியமாயிற்று. அதிக நம்பிக்கையூட்டும் தாவர வகைகள் விண்வெளிப் பயணத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டன. அவற்றைக் கொண்டு சோதனைகள் நடத்துவதற்கான கருவிகளைச் சோவியத் விஞ்ஞானிகள் தயாரித்தனர். சோதனையில், ''அராபிடோப்சிஸ்'' என்ற செடியின் விதைகள்தான் முதலில் முளைத்தன. விண்வெளியில் வளர்ந்த இந்தச் செடிகளிலிருந்தே விதைகள் எடுக்கப்பட்டு, இரண்டாம் தலைமுறைச் செடிகள் வளர்க்கப்பட்டன. விண்வெளி உயிரியல் ஆராய்ச்சி தொடர்ந்து நடந்து வருகிறது.





### கனிப்பொருள்கள் எங்கே கிடைக்கும்?

இரத்தினக் கற்கள், விலை உயர்ந்த உலோகங்கள் முதலியவை உள்ள இடங்களைக் கண்டங்களின் விளிம்புகளில் தேட வேண்டும். சோவியத் விஞ்ஞானப் பேரவைப் புவி இயல் நிபுணர்கள் இந்த முடிவுக்கு வந்திருக்கின்றனர். இந்தப் படிவங்களுக்கான விதிக்கு உட்பட்ட ஓர் அமைப்பை அவர்கள் அண்மையில் கண்டுபிடித்தனர். இதற்கு முன் இவை, முற்காலத்தில் கடல்களாக இருந்த பகுதிகளிலும், பள்ளத்தாக்குகளிலும் கண்டுபிடிக்கப்பட்டன. ஆனால், கண்டங்கள் மற்றும் மாக்கடல்கள் சந்திக்கும் இடங்களிலும் இந்தப் பொருள்களின் படிவங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பகுதிகளில் புவி-இயல் நிகழ்ச்சிகள் தீவிரமாக இருப்பதுடன், பாதாளப் பாறைகள் இடையறாது மேலே வந்து கொண்டிருக்கின்றன. தண்ணீர், காற்று முதலியவற்றின் செயல்களால் அழிக்கப்படும் அவை, தங்கள் இரசாயன அமைப்புக்கும் உறுதித் தன்மைக்கும், நொறுங்கும் தன்மைக்கும், உறுதிப்பாட்டுக்கும் ஏற்பப் பல பிரிவுகளாகப் பிரிந்தன. அதிக எதிர்ப்புச் சக்தியுள்ள கனிப்பொருள்கள் வேறு இடத்திற்குச்சென்று படிந்தன.

இந்தக் கோட்பாட்டின்படி, தங்கம், வெள்ளீயம், பிளாட்டினம், வைரம் முதலியவற்றின் படிவங்களையும், அரிய நில-மூலப் பொருள்களையும் விஞ்ஞானிகள் தேடுகின்றனர்.

— சோவியத் சிறப்புக் கட்டுரைகள்



# வென்றிடுவோம் வறுமைதனைக் கூட்டுறவாலே!


**கே. கிருஷ்ணசாமி,**
தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம்,
சென்னை-600 009.


இந்தியா கிராமங்களைக் கொண்ட நாடாகும். கிராமச் சமுதாய முறையில் கிராமப்புறக் குடிசைத் தொழில்கள் அம் மக்களோடு இணைந்ததாகவே விளங்குகின்றன. எனவே, கிராமங்களில் அத்தொழில்களை அதிதீவிர எந்திரமயமாக்குதல் மிகவும் தேவையான ஒன்றாகவே உள்ளது. அதன் மூலம் சமுதாயத்தில் நலிந்த பிரிவு மக்களைப் பேணிக்காத்திட இந்த இயந்திரப் பயன்பாடுகள் உதவிடும்.

கிராமத்தொழில்கள் அதிக வேலைவாய்ப்பு நல்கும் பரம்பரைத் தொழிலாக இருந்து வருகின்றன. சமுதாயத்தில் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர்களால் நடத்தப்படும் தொழில்களில் இடைத்தரகர்களின் செல்வாக்கின் பலம்பெற்றிருந்த காலமும் உண்டு! ஏழைக் கிராமப்புறத் தொழிலாளர்களைக் கசக்கிப் பிழிந்து வேலை வாங்கிய கொடுமையான நாட்களைக் கடந்து கூட்டுறவு மூலம் அனைவரும் ஒன்றாகக் கூடி ஒவ்வொருவரும் மற்றொருவருக்காக உழைக்கின்ற பாசமிகு நட்புணர்வு மூலம் இணைந்து தொழிலாற்றும் வித்தையைக் கற்றுக் கொண்டு விட்டனர்.

திருச்சி மாநகரில் ஆழ்ந்த ஆரவாரம்மிக்க சிங்காரத் தோப்பு பஜார் பகுதியில் அமைந்துள்ளதுதான், திருச்சிராப்பள்ளி தோல் தொழிலாளர் தொழில் கூட்டுறவுச் சங்கம். 1948-ஏப்ரல் மாதம் துவக்கப்பட்டு இன்று வரை ஏழைத்தொழிலாளர் தம் வாழ்வில் ஏற்றமிகு சாதனைகள் மலர்ந்திட ஆக்கப்பூர்வமான உதவிகளை அள்ளித் தந்து வருகின்றது இச்சங்கம். இந்தக் கூட்டுறவுச் சங்கச் செயலாளர் திரு. சோமசுந்தரம் தொழிலாளர் தம் பிரதிநிதியாக இருந்து அவர்தம் பிரச்சனைகளைத் தீர்வு நோக்கில் ஆய்வு செய்யும் தக்கார் ஆவார். கிராமத் தொழில்களே இந்தியாவை வாழ வைக்கும் என்பதிலே நம்பிக்கை கொண்ட இளைஞர் ஆவார்.

''தோல் தொழில் என்பது நிரந்தரமானதல்ல. நிலையாமையும் கூட, தீர்வு காணாத பிரச்சனைகளில் இதுவும் ஒன்று. அவர்களது பிரச்சனைகளைத் தீர்க்க ஒன்று கூடி உள்ளோம். நிரந்தரத்தொழிலும் அதன் மூலமான பொருளாதார மேம்பாடுமே எங்கள் குறிக்கோள்'' என்கிறார் திரு. சோமசுந்தரம்.

1980-'81-ஆம் ஆண்டுகளில் இச்சங்கம் ரூ.3 இலட்சம் பெறுமானமுள்ள தோல் பொருட்களை உற்பத்தி செய்து ரூ. 4.40 இலட்சம் அளவில் விற்பனை செய்து ரூ. 33,420 இலாபம் ஈட்டியுள்ளது. இதே இலாபநிலை 1983-84- வரை நீண்டாலும் இவ்வாண்டில் இலாபம் ரூபாய் 1,02,100 ஆக உயர்ந்திருப்பது மாபெரும் சாதனையாகும்.

இக்கூட்டுறவுச் சங்கம் தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியத்தின் நிர்வாகத்தின் கீழ் மாற்றப்பட்டு, பிறகு இலாபம் கிடுகிடுவென உயர்ந்து வருதலை இதன் சாதனைப் பட்டியல் தெரிவிக்கிறது. இதன் உற்பத்திப் பொருட்களைக் கதர் வாரியம் விற்பனை செய்வதே இலாப உயர்வுக்கான ரகசியமாகும். உற்பத்தியும் உற்பத்தியோடிணைந்த சந்தை வசதியும் அபாரமான விற்பனை நிலைக்களன்களாகும்.

இக்கூட்டுறவுச் சங்கம் மூலம் பெரம்பலூர் வட்டாரத்தில் கீழப்புலியூரில் ஆதிதிராவிடப் பெருமக்களுக்குக் காலணித் தொழிலில் பயிற்சி அளிக்கப்பட்டது.






## 'நாங்கள் அறிந்த மணி'

தொகுப்பாசிரியர்கள்:
என்.ஏ.வேலாயுதம்.
கொடிக்கால் செல்லப்பா,
கு.கோலப்பன்

வெளியீடு: கன்னியாபிரசுராலயம்
143, பாலமோர் விலை
நாகர்கோவில்-629001

விலை: ரூ 10 பக்கம்: 204

சுதந்திரப் போராட்ட வீரரும் திருவிதாங்கூர் தமிழக தமிழ்நாடு இணைப்பியக்க வீரருமான திரு.பி.எஸ்.மணி அவர்களின் தியாகத்தையும், சிறப்பியல்புகளையும் கூறும் நூல்.

ஏற்கெனவே திரு. மணியைப் பற்றி பல பத்திரிகைகள், இதழ்களில் வந்த கட்டுரைகளையும், அவருடைய கடிதப்பைல்களில் இருந்த கடிதங்கள் சிலவற்றையும் தொகுத்து இந்நூலை உருவாக்கி இருக்கிறார்கள்.

நூற்றுக்கு மேற்பட்டோர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கோணங்களில் நூல் நாயகரின் சிறப்பியல்புகளைச் சிலாகித்துச் சிறப்பாக எழுதி இருக்கிறார்கள்.

## காக்கை தந்த வைரமாலை

ஆசிரியர்: சிற்பிசோமு
வெளியீடு: சரவணா பிரசுரம்
2497, தெற்கு ராஜ வீதி
புதுக்கோட்டை-622001

விலை ரூ. 7.50 பக்கம்: 110

பணத்தின் மகிமை, முயற்சியின் பலன், பண்பாடு, நேர்மை, புத்திசாதுர்யம், அன்பு, உழைப்பு வீரம், சாந்தம் போன்றவற்றை மையமாகக் கொண்டு குழந்தைகளுக்காக எழுதப்பட்ட பதினைந்து சிறுகதைகளின் தொகுப்பு இந்நூல். குழந்தைகளுக்கு ஏற்ற வகையில் எளிமையாக-சிறப்பாக எழுதப்பட்டிருக்கிறது.

—ந. குமாரசாமி

## ஈரப்போர்வை

ஆசிரியர்: கவிஞர் செங்கை
மு.அ.கருணாகரன்,

வெளியிட்டோர்: பெரிய நாயகி
பதிப்பகம்,
வட மாடவீதி,
தேவிகாபுரம், வ.ஆ.மாவட்டம்.

விலை ரூ.5 பக்கம்:56

'புதுக்கவிதைப் பூக்களால் செய்த போர்வை' என்ற அறிமுகப் பக்கத்தோடு உருவாக்கப்பட்டிருக்கிற இச்சிறிய நூலில் புதுக்கவிதைகள் மட்டுமேயல்ல; இனிய சில சந்தக் கவிதைகளும் ஆங்காங்கே கண்களுக்குக் குளிர்ச்சியாய்த் தட்டுப்பட்டு கருத்தில் இடம் பிடிக்கின்றன.

சமுதாயப் பிரச்னைகளெல்லாம் அலசப்பட்டுள்ளன. படிக்கலாம்.

## 'தமிழரசு'

### சந்தா விவரம்

தமிழரசு' (தமிழ்)

ஆண்டுச் சந்தா: ரூ 18

அரையாண்டுச் சந்தா: ரூ 9.

'தமிழரசு' (ஆங்கிலம்)

ஆண்டுச் சந்தா: ரூ 9

விவரங்கட்கு:
உதவி இயக்குநர்,
தமிழரசு அலுவலகம்,
செய்தி-மக்கள் தொடர்புத் துறை,
அரசினர் தோட்டம்,
சென்னை-600 002

## 'கிழக்குத் தொடர்ச்சிக் கொலைகள்'

ஆசிரியர்: பட்டுக்கோட்டை
பிரபாகர்,

வெளியீடு: மயிலவன் பதிப்பகம்,
7, எம். கே. அம்மன்
கோயில் தெரு,
மயிலாப்பூர்,
சென்னை-600 004.

விலை ரூ. 6 பக்கம்: 84

வழக்கமான பாதிக்கப்பட்டவர்கள் பழிவாங்கும் கதைதான். ஆசிரியரின் கதைசொல்லும் முறையால் படிக்க முடிகிறது.

பக்கம் ஆறிலிருந்து நான்கு பக்கங்களைச் சற்று பொறுமையோடு தாண்டிவிட்டால் பிறகு தொடர்ந்து படிக்கும் ஆர்வத்தைத் தூண்டும் நடை.

பெயர்க்குழப்பத்தைத் தவிர்த்திருக்கலாம்.

— அ. மருதவிநாயகம்

## காயத்திரியின் காதல்

ஆரிசியர் : கவிஞர் வேதம்

வெளியீடு: காமாட்சி பிரசுரம்
இ-54, ரிசர்வ்வங்கி
குவாட்டர்ஸ்,
பெசன்ட் நகர்,
சென்னை-600 090.

விலை: ரூ. 6.50 பக்கம்: 128

தலைப்பைப் பார்த்ததும் 'நாவலோ' என்று பக்கங்களைப் புரட்டுகிறோம். பிறகு தான் தெரிகிறது இது கவிதைத் தொகுப்பு என்று.

கவிஞர் பல்வேறு சந்தர்ப்பங்களில் எழுதிய கவிதைகள் இந்நூல் முழுவதும் விரவி உள்ளன. அவற்றுள் ஒன்றுதான் 'காயத்திரியின் காதல்' என்னும் நெடுங்கவிதை.

பல கவிதைகளில் கவிஞரின் ஆழ்ந்த சிந்தனை புலப்படுகிறது. 'திருமண வரவேற்பு' என்னும் முதல் கவிதையில், 'வவேற்பு' என்பதற்கு 'வரவு-ஏற்பு' என்று புதுப் பொருள் காட்டுகிறார்.

பாரதிதாசன், இராமகிருஷ்ண பரமஹம்சர், கம்பர், வ.வே.சு. ஐயர், காஞ்சிப் பெரியவர்கள் ஆகியோரும் கவிதை வரிகளில் காந்தமாய்க் கவர்கிறார்கள்.

பாவேந்தரைப் பற்றிக் கூறுகையில்,

''வானோடும் மின்னலைப்
போல்மின்னும் கண்களா
மானையும் பாடியது? இயற்கைத்
தேனையும் தேடியது?''

என்று பாடிக்கொண்டே செல்கிறார் கவிஞர்.

நல்ல கவிதைகள்-நயமான கவிதைகள்.

பி.வி. கிரி.

## 'புண்ணியம் கோடி'

ஆசிரியர் : புலவர் அண்ணாமலை
வெளியீடு: பம்மி பதிப்பகம்
32, வெங்கட்ட
ரங்கம் பிள்ளைதெரு
திருவல்லிக்கேணி
சென்னை-600 005.

விலை ரூ. 6.50 பக்கம்: 88.

இந்நூலில் உள்ள ஆறு நாடகங்களும் சென்னைத் தொலைக் காட்சிக்கு எழுதப்பட்டு ஒளி பரப்பப்பட்டவையாம்.

வாழ்க்கைக் கல்வி நிகழ்ச்சியில் ஒளிபரப்பான இந்நாடகங்களைத் தொகுத்து 'புண்ணியம் கோடி' என்ற புகழ்மிக்க செய்யுள் வரியைத் தலைப்பாக்கி, நூலாக வெளியிட்டுள்ளார்கள்.

வயது வந்தோர் கல்வி, இலவசப் பள்ளி, நோய்த் தடுப்பு ஆகிய கருத்துக்களை ஒவ்வொரு நாடகமும் வலியுறுத்திச் சொன்னாலும், கல்லாமையின் கேடு பற்றியும், கல்வியின் மேன்மை பற்றியுமே இந்நாடகங்களும் அதிகமாக எடுத்துக் கூறுகின்றன.

இவற்றை கிராமங்களில் நாடகங்களாக நடத்தி, அவர்களுக்குக் கல்வியின் மேன்மையையும் மற்றவைகளையும் எளிதாக உணர்த்தப் பயன் படுத்தலாம்.

## 'கூட்டுக்குயில் பாட்டுக்குரல்'

ஆசிரியர் : ய. மணிகண்டன்,
வெளியீடு: தமிழ்க் குடில்
வெளியீடு,
தெற்கு வீதி,
கோவிலூர்,
முத்துப்பேட்டை—
614 704.
தஞ்சை மாவட்டம்.

விலை ரூ. 3.50 பக்கம்: 36.

புதுக் கவிதைகள் பூத்துக் குலுங்கும் இக்காலத்தில் மரபுக் கவிதை வடிவங்களைக் கலந்து, புதுமை - பொதுமைக் கருத்துக்களைப் பாடலாக்கி நூலாக்கித் தந்திருக்கிறார் நூலாசிரியர்.

இந்நூல் ஆசிரியர் மாணவராம். பாராட்டுக்குரிய அரிய முயற்சி. நூலின் அமைப்புகூட அழகாக உள்ளது.

'தமிழாலே அறிவியலைக்
கற்பிக்க வேண்டும்'
'வருங்காலத் தலைமுறைகள்
வளமாக வாழ'
'வருவாயில் ஒரு பகுதி
சேமிக்க வேண்டும்'

'கல்வி காணாத கண்களென்ன
கண்கள்'

என்பன போன்ற வரிகளும் அவை அமைந்த பாடல்களும் நினைவில் நிற்பவை.

படிக்க அலுப்புத் தட்டாத சிறு, சிறு கவிதைகள்.

—என். குமாரசாமி

## 1000 விடுகதைகள்

ஆசிரியர்: முல்லை முத்தையா

வெளியீடு: நியூசெஞ்சுரி புக்அவுஸ்
பிரைவேட் லிமிடெட்,
41-பி, சிட்கோ இண்டஸ்ட்
டிரியல் எஸ்டேட்,
சென்னை-600 098.

விலை: ரூ.10 பக்கம்: 139

'அண்ணனும் தம்பியும் இரண்டு பேர். அவர்களைச்சுற்றிலும் பன்னிரண்டுபேர்'

—இந்தவிடுகதை என்ன என்று உங்களால் ஊகிக்க முடிகிறதா? அதுதான் கடிகாரம். இப்படி இந்நூலில் ஆயிரம் விடுகதைகள் உள்ளன. எல்லாமே படித்து இன்புறத்தக்கன. அறிவுக்கு விருந்தூட்டுவன. குழந்தைகள் மட்டுமல்ல, பெரியவர்களும் படித்து மகிழ வேண்டிய இந்த விடுகதைகளை, திரு முல்லை முத்தையா அகர வரிசைப்படியும், ஒரு வரி விடுகதைகள், இரண்டு வரி விடுகதைகள் என இரு பகுதிகளாகப் பிரித்தும் அழகுறத் தொகுத்துள்ளார்.

இதோ சில விடுகதைகள்:

'ஏழை படுக்கும் பஞ்சணையை
எடுத்துச் சுருட்ட ஆள்இல்லை'
(பூமி)

'தாடிக்காரன் மீசைக்காரன்
கோவிலுக்குப் போனால்
வெள்ளைக்காரன்'
(தேங்காய்)

'எண்ணெய் வேண்டாத
விளக்கு
எடுப்பார் கை விளக்கு'
(மெழுகுதிரி)

—பி. வி. ஜி.

## இரண்டாம் உலக யுத்தம் ஒரு படிப்பினை

ஆசிரியர்: பிரிகேடியர் எஸ்.
கேசவலு எம்.சி.,

வெளியிட்டோர்: நியூசெஞ்சுரி
புக்ஹவுஸ் பிரைவேட்லிமிட்
41,பி. சிட்கோஇண்டஸ்ட்
டிரியல் எஸ்டேட்,
சென்னை-600 098

விலை ரூ.16 பக்கம்: 252

இரண்டாவது உலகப்போர் சமயத்தில் இராணுவத்தில் முக்கிய அலுவலராகப் பொறுப்பு வகித்த நூலாசிரியர், வீரச் செயல்களுக்காக மிலிட்டரி வீரப் (எஸ்.எம்.சி.)பதக்கம் பெற்றவர். எனவே, அந்த அறப்போரில் உயிர் நீத்த தியாகச் சுடர்மணிகளின் புனிதநினைவுக்கு இந்நூலைக் காணிக்கையாக்கியிருக்கிறார்.

இரண்டாம் உலகப்போரின் தொடக்கத்திற்கான காரணம் என்ன, மாஸ்கோவுக்கான போர் எப்படிப்பட்டது, இந்திய இராணுவத்தின் வீரச் செயல்கள் யாவை-இவைகளோடு இட்லரின் வீழ்ச்சி, ஐரோப்பாவின் விடுதலை, இறுதித் தாக்குதல், ஜப்பான் வீழ்ச்சி ஆகியவை பற்றியெல்லாம் தெளிந்த தமிழ்நடையில் இந்நூல் ஆக்கப்பட்டிருக்கிறது.

பாதுகாப்புத் துறை ஆராய்ச்சி மாணவர்கள் மட்டுமல்ல; இராணுவ நடவடிக்கைகள் வரலாறு ஆகியவற்றை அறிந்திடும் ஆர்வம் மிக்கவர்களும் அவசியம் படிக்க வேண்டிய நூல் இது.

'முடிகொண்டான்



# அல்லல் உற்றாரை அரவணைக்கும் அரசு

''வானம் பார்த்த சீமை'' என்று கூறப்படும் பகுதி இராமநாதபுரம் மாவட்டம். மழை பெய்தால்தான் பயிர் விளையும். இந்த நிலை நிலவும் இந்த மாவட்டத்தில் வெண்மைப் புரட்சி, கணவனை இழந்த கைம்பெண் ஒருவர் வாழ்வதற்குக் கை கொடுத்திருக்கிறது.

திணைக்குளம், இராமநாதபுரம் மாவட்டம் திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த சிற்றூர். நாயகம் என்பவரின்





மனைவி பாலநாகம்மாள். கணவன் மறைவுக்குப் பிறகு பாய் முடைந்து, கிடைக்கும் மூன்று ரூபாய் ஊதியத்தில் இரண்டு குழந்தைகளையும் சிரமத்துடன் வளர்த்து வந்தார். வாடிய குழந்தைகள் முகம் காணும் போதெல்லாம் அவர் மிக வாடினார். வாட்டம் போக்கும் வான்மழையாக உதவியது ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்.

திணைக்குளம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தில் பாலநாகம்மாள் உறுப்பினராகச் சேர்ந்தார். 1983-84 ஆம் ஆண்டில் 2000 ரூபாய் பாண்டியன் கிராம வங்கி ரெகுநாதபுரத்தில் கடனுதவி பெற்று ஒருகறவை மாடு வாங்கினார். நாள்தோறும் தீவனச் செலவு போக 5 ரூபாய் கிடைத்தது. மூன்றில் ஒரு பங்கு அரசு மானியத்தையும் அவர் பெற்றார்.

1984-85-ஆம் ஆண்டில் மானியத்தோடு 2500 ரூபாய் இரண்டாவது கறவை மாடு வாங்கக் கடனுதவி கிடைத்தது. கடன் தொகையைத்திருப்பிக்கொடுத்து செலவு போக எட்டு ரூபாய் நாள் தோறும் கிடைக்கிறது. கடன் முழுவதையும் கட்டிவிட்டார். பால் கறந்து கொடுத்து பாலகர்களைக் காப்பாற்றும் பாலநாகம்மாள் 'பால்நாகம்மாள்' ஆகிவிட்டார். எனவே, தன்வாழ்வு வளம் பெற உதவிய தமிழக அரசை, நன்றியோடு வாழ்த்துகிறார்.

### பழுதில்லாத பழ வியாபாரம்

நலிந்தோருக்கு உதவும் நல்ல பல பணிகளை நாட்டுப்புறங்களில் தமிழ்நாடு அரசு செய்து வருகின்றது. அரசு தரும் மானியத்தோடு வங்கியின் உதவியும் சேர, எத்தனையோ ஏழைக் குடும்பங்கள் இன்று இனியவாழ்வு நடத்துகின்றன. இதற்கு இராமநாதபுரம் மாவட்டம், ரகுநாதபுரம் எடுத்துக்காட்டு.

இராமநாதபுரம் மாவட்டம் திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த ரகுநாதபுரம் அழகான ஒரு சிற்றூர். பாலசுப்பிரமணியம் என்பவரின் மனைவி காளியம்மாள் இவ்வூர்வாசி. சிறிய அளவில் பழ வியாபாரம் செய்து வந்தார். செலவு போக அவருக்கு மாதம் வந்த வருமானமோ 150 ரூபாய். ஐந்து பேர் கொண்ட குடும்பத்திற்கு அந்தத் தொகை போதவில்லை. குடும்பத்தில் வேறு யாரும் வேலை பார்க்காததால் குடும்பப் படகு மிகவும் தள்ளாடியது.

அண்ணாவின் வழி நடக்கும் இந்த அரசு செயல்படுத்திவரும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் அப்போது அவருக்குக் கைகொடுத்து உதவியது. ரகுநாதபுரம் பாண்டியன் கிராம வங்கியில் 1000 ரூபாய் கடனுதவி பெற்று பழ வியாபாரத்தைப் பெருக்கினார். இதில் 333 ரூபாய் அரசு மானியம். எல்லாச்செலவும் போக 250 ரூபாய் வருமானம் மாதந்தோறும் கிடைக்கத் தொடங்கியது. 35 ரூபாய் வீதம் மாதந்தோறும் வங்கிக் கடனை நல்ல முறையில் திருப்பிச்செலுத்தி இன்னும் 100 ரூபாய்தான் கட்ட வேண்டியுள்ளது. வீட்டுச் செலவுக்கும் துணிமணிக்கும் கவலையின்றி காளியம்மாள் இருப்பதற்குப் பழுது இல்லாத அவருடைய பழ வியாபாரம் இப்போது மிகவும் உதவுகிறது.

உதவிக்கரம் நீட்டிய தமிழக அரசைத் தன் நெஞ்சாரப் போற்றிப் புகழுகின்றார் அவர்.

**ஜி. டி. மோகன்**
மாவட்ட மக்கள் தொடர்பு
அலுவலர், இராமநாதபுரம்.

# இப்போது! பேன்மின்த்*

(மோரெண்டல் சிட்ரேட்)

## நாக்குப் புழுக்களை அழிக்கிறது.
## நாக்குப் புழுக்கள் உங்கள் லாபத்தை அழிக்கும் முன்பு.



நாக்குப்புழுக்கள்—உங்கள் கண்ணுக்குத் தெரியாத எதிரிகள்.

காலநடையின் வயிற்றிற்குள் நாக்குப் புழுக்கள் வளர்ந்து வாழ்கின்றன. அவை காலநடையின் ஊட்டச் சத்துக்களை உண்ணுகின்றன. இதன் பலனாக காலநடை மெலிந்து, உற்பத்தி குறைந்து விடுகிறது. லாபம் குறைந்து விடுகிறது.

மேய்ச்சல் தளத்திலே காலநடைகள் மேயும்போது நாக்குப் புழுக்கள் தொற்றிப் பரவுகின்றன. அடிக்கடி புழு நோய் வருவதால், நிரந்தரமான, புழுவே அற்ற காலநடைகள் இருக்க வாய்ப்பே இல்லை எனலாம். ஆகவேதான், காலநடை மருத்துவர்கள், 3-4 மாதங்களுக்கொரு முறைப்புழுக்களை அப்புறப்படுத்த வேண்டுமென்று சிபாரிசு செய்கின்றனர்.

பேன்மின்த்
நாக்குப்புழுக்களை அழிக்கிறது
நாக்குப்புழுக்கள் உங்கள்
லாபத்தை அழிக்கும் முன்பாக.

பேன்மின்த், உலகெங்கிலும் காலநடைகளைத்தாக்கும் நாக்குப் புழுக்களை ஒழிக்கிறது.

பேன்மின்த், பாதுகாப்பானது பலகீனமான சோர்வான, காலநடைகளுக்கும், சினையுள்ள மற்றும் கன்று ஈன்ற காலநடைக்கும். இதர சில புழுக்கொல்லிகளை போல் இது, பால் நிறத்தில் மாற்றமோ, தீய விளைவுகளோ ஏற்படுத்தாது. பேன்மின்த் கொடுத்த பின்பும், பாலினைப் பயன்படுத்தலாம்.

இப்போது, பேன்மின்த்
எளிதான வசதியான புழுக்கொல்லி.

உபயோகிக்க எளிதானது பேன்மின்த்—காரணம், உடனடி உபயோகத்திற்கான கரைசல் மாத்திரை, உருண்டை ஆகிய வடிவங்களிலே கிடைக்கின்றது.

கால்நடை மருத்துவரிடம்
ஆலோசனை பெறுங்கள்.

கரைசல் கிடைக்கிறது
100 மி.லி, 500 மி.லி. மற்றும்
4.5 லிட்டர் பேக்குகளில்

சிறிய காலநடைக்கு
மாத்திரைகள்.




பெரிய காலநடைக்கு
உருண்டைகள்.

PF 2166

ஒப்பற்ற **பேன்மின்த்**

புழுக்களை அழித்திடும் ஆரோக்கியம் அளித்திடும்

*யு.எஸ்.ஏ ∴பைஸர் இன்கார்ப்பரேட்டடின் ட்ரேட்மார்க் **pfizer** கேட்பதன் பேரில் மேலும் தகவல்கள கிடைத்திடும்.


# நாடு காத்த படைவீரர்களுக்கு நலப் பணி

**மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன்**

இந்தியத் தாய் திருநாட்டின் எல்லைகளை இரவு பகல் பாராது, வானத்தைத் தொடும் பனிமலைகளின் உச்சிகளிலும், அடர்ந்த, காடுகளிலும், புல் பூண்டுகூடத் தோன்றாத பாலைவனங்களிலும் விண்ணிலும், மண்ணிலும், கடலிலும் கண்ணயராது காத்து நிற்கும் படைவீரர்களுக்கும், வீர மரணம் எய்திய வீரர்களுக்கும், விழுப்புண் ஏந்தி பணி முடித்து திரும்பியுள்ள முன்னாள் படைவீரர்களுக்கும், இவர்களின் தியாகத்தால் நாட்டு மக்கள் நலமுற்று முன்னேற்றப் பாதையில் சென்று வருவதை எண்ணி, அவர்களுக்கு வணக்கம் செலுத்தும் நாளாக ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் திங்களில் 'கொடிநாள்' கொண்டாடப்படுகிறது.

மக்கள் தாமாக முன் வந்து அளிக்கும் கொடிநாள் நன்கொடைகள் முன்னாள் படைவீரர் நல நிதியில் சேர்க்கப்பட்டு அவர்களுக்கெனப் புனர்வாழ்விற்காகவும், குறைகளைத் தீர்ப்பதற்கான பல்வேறு திட்டங்களுக்காகவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. 1984-85-ஆம் ஆண்டு 3100 முன்னாள் படைவீரர்களும் அவர்களைச் சார்ந்தோர்களும் ரூபாய் 7,33,362.90 உதவி பெற்று பயனடைந்தனர்.

தமிழ்நாடு அரசு முன்னாள் படைவீரர் வாணிபக் கழகம் ஒன்றினை ரூபாய் 50 இலட்சம் முதலீட்டுடன் தொடங்க ஆணைகள் பிறப்பித்துள்ளது. இதன் மூலம் படைக்குத் தேவையான பொருள்களை உற்பத்தி செய்ய தொழிற்சாலைகள் நிறுவி அவற்றில் முன்னாள் படையினரையே வேலைக்கு அமர்த்தி இராணுவத்திற்குத் தரமான பொருள்களை தந்திட வழி வகை செய்யவும். முன்னாள் படைவீரர்களுக்கு வேலைவாய்ப்பினைஏற்படுத்திடவும், இராணுவ இரகசியங்கள் பாதுகாக்க ஏதுவாகவும் அமைக்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

படையில் பல பிரிவுகளில் பல்வேறு திறமைகளைப் பெற்று, இந்தியப்படை இளமையாக இருக்க வேண்டும் என்ற கொள்கையால், இளம் வயதிலேயே ஓய்வு பெற்று வரும் முன்னாள் படைவீரர்களின் திறமைகளை ஒருங்கிணைந்து பல்வேறு துறையில் பயன் தரும் திட்டங்கள் இந்த வாணிபக் கழகம் மூலம் செயல்படுத்தப்பட உள்ளது.

ஏற்கெனவே சென்னை மாநகருக்கு மிகவும் தேவையான வாகனங்கள் நிறுத்தும் இடங்களில் அவற்றை மேற்பார்வையிட்டு நெரிசலைக் கட்டுக்குள்ளாக்கி அதே நேரத்தில் வாகனம்நிறுத்த கட்டணம் வசூலித்து சென்னை மாநகராட்சிக்கு வருவாய் ஏற்படுத்தி புன்சிரிப்புடன் பொது மக்கள் மனம் நோகாவண்ணம் பணியாற்றி முன்னாள் படைவீரர்கள் நற்பெயர் எடுத்து வருகின்றனர்.

இதனைக் கண்டு தென்னிந்திய ரயில்வேயும் தங்களின் வாகனம் நிறுத்தும் இடங்களை முன்னாள் படைவீரர்களே மேற்பார்வையிட இயலுமா? எனக் கேட்கும்நிலை உருவாகியுள்ளது.

ரூபாய் 8 இலட்சம் செலவில் சுமார் 260 பெட்டிக்கடைகள் தமிழ்நாடெங்கும் நிறுவப்பட்டு முன்னாள் படைவீரர்களுக்கும், அவர்தம் கைம்பெண்களுக்கும் அளிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் வருவாய் ஈட்டி அவர்கள் தம் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திட வழி வகை செய்யப் பட்டுள்ளது.

தொழில்கள் செய்ய விரும்பி வங்கிகளிலிருந்து கடன்கள் பெற்று தொழிலினைத் தொடங்கும் முன்னாள் படைவீரர்களுக்கு அத்தகைய வங்கிக் கடன்களின் மீதான வட்டிக்கு உதவித்

ஆதரவற்ற முன்னாள் படையினருக்கு ஒவ்வொரு மாதமும் உதவித்தொகை வழங்குதல், திருமண நிதியுதவி, காசநோய் மற்றும் தொழுநோய் மற்றும் புற்று நோய் இவற்றால் அவதியுறும் முன்னாள் படைவீரர்களுக்கு நிதி வழங்குதல் உடனடி உதவி தேவை உள்ளவர்களுக்கு அந்த இடத்திலேயே மானியம் வழங்குதல், வசதியின்றி இயற்கை எய்துவோருக்கு ஈமச்சடங்குகளுக்கு உதவி செய்தல், வெள்ளம், தீ மற்றும் இயற்கைக் கொடுமையால் பாதிப்பிற்கு உள்ளோருக்கு உதவி செய்தல் போன்ற பல நல்ல செயல்களுக்காக இந்நிதி பயன்படுத்தப்படுகிறது.

முன்னாள் படைவீரர் நலத் துறையானது பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி நாடு காத்தோருக்கு நன்மைகள் பெற வழி செய்கிறது. அண்மையில்





தொகை வழங்கிடும் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டில் மட்டும் இத்திட்டத்தின் உதவியோடு 214 முன்னாள் படைவீரர்கள் ரூபாய் 18.75 இலட்சம் வங்கிகள் மூலம் கடன் பெற்றுப் பயனடைந்துள்ளனர்.

1984 டிசம்பர் திங்களில் நடைபெற்ற பொதுத் தேர்தலின்போது ஒரே நாளில் தமிழ்நாடெங்கும் சட்டசபைக்கும், நாடாளுமன்றத்திற்கும் தேர்தல்கள் நடத்தி தமிழ்நாடு சாதனை புரிந்தது. இவ்வாறு தேர்தல் நடத்துவதற்குக் காவல் துறைக்கு உறுதுணையாக 15,000 முன்னாள் படைவீரர்கள் சிறப்புக் காவலராகப் பணிபுரிந்தமை மிகவும் பாராட்டத்தக்கதாகும். இதனைக் கண்டு ஆந்திர மாநிலம் தங்கள் தேர்தல்களின்போது 3,000 முன்னாள் படைவீரர்களை அனுப்பிவைக்க வேண்டியமையும், அதனை நாம் நிறைவேற்றியமையும் பெருமிதத்திற்குரியதாகும். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவற்றை முன்னாள் படை வீரர்கள் தொடர்ந்து எடுத்துக் காட்டாகச் செயல்படுத்தி வருகின்றனர்.

முன்னாள் படைவீரரைச் சார்ந்த பெண்களுக்குத் தையற் பயிற்சி வழங்கிட மாவட்டங்க்ளில் தையல் வகுப்புகள் நடத்தப்படுகின்றன. தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துப் பயிற்சிகளுக்கு மூன்று மாவட்டங்களில் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

போரில் வீரமரணம் எய்திய தமிழ்நாட்டு வீரர்களை நினைவில் கொண்டு நன்றி செலுத்தும் வகையில் அவர்களின் கைம்பெண்களுக்கு ஆண்டுதோறும் ரூபாய் 600 அடையாள உதவித் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. மேலும், அவர்களின் மகள் திருமணத்திற்கு ரூபாய் 1,500 உதவித்தொகையாக வழங்கப்படுகிறது.

போர்களில் வீர விருது பெற்றவரை மதிக்கும் கொள்கையில் ஒவ்வொரு குடியரசு தினத்தன்றும் அரசு விருந்தினர்களாக அவர்களை அழைத்து குடியரசு தின அணி வகுப்பில் அவர்களுக்கு முதலிடம் அளித்து மரியாதை செலுத்தப்படுகிறது. 1984-ல் மகாவீரச்சக்கர விருது பெற்றவர்களையும், 1985-ல் வீரச்சக்கர விருது பெற்றவர்களையும் சிறப்பித்தோம்.

ஆண்டு வருமானம் ரூபாய் 5,000-க்குக் குறைவாக உள்ள முன்னாள் படைவீரர்களின் குழந்தைகள் கல்விச் சலுகை பெறும் வகையில் அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நோய்வாய்ப்படும் முன்னாள் படைவீரர்களை நன்கு கவனித்திடவும், படுக்கை வசதி செய்து தரவும், 12 படுக்கைகள்கொண்ட மருத்துவப் பிரிவுகள் சுமார் 18 இலட்சம் செலவில் 18 வட்டத் தலைமையிடங்களில் உள்ள மருத்துவமனைகளில் கட்டப்பட்டுள்ளன.

ஆதரவற்ற முன்னாள் படைவீரர்களுக்கும், கைம்பெண்களுக்கும் ஆயுட்காலம் வரை உதவித்தொகையாக மாதம் ரூ. 50 வழங்கப்படுகிறது. கண் பார்வை இழந்த முன்னாள்படைவீரர்களுக்கும் மாதம் ரூபாய் 50 வழங்கப்படுகிறது.

1-1-1964-க்கு முன் ஓய்வூதியம் பெற்று பணி முடித்த முன்னாள் படைவீரர்களின் கைம்பெண்கள், ஓய்வூதிய விதிகளின் படி குடும்ப ஓய்வூதியம் பெற இயலாதவர்களாக இருக்கின்றனர். இத்தகையோர் நலன் கருதி 1980 அக்டோபர் திங்கள் முதல் தமிழ்நாட்டில் அத்தகையோருக்கு மாதம் ரூபாய் 50 நிதியுதவி வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டது. 1355 கைம்பெண்கள் பயனடைந்தனர். ரூபாய் 8.04 இலட்சம் செலவிடப்பட்டு வந்தது. தற்போதுஇந்திய அரசு இவர்களுக்குக் குடும்ப ஓய்வூதியம் வழங்க ஆணைகள் பிறப்பித்துள்ளன. தேவையான ஆவணங்களைத் தேடி அலையாமலும், இடைத் தரகர்களைக் கண்டு ஏமாறாமலும், இவர்களைக் காக்க உரிய விண்ணப்பப் படிவங்களை முன்னாள் படைவீரர் நலத்துறையே முழுமையாக எழுதி, உரிய ஆவணங்களை இணைத்து மாவட்டங்களுக்கு அனுப்பி கைம்பெண்களின் கையொப்பம் மட்டுமே தேவை என்ற நிலையில் அவர்களை அழைத்து கையொப்பம் பெற்று உரிய அலுவலகங்களுக்கு அனுப்பி வைத்தனர்.

முன்னாள் படைவீரர் நலன் பேணுவதற்குத் தொடர்ந்து பொருள் வசதி ஏற்படுத்தும் எண்



ணத்துடனும், முன்னாள் படையினருக்கு உதவும் வகையிலும் முன்னாள் படையினர் மாளிகைகள் வேலூர், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம், மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் கட்டப்பட்டுள்ளன. சென்னையில் மிக அழகான முறையில் கட்டடம் கட்டப்பட்டு இவ்வாண்டு ஜூலைத் திங்களில் திறக்கப்பட்டது. மதுரையில் சுமார் 23 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள மாளிகை அக்டோபர் '85-ல் திறக்கப்பட்டது. சிவகாசியில் கட்டுமானப் பணி முடிவுற்றுள்ளது. மற்ற மாவட்டங்களில் இதுபோன்று கட்டடங்கள் உருவாக்கிடத்திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

15 அல்லது 20 ஆண்டுகளுக்கு முன் கல்வி பயின்று படையில் பணியாற்றி இளமையுடன் திரும்பும் படைவீரர்களுக்கு, வேலை வாய்ப்புகளுக்குத் தற்போது கல்வி பயின்று பட்டம் பெற்று வரும் மாணவர்களுடன் போட்டி போட்டு தேர்வுகளில் வெற்றி பெற பயிற்சிகள் நடத்தப்படுகின்றன. இப்பயிற்சிகளின்போது அவர்களுக்கு உதவித் தொகைகளும் அளிக்கப்படுகின்றன.

நாட்டைக் காத்தோரின் நலம் பேணுவதில் நன்றி மறவாத வாரி வழங்கும் வள்ளல்கள் கொடிநாள் நிதிக்கென வாரி வழங்குவதைக் கண்கூடாகக் கண்டு வருகிறேன். படை வீரர்கள் செய்துள்ள விலைமதிப்பற்ற தியாகங்களைக் காணும் போது அவர்களின்நலனுக்கெனச் செலவிடும் தொகை மிகக் குறைந்த அளவே என்பதையும் உணருகிறேன். 1984 கொடி நாளில் ஆறே நாட்களில் சுமார் எட்டு இலட்சம் ரூபாய் வாரி வழங்கிய பெரியார் மாவட்ட மக்களுக்கும் மொத்தத்தில்சுமார் 12 இலட்சம் ரூபாய் வழங்கிய சென்னை மக்களுக்கும் முன்னாள் படைவீரர்களின் சார்பில் நன்றி நவிலுவது நாவினால் மட்டுமல்ல.

நாட்டைக் காக்க, இயற்கைச் சீற்றத்தின்போது மக்களுக்கு உதவ, கட்டுக்கடங்கா வன்முறையின்போது அமைதியை நிலைநாட்டிட, தம் வீரத்தையும், தீரத்தையும் நிலைநாட்டி அஞ்சாமையையும், அயராமையையும் எடுத்துக் காட்டும் தீரச் செயல்களை நினைவுகூரும் வகையில் கொடிநாளில் பொது மக்கள் தங்களால் இயன்றளவில் பெருமளவு காணிக்கை செலுத்திட இந்தத் தருணத்தைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுகிறேன்.

# காவிரி நதிநீர்ப் பங்கீடு

## தமிழக, கர்நாடக முதல்வர்கள் சந்திப்பு

காவிரி நதிநீர்ப்பங்கீடு தொடர்பாக மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களும், மாண்புமிகு கர்நாடக முதல்வர் திரு. ஹெக்டே அவர்களும் சென்னையில் தலைமைச் செயலகத்தில் 23-11-85 அன்று சந்தித்துப் பேசினார்கள்.

தமிழக அரசு சார்பில்-மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன், மாண்புமிகு நீர்ப் பாசன அமைச்சர் திரு ஒய். எஸ். எம். யூசுப், தலைமைச் செயலாளர் திரு டி. வி. அந்தோணி, இ.ஆ.ப. பொதுப் பணித்துறைச் செயலாளர் திரு எச்.பி.என். ஷெட்டி, நீர்ப்பாசனத்துறைத் தலைமைப் பொறியாளர் திரு சீனிவாசன், முன்னாள் தலைமைப் பொறியாளர் திரு. மோகன கிருஷ்ணன் ஆகியோர் இப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டார்கள்.

கர்நாடக அரசு சார்பில், மாண்புமிகு நீர்ப்பாசன அமைச்சர் திரு தேவகவுடா, நீர்ப்பாசனத்துறைச் செயலாளர் திரு கே. சி. ரெட்டி, ஆலோசகர் திரு பலே குந்திரி ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

இந்தப் பேச்சு வார்த்தை, அன்று காலையிலும், மாலையிலுமாக 2 பிரிவாக மொத்தம் 3 மணி நேரம் நடந்தது.

பேச்சுவார்த்தை முடிந்ததும், நிருபர்களிடம் தலைமைச் செயலாளர் திரு டி.வி. அந்தோணி, இ.ஆ.ப. கூறியதாவது:

''இன்றைய பேச்சு வார்த்தைகள் மிகுந்த மனமகிழ்ச்சியோடு நடைபெற்றன. இரண்டு மாநிலங்களுக்கும் தேவையான நீர் அளவுகள் பற்றி தீர்க்கமாகப் பரிசீலிக்கப்பட்டது. மேலும் சில விவரங்கள் ஆராயப்பட வேண்டி இருப்பதால் இன்னொரு தடவை இரண்டு முதலமைச்சர்களும் ஜனவரி மாதம் 4-ந் தேதி கூடிப் பேச முடிவு செய்யப்பட்டது.

''அநேகமாக அந்தப் பேச்சு வார்த்தையும் சென்னையில் நடக்கலாம். பேச்சுவார்த்தைகள் மிகுந்த இணக்கமான முறையில் தான் நடந்தன. அதனால் வரப் போகும் முடிவுகள் மிகவும் நல்ல முறையில் அமையும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. ஆகவே இரு மாநில முதல் அமைச்சர்களும் இந்தப் பேச்சு வார்த்தை முறைகளைத் துரிதப்படுத்தி முடிவு காண விரும்புகிறார்கள்.

''இந்தப் பேச்சின்போது சில கருத்து வேறுபாடுகளின் இடைவெளி குறைக்கப்பட்டது. காவிரி டெல்டா பகுதியில் கால்வாய்களைச் சீரமைத்து நவீனப்படுத்தும் திட்டம், காவிரி ஆற்றில் சிறிய அணைக்கட்டு மின்சார. உற்பத்தித் திட்டங்களை, தமிழக அரசு நிறைவேற்ற எண்ணி இருப்பதும் இந்தப் பேச்சு வார்த்தையில் பரிசீலிக்கப்பட்டது.

''இது தவிர அவசரத் தேவைக்கு தமிழ்நாட்டிலுள்ள சம்பா பயிரைக் காப்பாற்ற கர்நாடகத்தில் இருந்து தமிழ்நாட்டுக்குத் தண்ணீர் விட வேண்டும் என்று தமிழ்நாடு அரசு கேட்டதைக் கர்நாடக முதல் அமைச்சர்அவர்கள் மிகுந்த அனுதாபத்துடன் ஏற்றுக் கொண்டார். இரண்டு நாளில் அதுபற்றி அறிவிப்பதாகவும் கூறியுள்ளார்.''

26.11.85 அன்று இது குறித்து பெங்களூர் திரும்பிய மாண்புமிகு கர்னாடக முதல்வர் திரு இராம கிருஷ்ண ஹெக்டே அவர்கள் செய்தியாளர்களோடு பேசுகையில் - ''காவிரி நதி நீர்ப்பங்கீடு குறித்துத் தமிழ்நாடு அரசோடு நடத்திய பேச்சுவார்த்தையில் எந்தச் சிக்கலும் ஏற்படவில்லை. பிரச்னைகள் பெருமளவில் தீர்ந்து காவிரி நீர்ப் பங்கீடு பற்றிய கருத்து வேறுபாடுகள் எங்களிடையே குறைந்துள்ளன'' என்றார்.

# ஹாலி வால் நட்சத்திரம்

விண்வெளியில் ஹாலி வால் நட்சத்தி ம் மீண்டும் காணப்படுகிறது. 28வது தடவையாகத் தென்படும் இந்த வால்நட்சத்திரத்தைக் காவலூரில் உள்ள வானியல் ஆய்வுக்கூடம் இரண்டுமுறை (ஆக. 29, செப். 3) படம் பிடித்தது.

ஒரு மீட்டர் தொலைநோக்கிக் கருவி மூலம் இந்தப் புகைப்படம் எடுக்கப்பட்டது. இதற்கு முன்பே ஜப்பானில் இந்த வால் நட்சத்திரம் தென்பட்டுள்ளது.

இந்திய வானியல் பௌதிகக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் திரு கே.ஆர்.சிவராமன் இதுபற்றிக் குறிப்பிடுகையில் வால் நட்சத்திரம் ஒரு தலைப்பிரட்டைப் போலக் காணப்பட்டதாகவும் அது தற்போது பூமியிலிருந்து 43 கோடி கிலோ மீட்டர் தூரத்தில், வியாழன்



மற்றும் செவ்வாய்க் கிரக ளின் சுற்றுப் பாதைக்கு இடையே உள்ளதாகவும் சொன்னார்.

அடுத்த ஆண்டு சனவரியில் ஹாலி வால் நட்சத்திரத்தை வெறுங்கண்ணால் பார்க்க முடியும் என்றும் அவர் கூறினார்.

இந்தியாவில் டிசம்பரிலிருந்து ஏப்ரல் மாதம் வரை பைனாகுலர் மற்றும் சிறிய தொலைநோக்கிக் கருவிகளால் (டெலஸ்கோப்) அதைப் பார்க்க முடியும்; எனினும் பிப்ரவரி மாதத்தில் இந்த வால் நட்சத்திரம் சூரியனுக்கு மிக அருகிலிருப்பதால் அதைக் காண இயலாது என்றார்.

ராட்சச ஆச்சரியக் குறிபோலத் தோற்றமுடைய இந்த ஹாலி வால் நட்சத்திரம், ஏறத்தாழ உலகின் எல்லாப் பகுதிகளிலும் தென்படும்.

குறிப்பாகச் சொன்னால் 15 டிகிரி தென் அட்ச ரேகைக்கும் இடைப்பட்ட பகுதிகள் தாம் இதைத் துல்லியமாகப் பார்க்கச் சரியான இடங்கள்.

தென் அமெரிக்கா, தென் ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா ஆகியவை இதில் அடங்கும்.

அதிகாலையில், தென்கிழக்குப் பகுதியில், அடிவானத்தில் சூர்யோதயத்திற்குச் சற்று முன்னால் - அதாவது 90 நிமிடங்களுக்கு முன் இதைப் பார்க்கமுடியும் .

இதற்கு முன்பு 1910-ம் ஆண்டு ஹாலி வால் நட்சத்திரம் தோன்றியது. இந்த வால் நட்சத்திரம் நவம்பர் 27ந் தேதி பூமிக்கு நெருக்கமாக வரும்; அப்போது பூமிக்கும் அதற்கும் உள்ள தூரம் 9 கோடியே 27 லட்சம் கிலோ மீட்டர் ஆக இருக்கும். 1986-ஆம் ஆண்டு ஏப்ரல் 11-ஆம் தேதி அன்றும் பூமிக்கும் வால் நட்சத்திரத்திற்கும் இடையேயான தூரம் 6 கோடியே 28 லட்சம் கிலோமீட்டராகக் குறைகிறது.

இந்திய ஹாலி வால் நட்சத்திர ஆய்வுத் திட்டத்தின் தலைவராகப் பேராசிரியர் சிவராமன் உள்ளார்.

''நாஸா'' சர்வதேச ஹாலி பார்வையாளர் குழுவில் இந்தியாவிலிருந்து இவர் மட்டுமே இடம் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது.






சென்னை - இராமகிருஷ்ணமடம் சாலையிலும், பட்டினப்பாக்கத்திலும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் கட்டியுள்ள வீடுகளை மாண்புமிகு மத்திய நகர்ப்புற வளர்ச்சித்துறை துணை அமைச்சர் திரு தல்பீர்சிங் திறந்து வைத்தார் (24-11-85). மாண்புமிகு நாடாளுமன்றத் துணைச் சபாநாயகர் திரு தம்பித்துரை, மாண்புமிகு தமிழக வீட்டுவசதித் துறை அமைச்சர் திரு நல்லுசாமி, வீட்டுவசதி வாரியத் தலைவர் திரு மணிமாறன் ஆகியோர் பங்கேற்ற அவ்விழாவில் பேசுகையில் ''சென்னை நகரக் குடிநீர்த் திட்டத்திற்காக மத்திய அரசு ரூ. 98 கோடி அனுமதித்துள்ளது'' எனத் தெரிவித்தார் அவர்.



மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் மூலம், சென்னை ரோட்டரி கிளப் அமைப்பின் சார்பில் ரூ. 75 ஆயிரம் பெறுமானமுள்ள காலரா தடுப்பு ஊசி மருந்து வகைகள் சென்னை மாநகராட்சிக்கு நன்கொடையாக வழங்கப்பட்டன (22.11.85).



தமிழ்நாட்டில்-சென்னையிலும் வேறு சில மாவட்டங்களிலும் ஏற்பட்ட வெள்ளச் சேதம் குறித்த படங்கள் 16-11-85 இதழின் அட்டையில் இடம் பெற்றன. அவை சென்னையிலும் பல்வேறு மாவட்டங்களிலும் எடுக்கப்பட்டவை.

> "மக்கள் தொகைப் பெருக்கம்
> மதுவைப் போலக் கேடுபயக்கும்."
>
> மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர்

# 'ஜீவ்ரக்ஷா' விருது பெற்ற முதல் தமிழர்



உயிர்க்காத்த உன்னத பணிக்காக மத்திய அரசால் வழங்கப்படும் உயரிய விருது "ஜீவ்ரக்ஷா" விருது.

இந்த விருது முதன் முதலாகத் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒரு டாக்டருக்குக் கிடைத்துள்ளது.

நீலகிரி மாவட்டம் உதகமண்டலத்தைச் சேர்ந்த ஓமியோபதி டாக்டர் பி.ஏ. காணிக்கராஜுவுக்கு "ஜீவ்ரக்ஷா" விருது வழங்கப்பட்டு உள்ளது. நீலகிரி மாவட்டம் செஞ்சிலுவைச் சங்கத் தலைவராகவும், இந்திய குழந்தைகள் நல கவுன்சில் கவுரவச் செயலாளராகவும் டாக்டர் காணிக்கராஜ் பணியாற்றி வருகிறார். தமிழ்நாடு ஓமியோபதி டாக்டர்கள் சங்கத் தலைவராகவும், மாவட்ட குடும்ப நலத்திட்ட ஆலோசனைக் குழு உறுப்பினராகவும் இவர் உள்ளார்.

புதுடெல்லியில் குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெற்ற சிறப்பு விழாவின் போது இந்தியக் குடியரசுத் தலைவர் மேதகு கியானி ஜைல்சிங் அவர்கள் இந்த விருதினை 1.10.85 அன்று டாக்டர் காணிக்கராஜுக்கு வழங்கினார்.

தமிழகத்தைச் சேர்ந்த ஒருவருக்கு "ஜீவ்ரக்ஷா" என்னும் 'உயிர்க்காப்பாளர்' விருது வழங்கப்படுவது இதுவே முதல்தடவை.

டாக்டர் காணிக்கராஜுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் கடந்த 1983-ஆம் ஆண்டு குடியரசுத் தினத்தன்று "அண்ணா வீர விருது" வழங்கிச் சிறப்பித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

நீலகிரி மாவட்டத்தில் இரு பிரிவினரிடையே ஏற்பட்ட மோதல் ஒன்றில் மூன்று பேர் துப்பாக்கிச் சூட்டில் இறக்க நேரிட்டபோது குற்றுயிராய்க் கிடந்த இளைஞரைத் தன்னுயிரையும் பொருட்படுத்தாது இவர் காப்பாற்றியதற்காக இவ்விருது வழங்கப்பட்டது.

**இரெ. அண்ணாதுரை**
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
உதகமண்டலம்

தமிழரசு வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.

85357


# 'நீர்இன்று அமையாது உலகு'
# எந்நாளும் குடிநீரை சிக்கனமாய் பயன்படுத்திடுவீர்!




சென்னை குடிநீர் வழங்கல்
மற்றும் கழிவு நீரகற்று வாரியம்
1, பம்பிங் ஸ்டேஷன் ரோடு,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை 600 002.
தொலைபேசி : 847176/847874

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23



வரப்புயர நீர் உயரும்,
நீர் உயர நெல் உயரும்,
தொழில் பெருக வளம் பெருகும்,
தொன்று தொட்டு தமிழகத்தில்,
புரட்சித்தலைவர்

டிட்கோ தொடர்ந்து புகழ்பெறும் வண்ணம்,
புதுப் புதுத் தொழில்கள் பெருக
பல திட்டங்கள் தீட்டி செயல்பட்டு வருகிறது.

ஈ.வெ.கி. சுலோசனா சம்பத்
தலைவர்

டிட்கோ

(தமிழக அரசு நிறுவனம்)
735, அண்ணா சாலை, சென்னை-600 002



DIPR/296/85/NAS

# எல்லாரும் எல்லாமும் பெற...

'கூட்டுறவே நாட்டுயர்வு' என்பதனை ஊரும் உலகமும் அறிந்திடும் வண்ணம் ஆண்டு தோறும் கூட்டுறவு வார விழா கொண்டாடப்பட்டு வருகிறது. அந்தவகையில் 32-வது அனைத்திந்தியக் கூட்டுறவு வார விழாவினை யொட்டி, தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் 7.11.85 அன்று செய்தியாளர் பயணத்துக்கு ஏற்பாடு செய்தது. அப்போது, பல கூட்டுறவு அமைப்புக்களுக்கு நேரில் சென்று அதன் தனி அலுவலர்களைச் சந்தித்தபோது பல பயனுள்ள தகவல்கள் கிடைத்தன:

**தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம்:**

வேளாண்மை வளர்ச்சிக்கு உதவி, நுகர்பொருள் வழங்குதல், உற்பத்திப் பொருள் விற்பனை, பழங்குடி மக்கள் மேம்பாடு, நலிந்தோர் வாழ்வு, மாணவர் நலன், மகளிர் நலன் ஆகிய துறைகளில் கூட்டுறவு நிறுவனங்கள் அரும்பணி ஆற்றி வியத்தகு சாதனைகளைச் செய்திருக்கின்றன. இவை தவிர வீட்டு வசதி, கைத்தறித் தொழில், மீன்வளம், கால்நடைப் பராமரிப்பு, பால்வளம், கிராமக் கைத்தொழில், தொழிலியல் மற்றும் சர்க்கரை உற்பத்தி ஆகிய பல்வேறு துறைகளில்கூட்டுறவுப் பணி குறிப்பிடத்தக்கதாக அமைந்துள்ளது.

**தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம்:**

விவசாய விளை பொருட்களை உற்பத்தி மையத்திலிருந்தும், மற்றும் தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படும் பொருட்களை நேரடியாக முதல்நிலை விற்பனை விலைக்கே முறையே தக்க பருவத்திலும் நியாயவிலையில் கொள்முதல் செய்து விஞ்ஞான ரீதியில்சேமிக்கப்படுகிறது. பிறகு உரிய நேரத்தில் திட்டமிட்டு சென்னை, செங்கற்பட்டு, வட ஆர்க்காடு மாவட்ட கூட்டுறவுச் சங்கங்கள் விநியோகம் செய்து அச்சங்கங்களை சில்லறை விநியோகத்தில் சிறப்புடன் பணியாற்ற அரசின் மாபெரும் நிதியுதவியாக ரூ.101.41 இலட்சம் பெற்று இணையம் சென்னையில் மண்டல விநியோக மையம் ஒன்றை அமைத்துள்ளது.

**தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம்**

''டான்ஃபெட்'' விவசாயிகளின் நண்பனாகப் பணிபுரிந்து வருகிறது. தமிழகத்தில் சுமார் 12,000 கிராமங்களில் வாழும் விவசாயப் பெருங்குடி மக்களுக்குக் கிட்டத்தட்ட 4,000க்கு மேற்பட்ட கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் உரிய நேரத்தில் தரமான இரசாயன உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகள் ஆகியவற்றை விநியோகம் செய்து வருகிறது. கழனியில் பட்டபாடு களஞ்சியம் நிறையும் பலனாக மாறி உழவர் குடும்பம் மனமகிழ வேளாண்மை விளைபொருட்களை நியாயமான விலைக்கு வாங்கி வாணிபம் செய்து உதவும் பணியினைத் தனது தலையாய பணியாகக் கொண்டு 25 ஆண்டுகளுக்கு மேலாகத் தனது சேவையினைத் தொடர்ந்து செய்து வருகிறது.

**சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கி**

பள்ளிப் பிள்ளைகள், கல்லூரி மாணவர்களுக்காகவே இவ்வங்கி சமீபத்தில் ஆரம்பித்துள்ள 'கலைமகள் கல்வித் திட்டம்' பெற்றோர்களிடையே பெருத்த வரவேற்பைப் பெற்றுள்ளது. பள்ளி-கல்லூரி திறக்கும் ஜூன் மாதப் பணப் பிரச்சினையில் இருந்து விடுபட இத்திட்டம் பெரிதும் உதவும் என அவர்கள் நம்புகிறார்கள்.

சிறு தொழில் புரிவோர், தினக் கூலி பெறுவோர் அன்றாடம் சிறு தொகை சேர்த்து அதிக வட்டியுடன்திரும்பப் பெற ''முத்தாரம் சிறு சேமிப்புத் திட்டம்'' இதற்கு $10\frac{1}{2}\%$ தினசரி வட்டி அளிக்கப்படுகிறது.

**தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி**

இவ்வங்கி மாநிலக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நேரிடையாக நிதி உதவி அளித்து வருகிறது. மக்களுக்கு அதிக அளவில் வேலை வாய்ப்பு அளிப்பதில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக கைத்தறித் தொழில் உள்ளது. மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி உதவி அளிக்கப்பட்டு வருகிறது.

வங்கி தன் சொந்த நிதியிலிருந்து பெருமளவு தமிழகத்திலுள்ள சர்க்கரை மற்றும் நூற்பாலைகளுக்குத் தேவைப்படும் நீண்ட காலக்கடன்களை அளித்து வருகிறது.

வங்கி மிகவும் நலிவுற்ற பிரிவினருக்காக 'டிஆர்ஐ' திட்டத்தின் 'கீழ் தொழில் தொடங்க கடனுதவி அளித்து வருகின்றது. கடனுதவி தனி நபர் ஜாமீனின் பேரில் வழங்கப்பட்டு வருகின்றது.

**வீட்டுவசதிச் சங்கம்**

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் ஏழை எளியவர்களுக்கு இல்லங்களைக் கட்டித் தருகிறது. கிராமியக் கூட்டுறவு வசதிச் சங்கத்தின் மூலம் பாமரர்கள் பயன் பெறுகிறார்கள். வெள்ளிவிழா ஆண்டில் வீறு நடைபோடும் இச்சங்கம் வீடு கட்ட கடன் உதவிகளைச் செய்து மக்கள் வசதியாக வாழ வழி வகுக்கிறது.

32-வது அனைத்திந்தியக் கூட்டுறவு வார விழா 15.11.85 அன்று சென்னை. பாரதிய வித்யாபவனில் தொடங்கி வைக்கப்பட்டது. அன்றைய தினம் வேளாண்மை உற்பத்தித் திறன் நாளாகக் கொண்டாடப்பட்டது.

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் தலைமை வகித்தார். அப்போது அவர் பேசுகையில் குறிப்பிட்டார்:

''கூட்டுறவு இயக்கமானது எல்லாத்துறைகளிலும் எல்லா வகையிலும் பணியாற்றி வருகிறது. அதுமட்டுமல்ல, பிற மாநிலங்களுக்கு முதன்மையாகவும், மூதல் மாதிரியாகவும் இருந்து வருகிறது. இந்தியத் துணைக் கண்டத்தில் கூட்டுறவு முன்னோடிகள் எங்கே தோன்றி இருக்கிறார்கள் என்றால், அது தமிழ்நாட்டில்தான் என்று அறிஞர் அண்ணா அவர்கள் வகுத்துத் தொகுத்துச் சொன்னார்கள்.

அன்றைய தினம் கூட்டுறவுத் துறையில் சிறந்த தொண்டாற்றியவர்கள் சிறப்பிக்கப்பட்டார்கள். நலிந்த பிரிவினர் 30 பேர்களுக்கு ரூ. 1 இலட்சத்துக்கான கடன் வழங்கப்பட்டது.

நவம்பர் திங்கள் 16, 17, 18, 19, 20 முறையே விற்பனை மற்றும் பொது வினியோக நாள், புதிய 20 அம்சத்திட்ட நாள், நலிந்தோர் நாள், தேசிய ஒருங்கிணைப்பு நாள், மகளிர் மற்றும் இளைஞர் நாள்—நிறைவு விழா என்று கொண்டாடப்பட்டது.

ஒரு வாரம் நடந்த இந்த இனிய விழாவில், அமைச்சர் பெருமக்களும், தமிழறிஞர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்; கூட்டுறவின் அருமை பெருமைகளை எடுத்துரைத்தார்கள்.

மொத்தத்தில் தமிழகம் முழுவதும் நடந்த இந்தக் கூட்டுறவு வார விழா 'எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும்' என்பதனைச் சொல்லாமல் சொல்லியது என்றால் அது மிகையல்ல!

—பி. வி. கிரி

## வெள்ளச் சேதம்: ரூ. 14 கோடியே 65 இலட்சம் தமிழக அரசு உதவி

தமிழ்நாட்டில் கடந்த வாரம் பலத்த மழை பெருவெள்ளம் ஆகியவற்றின் விளைவாக ஏற்பட்ட சாலை அரிப்புகளைச் செப்பனிடுவது, பாசன நீர் ஆதாரங்களைச் சரிசெய்வது முதலிய பணிகளுக்காக முதல் கட்டமாக 14 கோடியே 65 இலட்சம் ரூபாய் செலவிடுவதற்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

துறைவாரியாகச் செலவிடுவதற்காக ஒதுக்கப்பட்ட தொகை விவரம் வருமாறு:

1. இறந்தவர்கள் அல்லது காயமடைந்தவர்கள், சொத்து இழந்தவர்கள் ஆகியோரின் குடும்பங்களுக்கு உதவித் தொகை வழங்குவதற்காக ரூ. 5 கோடி.
2. தொற்று நோய்த் தடுப்பு ஊசி போடுவது, மாத்திரைகள் வழங்குவது ஆகிய பணிகளுக்காகப் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு ரூ. 15 இலட்சம்.
3. பாசன நீர் ஆதாரங்களான குளம், குட்டை, ஏரி போன்றவற்றைச் செப்பனிடுவதற்கு ரூ. 1.5 கோடி.
4. பழுதுபட்ட சாலைகளைச் செப்பனிடவும், துண்டிக்கப்பட்ட சாலைகளை இணைக்கவும் ரூ. 1 கோடி.
5. பழுதுபட்ட நெடுஞ்சாலைகளைச் செப்பனிட்டு மேம்பாடு அடையச் செய்வதற்கு ரூ. 2 கோடி.
6. பழுதுபட்ட சென்னை மாநகரச் சாலைகளைச் செப்பனிடவும் புதுப்பிக்கவும் ரூ. 5 கோடி.



## அரசு ஊழியருக்கு ரூ 600/- வெள்ள முன்பணம்

புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், உள்ளாட்சி அமைப்புக்களின் பணியாளர்கள் ஆகியோருக்குத் தலா அறுநூறு ரூபாய் வீதம் வெள்ள முன் பணம் உதவி அளிக்கத்தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இதன் மூலம் இரண்டு இலட்சம் பேர்களுக்கு இந்த முன்பணம் உதவி கிடைக்கும். இதன் காரணமாக அரசுக்கு 12 கோடி ரூபாய் அளவுக்குச் செலவாகும்.

மேற்கண்ட தகவலைத் தமிழக அரசின் நிதித் துறைத் தனிச் செயலர் திரு சி.ராமச்சந்திரன் 18.11.85 அன்று தலைமைச் செயலகத்தில் நிருபர்களிடம் தெரிவித்தார். இது குறித்து மேலும் அவர் கூறியதாவது:

''வெள்ள நிவாரண முன் பணம் சம்பந்தமான அரசு உத்தரவு ஒன்று பிறப்பிக்கப்பட்டது. அரசு அலுவலர்களின் ஊதியக் குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்ட பிறகு மாத அடிப்படையில் சம்பளம் ஆயிரத்து எண்ணூறு ரூபாய்க்கு மேற்பட்டவர்களுக்கு இந்த முன் பண உதவி கிடைக்காது. மற்றப் பிரிவு அலுவலர்களுக்கு அறுநூறு ரூபாய் கிடைக்கும்.

''துப்புரவுத் தொழிலாளர் போன்ற முழுநேரம் அல்லாத-ஆனால் அரசுப் பணியில் உள்ளவர்களுக்கு முன்னூறு ரூபாய் அளிக்கப்படும். அறுநூறு ரூபாய் முன்பணம் பெற்றவர்கள் பத்து மாதாந்தர தவணைகளில் இந்தத் தொகையைத் திருப்பிச் செலுத்திவிட வேண்டும். மற்றவர்கள் பனிரெண்டு மாதத் தவணைகளில் செலுத்தும் வகையில் சம்பளம் பிடித்தம் செய்து கொள்ளப்படும். இந்த முன் பணத்தை இம் மாதம் வாங்கினால் அடுத்த மாதச் சம்பளத்திலிருந்து முதல் தவணை பிடித்தம் செய்து கொள்ளப்படும்.

''சென்னை மாவட்டம், செங்கற்பட்டு மாவட்டம் ஆகியவற்றிலுள்ள அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், உள்ளாட்சி அமைப்புக்களில் பணியாற்றுவோர் ஆகியோருக்கு இந்த முன் பண உதவி கிட்டும். தென்ஆர்க்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரையில் கடலூர், சிதம்பரம், பண்ருட்டி, காட்டுமன்னார்கோவில், விருத்தாசலம், உளுந்தூர்ப்பேட்டை, விழுப்புரம், திண்டிவனம், வானூர் ஆகிய வட்டங்கள் பாதிப்புக்கு ஆளாகி இருந்ததால் அங்கு பணியாற்றும் அரசு அலுவலர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இந்த முன் பணம் வழங்கப்படும்.

''தஞ்சை மாவட்டத்தில் திருத்துறைப்பூண்டி, மன்னார்குடி, வேதாரண்யம், நாகப்பட்டினம், திருவாரூர், நன்னிலம், தரங்கம்பாடி, சீர்காழி, கும்பகோணம், பட்டுக்கோட்டை, திருவிடைமருதூர், குடவாசல் ஆகிய வட்டங்களில் உள்ள அரசு அலுவலர்களுக்கும் இந்த முன் பணம் கிடைக்கும்'' என்று அரசு உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.